உதயன்

23



www.onlineuthayan.com

28 பக்கங்கள் சுடர் 28 கதிர் 008 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 19 செவ்வாய்க்கிழமை (04/12/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00

# மாணவரின் விடுதலை கோரி இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்

## பொது அமைப்புகள், அரசியல் கட்சிகள் குவிகின்றன

கொழும்பு, டிசெம்பர் 4

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது இராணுவமும், பொலிஸாரும் இணைந்து நடத்திய தாக்குதலின் பின்னர் மாணவர் ஒன்றியச் செயலாளர் உட்பட கைது செய்யப்பட்ட நான்கு மாணவர்களையும் விடுவிக்கக் கோரி குடாநாட்டில் இன்று மாபெரும் போராட்டம் இடம்பெறவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்தப் போராட்டத்தை பொது அமைப்புகளும் தெற்கைச் சேர்ந்த கட்சிகளும் இணைந்து நடத்தவுள்ளன.

யாழ். நகரில், பஸ் நிலையம் முன்பாக, முற்பகல் 11 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

எதுவித வேறுபாடுகளுமின்றி தமிழ் மக்களது உரிமைகளுக்காகக் குரல் கொடுக்க அனைவரையும் அணிதிரளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

இன்று நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டத்துக்கு பல்வேறு சமூக அமைப்புகளும் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன.

பொது அமைப்புகள் பலவும் தாம் இந்த ஜனநாயகப் போராட்டத்தில் கட்சி பேதமின்றிக் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவித்துள்ளன.

மாவீரர் தினத்தன்று யாழ். பல்கலைக்கழக மாணவர் விடுதிகளுக்குள் அத்துமீறி நுழைந்த இராணுவத்தினரும், புலனாய்வுப் பிரிவினரும் மாணவர்களை அச்சுறுத்தி இருந்தனர். அதனைக் கண்டித்து மாணவர்கள் மறுநாள் நடத்திய அமைதியான ஆர்ப்பாட்டத்தின் போது மாணவர்களை படையினரும் பொலிஸாரும் கண்மூடித்தனமாகத் தாக்கினர்.

இதன் தொடர்ச்சியாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் பரமலிங்கம் தர்சானந், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் கனகசுந்தரசுவாமி ஜெனமேஜெயன், விஞ்ஞானபீட மாணவர் ஒன்றிய உறுப்பினர் சண்முகம் சொலமன், மருத்துவபீட மாணவன் கணேசமூர்த்தி சுதர்சன் ஆகியோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இதனால் பல்கலைக்கழகச் செயற்பாடுகள் முற்றாக

பார்க்க பக்கம் 4

## பல்கலை ஆசிரியர்களும் ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், டிசெ.4

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டமை, கைது செய்யப்பட்டமை ஆகியவற்றைக் கண்டித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இணைந்து இன்று நடத்தும் ஆர்ப்பாட்டத்துக்கு யாழ். பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் பூரண

பார்க்க பக்கம் 4

## நாடு முழுவதும் தொடர் போராட்டங்கள்

கொழும்பு, டிசெ.4

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்தும், கைது செய்யப்பட்ட நான்கு மாணவர்களை உடனடியாக விடுவிக்கக் கோரியும் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் பேரவை மற்றும் சோஷலிஸ மாணவர் சங்கம் ஆகியன இணைந்து நாளை மறுதினம் முதல் நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு நியாயமான தீர்வு

பார்க்க பக்கம் 4




கைதுசெய்யப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்களை விடுவிக்கக் கோரியும் பல்கலைக்கழக நடவடிக்கைகளில் இராணுவத் தலையீட்டை நிறுத்தக் கோரியும் கிழக்குப் பல்கலைக்கழக மூவின மாணவர்களும் பல்கலை வளாகத்தினுள் நேற்றுக்காலை ஆர்ப்பாட்டம் நடத்தியபோது.....

## பல்கலைக்கழகம் வெறிச்சோடியது; சிங்கள மாணவர்கள் வெளியேற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 4

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பொலிஸாராலும் படையினராலும் தாக்கப்பட்ட பின்னர் ஏற்பட்ட பதற்றச் சூழல் நிலையால் அங்கு வகுப்புகளுக்கு மாணவர்கள் எவரும் நேற்று சமுகமளிக்காததனால், பல்கலைக்கழக வளாகம் வெறிச்சோடிக் கிடந்தது.

பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியிருந்த மாண

பார்க்க பக்கம் 4

## கைதான மாணவர்கள் வவுனியாவிலேயே தொடர்ந்தும் தடுப்பு

வவுனியா, டிசெ. 4

கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரின் காவலில் வைக்கப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரும் நேற்று மாலை வரை வவுனியாவிலேயே தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

வவுனியாவில் உள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அலுவலகத்துக்குச் சென்ற

பார்க்க பக்கம் 4

## ஒரு மணி நேர பணி இடைநிறுத்தத்துக்கு கூட்டமைப்பு இளைஞர் அணி அழைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 4

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்பதற்காகவும் தமிழ் மக்களின் உரிமைகளை மீட்டெடுப்பதற்காகவும் இன்று நடைபெறும் சாத்வீகப் போராட்டத்தில் அனைத்துத் தரப்பினரையும் உணர்வு பூர்வமாகப் பங்கெடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இளைஞர் அணி அழைப்பு விடுத்துள்ளது.

முற்பகல் 11 மணிமுதல் நண்பகல் 12 மணிவரையான ஒரு மணி நேரத்தில் வடக்கு - கிழக்கில் உள்ள

பார்க்க பக்கம் 4

## அவசர சந்திப்புக்கு ஜனாதிபதி கூட்டமைப்பினருக்கு அழைப்பு

கொழும்பு, டிசெ.4

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அவசர சந்திப்பொன்றை நடத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார். இதற்கான அழைப்பு நேற்றைய தினம் கூட்டமைப்பிற்கு விடுக்கப்பட்டுள்ளது.

இடையில் நின்று போயிருக்கும் அரசியல் தீர்வு முயற்சிகள் தொடர்பில் சர்வதேச சமூகம் அழுத்தங்களைக் கொடுத்து வரும் ஒரு சூழ்நிலையில், அரசியல் தீர்வுப்

பார்க்க பக்கம் 4

அரிய சந்தர்ப்பம் கைநழுவப் போகின்றது

ஆஸ்திரேலியா 5 வருட குடும்பவிசா ஆலோசனை
இறுதிநாள் 15.12.2012

* பட்டதாரிகள் (Skill migration) இலகுவில் ஆஸ்திரேலியா செல்லலாம்
* Visit Visa, Sponsor உறுதி மொழியுடன் செய்து தரப்படும்.



திசைகாட்டி பிறைவேற் லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(26041)(3.14) 0212219016



## மாணவர்கள் விடுதலையாகும் வரை கல்வி நடவடிக்கை சாத்தியமில்லை

### பல்கலை நிர்வாகத்துக்கு ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.4

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நான்கு மாணவர்களும் விடுவிக்கப்படும் வரை யாழ். பல்கலைக்கழகத்தில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் எவற்றையும் முன்னெடுக்க முடியாது. இதனைப் பல்கலைக்கழக நிர்வாகம் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு வலியுறுத்த வேண்டும். இவ்வாறு அறிவித்துள்ளது யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்.

யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற அசம்பாவி

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரன் உயிருடன் இல்லையா? சபையில் புதிய பரபரப்புத் தகவல்

## இன்னமும் நிரூபிக்கப்படவில்லை என்றார் சிறிதரன் எம்.பி.

பிரபாகரன் உயிருடன் இல்லை என்பது இன்னும் விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் நேற்று நாடாளுமன்றில் தெரி வித்தார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற நீர்வழங்கல் வடிகாலமைப்பு மற்றும் நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவம் ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியவை வருமாறு:-

யாழ்ப்பாணகப் பல்கலைக் கழக மாணவர்கள் துன்புறுத்தப்பட்டுள்ளனர். எவ்வித அறிவித்தலுமின்றி நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நள்ளிரவு, அதிகாலை வேளைகளிலேயே அச்சுறுத்தப்பட்டு பயங்கரவாதிகளைப்போல் மாணவர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலும் பல மாணவர்கள் தேடப்படுகின்றனர். நள்ளிரவு வேளைகளில் ஏன் மாணவர்களைக் கைதுசெய்யவேண்டும்? எவ்வித அறிவித்தல்களும் இல்லாமல் கைதுசெய்வதை என்னவென்று சொல்வது? இவ்வாறான சம்பவங்களால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இன்று அல்லோலகல்லோலப்படுகின்றது.

அதேவேளை, 1990ஆம் ஆண்டளவில் இந்தியப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டது. அதில் உலகத்தில் பலம்மிக்க மூன்று (கெரில்லா) படைத்தலைவர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. நெல்சன் மண்டேலா, யசீர் அரபாத், வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆகியோரின் பெயர்களே இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தன.

நெல்சன் மண்டேலா தனது தேசத்திற்கு ஏற்கனவே சுதந்திரம் பெற்றுக் கொடுத்துள்ளார்.

யசீர் ஹரபாத்தின் உடல் தோண்டப்பட்டு ஆராயப்படும் நிலையில், பலஸ்தீனத்துக்கு ஐ.நாவின் அந்தஸ்து கிடைத்துள்ளது. (அங்கத்தவரல்லாத பார்வை யாளர் அந்தஸ்து) அத்துடன், பிரபாகரன் இல்லை என்பது இன்னும் விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படவில்லை - என்றார்.



யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கி சென்ற தனியார் பஸ்ஸும் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த இ.போ.ச பஸ்ஸும் நாவற்குழி பாலத்துக்கு அருகே நேற்றுக் காலை நேருக்கு நேர் மோதிக் கொண்டன. இந்த விபத்தில் 4 பேர் காயமடைந்தனர்.

# நீதித்துறை சுயாதீனத்தை பாதுகாக்க புதுக்கடையில் இன்று அணி திரளுக

## நாகவிகாராதிபதி அழைப்பு

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணைக்கு எதிராக களத்தில் இறங்குகிறார் நீதித்துறை சுதந்திரத்துக்கான கூட்டமைப்பின் ஏற்பாட்டுக் குழுத் தலைவரும் கோட்டை நாக விகாராதிபதியுமான மாதுலுவாவே சோபித தேரர்.

புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் இன்று இடம்பெறும் இந்தப் போராட்டத்தைத் தடுத்து நிறுத்த எந்தச் சக்திகள் நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், போராட்டத்தில் பங்குகொள்ளும் எவரும் அந்த இடத்தைவிட்டு அகலக்கூடாது என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கொழும்பு கோட்டை நாகவிகாரையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே விகாராதிபதி மாதுலுவாவே சோபித தேரர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

திவிநெகும சட்டமூலத்திற்கு நீதிமன்றத்தினால் அனுமதி கிடைக்காததால் பிரதம நீதியரசருக்கு எதிராகக் குற்றப்பிரேரணை கொண்டு வருவது நீதித்துறையின் சுதந்திரத்தில் தலையிடுவதாகும் என்பதே எனது கருத்தாகும்.

இந்தக் குற்றப் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும், பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டார நாயக்கவுக்கு ஆதரவு தெரிவிக்கவும் போராட்டத்தில் சகல மக்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறேன்.

இந்தப்பேராட்டத்துக்கு எதிராகத் தடையேற்படுத்தும் வகையில் தண்ணீர்ப் பீச்சியடிக்கும் நடவடிக்கைகளேதும் மேற்கொள்ளப்பட்டால், அவற்றை அனைவரும் அமைதியாக எதிர்கொண்டு அவ்விடத்திலேயே அமர்ந்து கொண்டு எதிர்ப்பைக் காட்டுமாறு கேட்டுக் கொள்கின்றேன். நிறைவேற்று ஜனாதிபதி முறைமையின் கீழ் நீதித்துறைக்கு ஏற்பட்டுள்ள கேடுகளைச் சுட்டிக்காட்டி அவற்றைத் தடுப்பதற்குரிய முயற்சிகளை எடுப்பதே இந்தப் போராட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

முன்னாள் நீதியரசர் நெவில் சமரக்கோனுக்கும் இந்தக் கதியே ஏற்பட்டது. இவர் தமது விருப்பத்திற்கேற்ப நீதிமன்றத் தீர்ப்பை வழங்காததால் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தன தமது அதிகாரத்தைப் பாவித்து இவரைத் தூக்கியெறிந்தார்.

இன்று ஏற்பட்டுள்ள நீதித்துறைச் சிக்கல்களுக்கு மன்னார் நீதிமன்ற வளாகத்தில் ஏற்பட்ட சம்பவமும் ஓர் அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது.

ஜனாதிபதியின் நேரடி உத்தரவின் பேரிலேயே இந்தக் குற்றப் பிரேரணை கொண்டு வரப்பட்டது. இதற்குமுன் உலகில் எங்கேயும் நடைபெறாத புதுமையான வழக்கு இதுவாகும். வழக்கைத் தாக்கல் செய்பவர், வழக்கைக் கேட்பவர், தீர்ப்பளிப்பவர், தண்டனை கொடுப்பவர் எல்லோருமே ஒருபக்கச் சார்பானவர்கள் என்பதுவே இதிலுள்ள விசித்திரமாகும்.

இவர்களின் தீர்ப்பு ஏற்கனவே அறிந்ததுதான். பத்து கொலைகளைச் செய்த கொலையாளிக்குக் கூட தனது பக்க நியாயத்தை எடுத்துக் கூறுவதற்கு இரண்டு மாத கால அவகாசம் கொடுக்கப்படும். ஆனால் இந்நாட்டின் நீதியரசருக்கு தமது பக்க நியாயத்தைக் கூறுவதற்கு கொடுத்தது ஒருவார காலம்தான் - என்றார்.

# மன்னாரில் இன்று உண்ணாவிரதப் போர்

## வீட்டுத் திட்டத்தில் பாரபட்சத்தை கண்டித்து

யாழ்ப்பாணம், டிசெ.4

இந்திய வீட்டுத் திட்டத்தின் பயனாளிகள் தெரிவில் பராபட்சம் காட்டப்பட்டுள்ளதாகத் தெரிவித்து இன்று செவ்வாய்க்கிழமை 7 மணி நேரம் உண்ணாவிரதப் போராட்டம் மன்னார் பொது நுலகம் முன்பாக இடம்பெறவுள்ளது.

மன்னார் பிரஜைகள் குழு மன்னார் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், காணி உரிமைகளுக்கான மக்கள் கூட்டமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

போரின் போது இடம்பெயர்ந்து பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கு இந்திய அரசால் நன்கொடையாக வழங்கிய வீட்டுத் திட்டம் பயனாளிகள் தெரிவில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதைக் கண்டித்தும் இடம்பெயர்ந்து தொழில் துறைகளை இழந்த மீனவர்களுக்கு இந்திய அரசினால் வழங்கப்பட்ட உபகரணங்கள் வழங்குவதில் காட்டப்படும் பாகுபாட்டை எதிர்த்தும் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**இந்திய அரசினால் வழங்கப்பட்ட உபகரணங்கள் வழங்குவதில் காட்டப்படும் பாகுபாட்டை எதிர்த்தும் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

மன்னார் பொது நூலகம் முன்பாக காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்தில் மன்னார் மாவட்டத்தின் சகல பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட குடும்பங்கள், மதத் தலைவர்கள், அரசியல் கட்சியின் தலைவர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-12-14)

# மாணவர்களை விடுவியுங்கள் மருத்துவர்களும் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.4

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நான்கு பேர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் யாழ்ப்பாண அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் வருத்தம் தெரிவித்துள்ளது. அவர்களை உடன் விடுவிக்குமாறும் அது கோரியுள்ளது.

இது தொடர்பில் சங்கம் அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் உட்பட நான்கு மாணவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறித்து யாழ்ப்பாண அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

இதனால் பல்கலைக் கழகத்தின் கற்பித்தல் செயற்பாடுகளும் அனைத்து மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளும், மனநிலையும் மோசமாகப் பாதிக்கப்படுவது குறித்து எமது கவலையைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் விரைவாகச் செயற்பட்டு இந்த மாணவர்களை உடனடியாக விடுதலை செய்வதன் மூலமாக யாழ். பல்கலைக்கழகத்தின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் சுமுகமாக நடைபெற நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (த-4)

# மருத்துவபீட மாணவர் போராட்டம் உறுதிமொழியால் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெ.4

கைது செய்யப்பட்ட மருத்துவபீட மாணவர் இன்று விடுவிக்கப்படவுள்ளதாகவும், அதனால் போராட்டங்கள் மேற்கொள்ள வேண்டாம் எனவும் மருத்துவ பீட பீடாதிபதி உறுதியளித்ததைத் தொடர்ந்து மருத்துவ பீட மாணவர்களின் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் 4 பேர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த முதலாம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த மாணவர்களை விடுவிக்குமாறு கோரி யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் நேற்றுக் காலை கவனயீர்ப்புப் போராட்டமொன்றை மருத்துவபீட வளாகத்தில் ஏற்பாடு செய்திருந்தனர்.

அந்த நேரத்தில் சம்பவ இடத்துக்கு வந்த மருத்துவ பீட பீடாதிபதி வைத்தியர் பாலகுமார்,

கைது செய்யப்பட்ட மருத்துவபீட மாணவரான உரும்பிராயைச் சேர்ந்த கணேசமூர்த்தி சுதர்சனை நாளை (இன்று) விடுதலை செய்வதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது.

எனவே நீங்கள் போராட்டம் செய்தால் அது படைத்தரப்பினரை வெறுப்பேற்றும் செயலாக அமைந்து விடும். அதனால் விடுதலையையும் பாதித்து விடும் என்பதால் போராட்டத்தைக் கைவிட வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதனையடுத்து மருத்துவபீட மாணவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர். அத்துடன் மருத்துவபீட மாணவன் விடுவிக்கப்படாவிட்டால் தமது போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக மருத்துவபீட பீடாதிபதியை நேற்று மதியம் தொடர்பு கொள்வதற்காக அவரது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டபோது, அவர் அங்கு இல்லை என்று தகவல் தெரிவிக்கப்பட்டதுடன் அவரது கையடக்கத் தொலைபேசி இலக்கத்தையும் வழங்க அங்கிருந்தவர்கள்மறுத்துவிட்டனர். (கு-5-4)

# மாணவி தூக்கில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ.4

பாடசாலை மாணவி ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று ஐயனார் வீதி, சண்டிலிப்பாயில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி பயிலும் தாமோதரம்பிள்ளை தமிழினி (வயது-16) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முதல்நாள் இரவு உறங்கச் சென்ற குறித்த மாணவி அதிகாலையில் பெற்றோர் கண்விழித்துப் பார்த்தபோது பக்கத்து அறையில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து மானிப்பாய்ப் பொலிஸார் விசாரணைகளை நடத்தினர். (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருவாட்டுக் கடையில் திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ.4

யாழ்.நகரப் பகுதியில் உள்ள கருவாட்டு விற்பனை நிலையத்தில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

இங்கிருந்து சுமார் 50 ஆயிரம் ரூபாவுக்கும் அதிக பெறுமதி வாய்ந்த கருவாடுகள் திருட்டுப் போயுள்ளன. கொட்டடி மீன் சந்தைக்கு அருகில் உள்ள கருவாடு விற்பனை நிலையத்திலேயே திருட்டு இடம்பெற்றுள்ளது. (ம-17)

## ஆசிரியர்களுக்கு செயலமர்வு

தென்மராட்சி,டிச.4

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான தரம் 3 வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் நாளைமறுதினம் தொடக்கம் வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளன.

நாளை மறுதினம் சுற்றாடல் சார் செயற்பாடுகள் செயலமர்வும், எதிர்வரும் 8 ஆம், 10 ஆம் திகதிகளில் அழகியற்பாட செயற்பாடுகள் தொடர்பான செயலமர்வும் இடம் பெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தெரிவித்துள்ளார். (ம-9)

# அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை

### நகுலேஸ்வரம் மக்கள் மாவை.எம்பியிடம் முறைப்பாடு

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்விநியோகம் கிடைக்கவில்லை. மீளக்குடியமர்ந்த எமக்கு அடிப்படை வசதிகள் ஒழுங்காகச் செய்து தரப்படவில்லை. பெரும் இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றோம்.

நகுலேஸ்வரம் பகுதி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை இசேனாதிராசாவிடம் இவ்வாறு முறையிட்டுள்ளனர்.

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயப்பகுதியாக இருந்து மக்கள் மீளக்குடியமர்வுக்கு விடுவிக்கப்பட்ட நகுலேஸ்வரத்துக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா நேற்று சென்றிருந்தார்.

அங்கு பொது மக்களுடனான சந்திப்பு ஒன்று நகுலேஸ்வரம் பொது நோக்கு மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதில் வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தனும் கலந்து கொண்டார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட அந்தப் பகுதி மக்கள், தாம் மீள்குடியமர்ந்து நீண்டகாலமாகியும் வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் மின்சாரம் இன்னமும் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தனர்.

> மீள்குடியமர்ந்து நீண்டகாலமாகியும் வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் மின்சாரம் இன்னமும் வழங்கப்படவில்லை

அத்துடன் அடிப்படை வசதிகள் கூட இன்னமும் ஒழுங்காக ஏற்படுத்தித்தரவில்லை என்றும் குற்றஞ்சாட்டினர்

இதன் போது வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சார விநியோகம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதுடன் , மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் கவனத்துக்கும் கொண்டு செல்வதாகவும் மாவை எம்.பி உறுதியளித்துள்ளார். (ம-5)

## தம்பகாமத்துக்கு 'லக்ஸபான'

பளை, டிசெ.4

பளை தம்பகாமம் பிரதேசத்துக்கான வடக்கின் வசந்தம் திட்ட லக்ஸபான மின்சார விநியோகம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தம்பகாமம் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த மின் மாற்றி மூலம் பொருத்தப்பட்ட மின் ஆளியை நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் அழுத்தி தம்பகாமம் பிரதேசத்துக்கான மின் விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார்.

வடக்கின் வசந்தம் திட்ட மின் பொறியியலாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பளைப் பிரதேச செயலர் மற்றும் இலங்கை மின்சார சபையின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

பளைப் பிரதேச செயலகம் ஊடாக வழங்கப்பட்ட மின் வழங்கல் படிவங்களை வழங்கிய 30 இற்கு மேற்பட்ட குடியிருப்புகளுக்கு நேற்று முன்தினம் மின் இணைப்பு வழங்கப்பட்டது.

மின் இணைப்பு பெற விரும்பும் குடியிருப்பாளர்கள் பிரதி செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் பளை பிரதேச செயலகத்தில் மின் விநியோக படிவங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## பொதுசன மாதாந்த உதவிப்பணம் டிசெம்பர் கொடுப்பனவு நாளைவரை

தென்மராட்சி,டிசெ.4

தென்மராட்சி பிரதேச பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான டிசெம்பர் மாதக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்ட காலக்கெடு நாளை வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

டிசெம்பர் மாதத்துக்குரிய கொடுப்பனவுகள் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருந்தும் ஒரு சிலர் இதுவரை பெற்றுக் கொள்ளவில்லை என்று அஞ்சல் அதிபர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து நாளை வரை காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்ட 70 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கான நவம்பர் மாதக் கொடுப்பனவு எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் அஞ்சல் அலுவலகங்கள் மூலம் வழங்கப்படவுள்ளது.

கொடுப்பனவுக்கான அட்டை தயாரிக்கும் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று முடிவடையும் தறுவாயில் உள்ளன.

நாளை அட்டைகள் அந்தந்த கிராம அலுவலர்களிடம் கையளிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி பிரதேசத்தில் ஆயிரத்து 516 பேருக்கு ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

# வீதி அகலிப்பின்போது சுகாதாரச் சீர்கேடுகள்

### கவனிப்பார் இல்லையா என்று மக்கள் விசனம்

யாழ்ப்பாணம்,டிசெ,4

*பிரதான வீதிகளின் அகலிப்பு நடவடிக்கைகளின் போது சுகாதார சீர்கேடுகள் இடம்பெற்று வருகின்றன. எனினும் அவற்றைத் தடுப்பதற்கு அதிகாரிகள் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுப்பதில்லை என்று பொது மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.*

யாழ்.ஏ-9 வீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதி, காங்கேசன்துறை வீதி ஆகிய 4 வீதிகளும் அகலிக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

வீதி அகலிப்புக்காக வீதிகளில் கற்கள் நிரப்பப்படுவதுடன், வீதிக் கரைகளில் மண்ணும் போடப்படுகின்றது. இதனால் வாகனங்கள் செல்லும்போது புழுதி கிளம்புகிறது.

இந்தத்தூசியால் வீதிகளின் அருகில் வியாபார நிலையங்கள் வைத்திருப்பவர்கள், வீதியால் செல்லும் பாடசாலை மாணவர்கள் என்று பலதரப்பட்டவர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

இதனால் பெரும் எண்ணிக்கையான மக்கள் சுவாச நோய்களுக்கும் ஆளாகி வருகின்றனர்.

வீதி திருத்த வேலைகளை மேற்கொள்ளும் ஒப்பந்த நிறுவனங்கள், வீதி திருத்தத்துக்காக போடப்படும் கல், மண்ணிலிருந்து எழும் புழுதியைக் கட்டுப்படுத்துவதற்கு தண்ணீர் தெளிப்பதில்லை. சில இடங்களில் காலை அல்லது மாலையில் மாத்திரம் தண்ணீர் தெளிக்கப்படுகின்றது.

ஆனால் புழுதி எழாதவாறு தொடர்ச்சியாக தண்ணீர் தெளிப்பதில்லை. அத்துடன் ஒப்பந்த நிறுவன ஊழியர்கள் விடுமுறையில் சென்றாலும் தொடர்ச்சியாக தண்ணீர் தெளிக்கப்படுவதில்லை.

இந்த விடயம் தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் வி.சுதாகரிடம் கேட்டபோது:-

எமக்கும் இந்த விடயம் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. நாம் ஒப்பந்த நிறுவனத்துக்கு இறுக்கமான அறிவித்தலை வழங்கியுள்ளோம்- என்றார். (ம-5)

## பனம்பொருள் உற்பத்தி பயிற்சி நிலையங்கள் திறப்பு

### அல்லைப்பிட்டி, புங்குடுதீவில்

யாழ்ப்பாணம்,டிசெ.4

அல்லைப்பிட்டி மற்றும் புங்குடுதீவு பகுதிகளில் பனம் பொருள் உற்பத்தி பயிற்சி நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையத்தில் பனம் பொருள்களில் இருந்து கைப்பணிப் பொருள்களைத் தயாரிப்பதற்கான மூலப் பொருள்களைப் பெறுவதற்கான உதவிகளைக் கரித்தாஸ் நிறுவனம் வழங்கியுள்ளது. இந்தப் பயிற்சி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் கைப்பணிப் பொருள்களைச் சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி நிலையத்துக்கு 40 பயிற்சியாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என்று அவர் மேலும் கூறினார். (ம-17)

## ஜனவரி இடமாற்றம் பெறவுள்ள ஆசிரியர் மேன்முறையீடு செய்யலாம்

யாழ்ப்பாணம்,டிசெ,4

ஜனவரி முதலாம் திகதி இடமாற்றம் செய்யப்படவுள்ள ஆசிரியர்கள் தமது இடமாற்ற மேன்முறையீடு தொடர்பாக எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் முறையீடு செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆளுநர் அலுவலகத்தில் கடந்த வியாழன் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டது.

இடமாற்றத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களது விவரப்பட்டியலும், பதிவீட்டு இடமாற்றத்துடன் வன்னிப் பகுதிக்குச் செல்லும் ஆசிரியர்களது பெயர்ப்பட்டியலும் இதன்போது சமர்ப்பிக்கப்பட்டது.

இவர்களது இடமாற்றம் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி நடைமுறைக்கு வரவுள்ளது. இதுகுறித்த மேன்முறையீடுகளை செய்ய விரும்பும் ஆசிரியர்களே அவற்றை 15 ஆம் திகதிக்கு முன்னர் மேன்முறையீடு செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டது. (ம-4-422)

# வலுவிழந்தோருக்கு உதவுங்கள்

### விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 4

விசேட தேவையுடையோரின் இன்னல்கள், இடையூறுகளை எடுத்துக்கூறி எமது செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எமது தேவைகளை நிறைவேற்ற எம்முடன் கைகோர்த்து நின்று செயற்படுங்கள்.

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் வி.கனகசபை இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

சர்வதேச விசேட தேவைக்குட்பட்டோர் தினத்தை முன்னிட்டு யாழ். மத்திய கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் தலைமையுரை ஆற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இதுதொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

விசேட தேவையுடையவர்களுக்கு தேவைகள் பல உள்ளன. இந்த நிகழ்வுக்குப் பலரை அழைத்திருந்தோம். சிலரே வருகை தந்துள்ளனர். அநேகர் வரவில்லை. எமது துயரங்களை யாரும் கண்டுகொள்வதில்லை.

எமக்குள்ள இடைஞ்சல்களை, இன்னல்களை எடுத்துக்கூறி எமது வாழ்வு சிறக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எமது செயற்பாடுகளுக்கு வளர்முக நாடுகளில் இருக்கும் இடையூறுகள் தவிர்க்கப்பட வேண்டும். எமது தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கு எம்முடன் கைகோர்த்து நின்று செயற்பட வேண்டும்.

தனியார் நிறுவனங்கள், எமது திறமைகளை வெளிக்கொணர உதவ வேண்டும். விசேட தேவையுடையோர் வினைத் திறனுள்ளவர்கள். அவர்கள் சாதனைகள் பலவற்றை நிகழ்த்தியுள்ளனர்.

அவர்களை ஊக்கப்படுத்த அனைவரது ஒத்துழைப்பும் தேவை - என்று கூறினார். (ம-4)

## நிகழ்வுகள் இன்று

**பரிசளிப்பு விழா**

கொடிகாமம் கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை அரங்கில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் க.உதயகுமாரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் கலந்து கொள்வார். (ம-9)

**மருத்துவ முகாம்**

யாழ்.லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் அரியாலை கிழக்கில் மீள்குடியமர்த்தப்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கு பற்சுகாதாரம் தொடர்பான மருத்துவ முகாம் காலை 8.30 மணிக்கு பிலாரெல் பியா மிசனரி சபை அரியாலையில் இடம்பெறவுள்ளது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர், ஆசிரியர் இன்று சுகவீன லீவுப் போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.4

நாடளாவிய ரீதியில் அதிபர், ஆசிரியர்கள் இன்று சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். 16 தொழிற்சங்கங்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றன என்று இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட 7 கோரிக்கைகளையும் நிறைவேற்றுமாறு கோரி இன்று இந்தப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். முன்னர் 13 தொழிற்சங்கங்கள் ஆதரவு தெரிவித்தன. தற்போது 16 தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் இணைந்துள்ளன.

அதிபர் சேவை தரம்-I இல் உள்ளவர்களுக்கு 5 ஆயிரத்து 805 ரூபாவும், தரம் 2-I க்கு 3 ஆயிரத்து 870 ரூபாவும், தரம் 2-II க்கு 4 ஆயிரத்து 90 ரூபாவும் தரம் 3 க்கு 4 ஆயிரத்து 165 ரூபாவும் அதிகரிக்கப்பட வேண்டும்.

அவ்வாறே ஆசிரியர் சேவை தரம் -I க்கு 3 ஆயிரத்து 87 ரூபாவும் தரம் 2-I க்கு 4 ஆயிரத்து 90 ரூபாவும் தரம் 2-II க்கு 4 ஆயிரத்து 165 ரூபாவும் தரம் 3-I க்கு 2 ஆயிரத்து 975 ரூபாவும் தரம் 3-II க்கு ஆயிரத்து 750 ரூபாவும் அதிகரிக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(த-4)

## நாடு முழுவதும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
கிடைக்கும்வரையில் தமது போராட்டம் தொடரும் என்றும் இந்த அமைப்புக்கள் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் பேரவையின் இணைப்பாளர் சஞ்சீவ பண்டார கூறுகையில்,

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதல், மாணவர்கள் நால்வர் கைது செய்யப்பட்டமை ஆகிய சம்பவங்கள் பல்கலைக்கழக மாணவர்களின் சுதந்திரத்தைப் பறிக்கும் செயல்களாகும். இதுபோன்ற செயல்கள் அரசால் தொடர்ச்சியாக அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

மேற்படி சம்பவங்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்கும் வரை நாம் போராட்டங்களை நடத்தவுள்ளோம். இதன்படி நாளை அல்லது நாளை மறுதினம் பேராதனை பல்கலைக்கழக வளாகத்தில் போராட்டங்களை நடத்தவுள்ளோம்.

அத்துடன், தெற்கிலுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் இந்தப் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளனர். நாளை அல்லது நாளை மறுதினம் ஆரம்பிக்கும் எமது போராட்டங்கள் அடுத்தடுத்த நாள்களில் தென்பகுதி முழுவதும் தொடரும் - என்றார்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்து கடந்த வியாழக்கிழமை 29ஆம் திகதி மேற்படி மாணவர் பேரவையினர் பேராதனை, ருஹுணு, களனி ஆகிய பல்கலைக்கழக வளாகங்களில் போராட்டங்களை நடத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் சோஷலிஸ மாணவர் சங்கத்தின் பிரதிநிதி நலிந்த ஜெயதிஸ்ஸ கருத்து வெளியிடுகையில்,

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டமை, நால்வர் கைதுசெய்யப்பட்டமை ஆகிய சம்பவங்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்தச் சம்பவங்களுக்கு எதிராக மனித உரிமைகள்ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்வதற்கான நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டு வருகின்றோம்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிராக அரசால் கட்டவிழ்த்துவிடப்பட்டு வருகின்ற இதுபோன்ற நடவடிக்கைகளை எதிர்த்து நாடு முழுவதும் போராட்டங்களை நாம் முன்னெடுக்கவுள்ளோம்.

எமது போராட்ட நடவடிக்கைகளை நாளை மறுதினம் முதல் ஆரம்பிக்கவுள்ளோம். தாக்கப்பட்ட, கைதுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். அதுவரை எமது போராட்டம் தொடரும் - என்றார்.

(ஐ-சி)

## மாணவர்கள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
தங்கள் மற்றும் மாணவர் கைது தொடர்பில் ஆசிரியர் சங்கம் விசேட பொதுக்கூட்டம் ஒன்றை நேற்று நடத்தியது.

இந்தக் கூட்டத்தில் ஐந்து முக்கிய கோரிக்கைகள் அடங்கிய தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் பல்கலை ஆசிரியர் சங்கம் துணைவேந்தருக்கும், ஐ.நா.சபை, சகல வெளிநாட்டு தூதரகங்கள், மனித உரிமை அமைப்புகளுக்கும் அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

* கைது செய்யப்பட்ட நான்கு மாணவர்களும் விடுதலை செய்யப்படும் வரை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறுவது சாத்தியமற்றது என்பதனை சம்பந்தப்பட்ட தரப்பினருக்குப் பல்கலைக்கழக நிர்வாகம் வலியுறுத்த வேண்டும்.

* கைது செய்யப்பட்ட மாணவர்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் மேலும் கைதுகள் இடம்பெறாது என்றும் உறுதியளிக்கப்பட்ட பின்பும் மாணவர்களை நள்ளிரவு வேளையில் கைது செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது மேலும் நிலைமையை மோசமடையச் செய்யும் என்பதனை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பல்கலைக்கழக நிர்வாகம் வலியுறுத்த வேண்டும்.

* பல்கலைக்கழக சூழலில் இராணுவமயமாக்கலின் அடையாளங்களாக அமைக்கப்பட்டுள்ள வீதித்தடைகள், சோதனைச் சாவடிகள், இராணுவம் மற்றும் பொலிஸாரின் பிரசன்னம் நீக்கப்படாவிடில் இயல்பான சூழலில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முன்கொண்டு செல்வது சாத்தியமற்றது என்பதனை சம்பந்தப்பட்டவர்களுக்கு பல்கலைக்கழக நிர்வாகம் வலியுறுத்த வேண்டும்.

* பல்கலைக்கழக சூழலுக்குள் (மாணவர் விடுதிகள் உட்பட) எக்காரணங்கொண்டும் அனுமதியின்றி இராணுவம், பொலிஸார் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் உட்பட்டோர் பிரவேசிக்கக்கூடாது என்பதனை சம்பந்தப்பட்டவர்களுக்கு பல்கலைக்கழக நிர்வாகம் அறிவுறுத்த வேண்டும்.

* மேற்கூறப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் பல்கலைக்கழக சமூகத்தினை ஒரு பயப்பிராந்திக்குள் உட்படுத்தி அடக்கி வைத்திருக்க முயலும் ஒரு செயலாகும் என்பதனையும் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

இந்த விடயங்களின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் எமது பல்கலைக்கழகத்தில் இயல்பு நிலை மீளத் திரும்புவதற்கு உடனடியாக ஆவன செய்யுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தங்களை வேண்டிக்கொள்கின்றது - என்றுள்ளது. (ஐ)

## பல்கலைக்கழக...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது.

இது குறித்துச் சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.பல்கலைக்கழகத்தின் மாணவர் விடுதிக்குள் இராணுவத்தினர் அத்துமீறி பிரவேசித்தமை, அதனைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக மாணவர் நடத்திய அமைதியான ஆர்ப்பாட்டத்தை ஆண், பெண் என்ற பேதம் பாராது அனைத்து மாணவர்களையும் இரும்புக் கம்பிகள், துப்பாக்கி அடிப்பாகங்கள் மற்றும் பொல்லுகள் ஆகியவற்றால் தாக்கிக் கலைத்தன்மையையும், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையையும், மேலும் பல மாணவர்களைக் கைது செய்ய எடுக்கப்படும் முயற்சிகளையும் கண்டித்து இன்று முற்பகல் 11 மணிக்கு யாழ். பஸ் நிலையம் முன்றிலில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்துக்கு யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தமது பூரண ஆதரவை வெளிப்படுத்துகின்றது.

அத்துடன் இது சாத்வீக ஜனநாயக வழியிலான போராட்டங்கள் வன்முறையினால் அடக்கி ஒடுக்க முனையும் சக்திகளுக்கு எதிரான போராட்டமாகையால் அதில் பல்கலைக்கழக அனைத்து சமூகத்தினரையும் பங்கேற்று எமது ஆதரவை வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் இவ்வாறான தாக்குதல்கள் இலங்கையில் தமிழ் இனத்தின் இருப்பை கேள்விக்குள்ளாக்குவதால் எம் இனத்தின் மீதும் ஜனநாயகத்தின் மீதும் பற்றுள்ள அனைத்து பொது மக்களும், பொது அமைப்புகளும் இதில் கலந்துகொண்டு எமது எதிர்கால சந்ததியின் சுதந்திர வாழ்வுக்காக எமது ஆதரவை ஜனநாயக ரீதியில் வெளிப்படுத்துவோம் - என்றுள்ளது. (த)

## அவசர...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
பேச்சுகளை உடனடியாக முன்னெடுப்பது குறித்து ஜனாதிபதி இந்தச் சந்திப்பின்போது சில யோசனைகளை முன்வைக்கும் சாத்தியம் இருப்பதாக அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

''பிரதம நீதியரசர் விவகாரத்தினால் சர்வதேச மட்டத்தில் அரசு நெருக்குவாரங்களைச் சந்தித்துள்ளது. இந்த நிலையில், இனப்பிரச்சினைத் தீர்விலும் இழுத்தடிப்பைச் செய்யாமல் முன்னோக்கிச் செல்ல உத்தேசித்து ஜனாதிபதி இந்த அவசரசந்திப்புக்கு ஏற்பாடு செய்திருக்கலாம்'' - என்று அரச, தமிழ்க் கூட்டமைப்பு பேச்சுக்குழுவின் உறுப்பினரொருவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதியிடமிருந்து வந்த அழைப்பு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடனடியாகப் பதில் எதனையும் தெரிவிக்கவில்லை. தமிழ்க் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் சிலர் கொழும்பில் இல்லாத காரணத்தினால் அவர்கள் கொழும்பு திரும்பியதும் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கான நாள் தீர்மானிக்கப்படுமென்று தமிழ்க் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

## பல்கலைக்கழகம்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
வர்களும் அங்கிருந்து வெளியேறியிருக்கின்றனர். விடுதிகளில் தங்கியிருந்த சிங்கள மாணவர்களும் முன்னதாகவே அங்கிருந்து வெளியேறிவிட்டனர் என்று கூறப்படுகின்றது.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் கடமையில் ஈடுபட்டிருந்தனர். எனினும் பல்கலைக்கழகத்தைச் சுற்றி பொலிஸ் மற்றும் படையினரின் காவல் இறுக்கமடைந்தே காணப்படுகின்றது. (த-4)

## ஒரு மணி நேர...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
அனைத்துத் தமிழ் மக்களும் தமது பணிகளைத் தத்தம் இடங்களிலேயே இடைநிறுத்தி சாத்வீகப் போராட்டத்துக்கு ஆதரவளிக்க வேண்டும் என்றும் இளைஞர் அணி கேட்டுள்ளது.

இது தொடர்பில் இளைஞர் அணியின் சார்பில் அதன் தலைவர் கஜதீபன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய அமைதியான போராட்டம் படையினரால் தடுக்கப்பட்டது. மாணவர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்தும் விடப்பட்டது. தமது கருத்தை வெளிப்படுத்துவதற்கு மாணவர்களுக்கு இருந்த உரிமை மறுக்கப்பட்டு அவர்கள் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். அத்துடன் இந்தத் துயரம் நின்றுவிடவில்லை.

அன்றைய போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களைப் பழிவாங்கும் நோக்கத்துடனும் தமிழ் மக்களை மிரட்டிப் பணிய வைக்கும் நோக்கத்துடனும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் நால்வர் பயங்கரவாதப் புலனாய்வுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழர்கள் தமது உரிமைக்காக அமைதி வழியில் போராடினாலும் அதனைப் பயங்கரவாதமாகக் காட்டுவதற்கே இந்த அரசு முயற்சிக்கிறது. இதனையே முன்னைய காலங்களிலும் இலங்கை அரசாங்கங்கள் மேற்கொண்டிருந்தன.

இலங்கை அரசின் இத்தகைய போக்கு தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி இரண்டாம் தரக் குடிமக்களாக வைத்திருக்க வேண்டும் என்ற அதன் உள்மன விருப்பத்தின் வெளிப்பாடே. அரசின் இந்த நோக்கத்தைத் தகர்த்து எறிந்து நாமும் சரிநிகர் சமமாக வாழும் முயற்சியாக, இன்று பகல் 11 மணி முதல் 12 மணி வரையான ஒரு மணிநேரத்துக்கு அனைவரும் தமது பணிகளை இடைநிறுத்தி வைத்து போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இராணுவத்தினராலும், பொலிஸாராலும், தம்மைப் புலனாய்வாளர்கள் என்று சொல்லிக் கொள்வோராலும் நீங்கள் மிரட்டப்படலாம் அச்சுறுத்தப்படலாம் சிலவேளைகளில் துன்புறுத்தல்களைக்கூட எதிர்கொள்ளலாம் என்பதைப் புரிந்துகொள்கிறோம். அவற்றை எல்லாம் தாண்டி அல்லது சமாளித்து இந்தப் போராட்டத்தில் முடிந்தவர்கள் அனைவரும் இணைந்து கொள்ள வேண்டும் - என்று இளைஞர் அணி கேட்டுள்ளது.

## கைதான மாண...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
மாணவர்களின் உறவினர்கள் அவர்களைப் பார்வையிட்டனர்.

இன்று அவர்கள் வவுனியா நீதிமன்றத்தில் முற்படுத்தப்படக்கூடும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

இதேவேளை, தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்களை அவர்களது பெற்றோர் நேற்று முன்தினம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் தலைமையிலான பல்கலைக்கழகக் குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டிருந்தனர்.

அது தொடர்பில் அவர்களிடம் இருந்து எந்தவிதக் கருத்துக்களையும் பெறமுடியவில்லை. அவர்களுக்கு எடுக்கப்பட்ட அழைப்புக்கள் எவற்றுக்கும் அவர்கள் பதிலளிக்கவில்லை. பல்கலைக்கழகத்துக்குள் நுழையவும் செய்தியாளர்களுக்கு நேற்றுத் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, யாழ் பல்கலைக்கழக விவாகாரம் வர்த்தக நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ரடிருக்கின்றதோ என்று எண்ணத் தோன்றுவதாகவும், அதனால் செய்தியாளர்களிடம் தாங்கள் பேச விரும்பவில்லை என்றும் மாணவர்களின் பெற்றோரில் சிலர் தம்மிடம் தெரிவித்தனர் என்று பி.பி.ஸி. செய்தி வெளியிட்டுள்ளது.

(ஐ-சி)

## மாணவரின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் குறித்த ஜனநாயகப் போராட்டத்துக்கு பொது அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன.

**ஜனநாயக மக்கள் முன்னணியும் களத்தில்**

அதேவேளை, ''அரசின் அடக்குமுறைக்கு எதிராக துணிச்சலுடன் ஜனநாயக ரீதியில் போராடிய பல்கலைக்கழக மாணவர்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளனர். நான்கு மாணவர்கள் அரசால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவையெல்லாம் நாட்டில் ஜனநாயகம் இறந்துவிட்டதையே காட்டுகின்றன.

இவ்வாறு ஜனநாயகம் இல்லாத நாட்டின் அரசுக்கு எமது எதிர்ப்பைப் பதிவு செய்ய வேண்டியது அவசியமாகும். இந்தப் போராட்டத்துக்கு ஜனநாயக மக்கள் முன்னணி தனது பூரண ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது'' - என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் முக்கியஸ்தரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான பாஸ்கரா கூறியுள்ளார்.

இதேவேளை, இன்று நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் தானும், பாஸ்கராவும் கலந்துகொள்ளவுள்ளோம் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

**விக்கிரமபாகு கட்சியினர் பங்கேற்பு**

இதேபோல், இந்த ஆர்ப்பாட்டத்தில் நவ சமசமாஜக்கட்சியின் உறுப்பினர்களும் கலந்து கொள்கின்றனர் என அக்கட்சியின் செயலர் விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

**ஜே.வி.பி. ஆதரவு**

அத்துடன், யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் கைதை ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சந்திரசேகரன் வன்மையாகக் கண்டித்துள்ளார். இன்று யாழ்.நகரில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் தான் கலந்துகொள்ளவுள்ளார் என்று அவர் குறிப்பிட்டார்

மார்க்ஸிய லெனினிசக் கட்சியும் போராடும் இந்தப் போராட்டத்தில் தமது ஜனநாயக மார்க்ஸிச லெனினிசக் கட்சியும் இணைந்துகொள்ளும் என்று அதன் தலைவர் சி.க.செந்தில்வேல் தெரிவித்தார். அனைவரும் ஒன்றிணைந்து எதிர்ப்பை தெரிவிப்பதற்காகவே தாம் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்கிறார்கள் என்னும் அவர் கூறினார்.

இதேவேளை, சமய அமைப்புகளும் மேலும் பல பொது அமைப்புகளும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்தோடு பெருமளவான பல்கலைக்கழக மாணவர்களும், பொதுமக்களும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தவுள்ளனர்.

யாழ். நகரில் ஆயிரக்கணக்கானோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் திரண்டு மாணவர்களுக்காக குரல் கொடுப்பர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

(உ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ரியூட்டரி'களில் இல்லை கட்டுப்பாடு தறிகெட்டுப் போகும் மாணவர்கள்

## மன்னாரில் பெற்றோர் விசனம், கவலை

மன்னார்,டிசெ.4

மன்னாரிலுள்ள தனியார் கல்வி நிலையங்கள் பலவற்றில் கட்டுப்பாடுகள் இல்லாத நிலை காணப்படுவதால் மாணவர்கள் பல்வேறு தீய செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்று பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் பல தனியார் கல்வி நிறுவனங்கள் காணப்படுகின்றன. சில கல்வி நிலையங்களில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

கைத்தொலைபேசிப் பாவனை உட்பட பல்வேறு செயற்பாடுகளுக்கு அந்தக் கல்வி நிலையங்களின் நிர்வாகம் தடை விதித்துள்ளது.

ஆனால் பல கல்வி நிலையங்களில் அவ்வாறான கட்டுப்பாடுகள் விதிக்கப்படவில்லை எனப் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

கட்டுப்பாடுகளை விதித்தால் மாணவர்கள் அந்த தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்ல மாட்டார்கள் என்ற அச்சத்தில் பல கல்வி நிலையங்கள் அந்த கட்டுப்பாடுகளை விதிப்பதில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் கட்டுப்பாடுகள் விதிக்காத கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

கையடக்கத் தொலைபேசிப் பாவனை ஆண், பெண் மாணவர்கள் தனிமையாக சந்திக்கின்றமை உள்ளிட்ட பல பிரச்சினைகள் இங்கு இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான கல்வி நிலையங்கள் தமது சுய இலாபத்துக்காக மாணவர்களைத் தீய பாதையில் அழைத்துச் செல்வதாகவும் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது 3 ஆம் தவணைப் பரீட்சை முடிவடைந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்கள் பல்வேறு வகுப்புகளை ஆரம்பிக்கவுள்ளன.

எனவே பெற்றோர் தமது பிள்ளைகளை நம்பிக்கையுடன் அனுப்பி வைக்கும் தனியார் கல்வி நிலையங்கள், வருமானத்தை மட்டும் கருத்தில் கொள்ளாமல் மாணவரின் ஒழுக்கத்திலும், நன்னடத்தையிலும் அக்கறை செலுத்துமாறு பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-12)

# மன்னார் மாவட்ட மீனவருக்கு கடற்றொழில் உபகரணங்கள்

## இந்திய அரசு ஞாயிறன்று வழங்கியது



மன்னார், டிசெ.4

மன்னார் மாவட்டத்திலுள்ள மீனவர்களுக்கு இந்திய அரசால் மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த மீன்பிடி உபகரணங்களை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை முசலிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிலாபத்துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இதன்போது முசலிப் பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 350 பயனாளிகளுக்கு மீன்பிடி உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

மீன்பிடிப்படகு, வெளி இணைப்பு இயந்திரம், வலைத் தொகுதி என்பன ஒரு தொகுதி மீனவர்களுக்கு வழங்கப்பட்டதுடன் வேறு சில உபகரணங்கள் இருவர் பயன்பாட்டுக்கு ஒன்று என்ற அடிப்படையில் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இந்திய உயர் ஸ்தானிகர் அசோக் கே.காந்தா, கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ண, வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீன், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உட்பட பலர் கலந்து கொண்டனர். (க-12)

# நெற்பயிர் அழிவு குறித்த விவரம் திரட்டுகிறது கமநல சேவை நிலையம்

அக்கராயன், டிசெ.4

கிளிநொச்சி மாவட்டத்தின் சில பகுதிகளில் நெற்பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள அழிவுகள் தொடர்பான விவரங்களைக் கமநல சேவை நிலையங்கள் திரட்டி வருவதாகத் தெரியவருகின்றது.

தொடர்ச்சியாக நீடித்த கடும் வறட்சியின் பின்னர் மழை பெய்ய ஆரம்பித்ததையடுத்து விவசாயிகள் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர்.

ஆனால் தொடர்ந்து மழை பெய்து வெள்ளம் ஏற்பட்டதால் நெல் வயல்கள் நீரில் மூழ்கிப் பயிர்களுக்கு அழிவு ஏற்பட்டது. குறிப்பாக பூநகரி உட்பட சில பிரதேசங்களில் அழிவுகள் கூடுதலாகக் காணப்படுகின்றன.

தற்போது இவை தொடர்பான விவரங்களைக் கமக்கார அமைப்புகள் ஊடாக கமநல சேவை நிலையங்கள் மேற்கொண்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பளை, பூநகரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இம்முறை பெருமளவு நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் வன்னேரிக்குளம், தேவன்கட்டு ஆகியன இணைக்கப்பட்டு நீர்த்தேக்கம் ஒன்று உருவாக்கப்பட்டால் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)

# சமூக சீர்கேடுகளில் ஓட்டோ சாரதிகள் அவர்களை சட்டத்தின் முன் நிறுத்துங்கள்

## மன்னாரில் மீண்டும் துஷ்பிரயோகங்கள் என்று செல்வம் எம்.பி. பொலிஸ் அத்தியட்சகருக்கு கடிதம்

மன்னார்,டிசெ.4

மன்னார் மாவட்டத்தில் சமூகச் சீர்கேடுகளுக்குக் காரணமாகவுள்ள ஓட்டோ சாரதிகளை அடையாளம் கண்டு அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்று வந்த சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் சில சட்டவிரோதச் செயற்பாடுகளுடன் ஒரு சில ஓட்டோ சாரதிகள் பின்னணியில் காணப்பட்டுள்ளனர்.

குறித்த பிரச்சினைகள் அண்மைக்காலங்களில் இல்லாத நிலையில் மீண்டும் தலை தூக்கி நிற்கின்றன. இதற்குச் சில ஓட்டோச் சாரதிகளே காரணமாக இருப்பதாகத் தெரிய வருகின்றது.

பயணிகளாகச் செல்லும் இளம் பெண்கள் பல்வேறு கோணங்களில் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுவதாகப் பல தரப்பிலும் இருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

ஒரு சில ஓட்டோச் சாரதிகள் குறித்த சம்பவங்களில் ஈடுபடுவதனால் அந்த பிரச்சினை ஒட்டுமொத்த ஓட்டோ சாரதிகளையும் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே சக ஓட்டோ சாரதிகளும் இந்த விடயங்களில் விழிப்பாக இருந்து குற்றச்செயல்களில் ஈடுபடும் குறித்த ஓட்டோச் சாரதிகளைக் கைது செய்வதற்கு உதவி புரிந்து மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனவே மன்னார் பொலிஸார் இந்தப் பிரச்சினைகளில் துரித நடவடிக்கை எடுத்து எமது மாவட்டத்தில் இடம்பெறும் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-12)

# வன்னி எம்.பி.வினோ மருத்துவமனையில்

மன்னார்,டிசெ.4

திடீர் சுகவீனமடைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் நீண்ட நாள்களாகவே சிறுநீரகக் கோளாறினால் அவதிப்பட்டு வந்தவர். இந்தநிலையில் திடீர் சுகவீனம் அடைந்த இவர் கடந்த சனிக்கிழமை இரவு கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவரது செயலாளர் தெரிவித்துள்ளார்.

இவருக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிறுநீரகச் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவர் தொடர்ந்தும் மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சைபெற்று வருவதாக அவரது செயலாளர் மேலும் தெரிவித்தார். (க-12)

## புதுக்குடியிருப்பில் மாணவருக்கு பாராட்டு

தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வொன்று புதுக்குடியிருப்பில் இன்று காலை 9 மணிக்கு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் எஸ்.செல்வநாயகம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் மா.இராஜ்குமார் முதன்மை விருந்தினராகவும், புதுக்குடியிருப்பு மருத்துவமனையின் மருத்துவர்களான திரு, திருமதி ப.சத்தியரூபன் தம்பதிகள், புதுக்குடியிருப்பு உதவிப் பிரதேச செயலர் ஐ.பிரதாபன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (க-400)

# பாடசாலை மண்டபம் அமைக்க பின்னடிப்பு

அக்கராயன்,டிசெ.4

துணுக்காய் ஆரோக்கியபுரம் தமிழ் வித்தியாலயத்தில் விழாக்களை நடத்தக் கூடிய வகையில் மண்டபம் ஒன்றை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை தொடர்ந்து நிராகரிக்கப்பட்டு வருவதாகப் பாடசாலைச் சமூகத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

**இது தொடர்பாக விழாவொன்றிலும் எடுத்துக் கூறப்பட்டது.**

கடந்த 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இடம்பெற்று வரும் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுகளின் போது இது தொடர்பாக வேண்டுகோள் விடுக்கப்பட்டு வருகின்றது.

ஆனால் இதுவரை இந்த மண்டபத்தை அமைப்பதற்கான முயற்சிகள் எதுவும் இடம்பெறவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இந்தப் பாடசாலையில் விழாக்கள் இடம்பெறும் போது வருகை தரும் அதிகாரிகளுக்கும், விருந்தினர்களுக்கும் இந்த மண்டபம் அமைக்கப்படுவதன் முக்கியத்துவம் தொடர்பாக எடுத்துக் கூறிய போதிலும் இதுவரை அது அமைக்கப்படவில்லையெனவும் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்ற விழாவொன்றிலும் எடுத்துக் கூறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-18)



மன்னார் ஜோசப் மாஸ்டர் ஞானகாந்த ஆங்கில பாடசாலையின் ஒளிவிழா நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றபோது சிறுவர்கள் நத்தார் கீதம் இசைக்கின்றனர். (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலை சுரேஷ் முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த கலைவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட திருகோணமலை நகரசபைத் தலைவர் க.செல்வராஜா மங்கள விளக்கேற்றுவதையும், சிறார்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (40)

## சைக்கிள்களுக்கு இலக்கத் தகடு; பெற்றுக் கொடுத்தது நகரசபை

திருகோணமலை,டிசெ.4

இலக்கத் தகடின்றிய சைக்கிள்களுக்கு அனுமதித் தகட்டை வழங்க திருகோணமலை நகரசபை எடுத்த அதிரடி நடவடிக்கை பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

கடந்தவாரம் திருகோணமலை சிவன் கோயிலுக்கு முன்பாகத் திருகோணமலை நகரசபை அலுவலர்கள், பொலிஸாரின் உதவியுடன் சைக்கிள்களை தடுத்து நிறுத்தி இலக்கத் தகடற்ற சைக்கிள்களுக்கு தகடுகளை அந்த இடத்திலேயே வழங்க் நடவடிக்கை எடுத்தனர்.

இதனைப் பெருமளவு சைக்கிள் உரிமையாளர்கள் எதிர்த்திருந்த போதிலும் அவர்கள் இலக்கத் தகட்டைப் பெற்றுக்கொள்ள தயக்கம் எதனையும் காட்டவில்லை.

தாம் நகரசபைக்குச் சென்று நேரத்தைச் செலவழிப்பதை விட இவ்வாறு உடனடியாக இலக்கத் தகட்டைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தமை தமக்கு எவ்வித அசௌகரியங்களையும் தரவில்லை என்று சைக்கிள்களுக்கு இலக்கத் தகட்டைப் பெற்றோர் தெரிவித்தனர். (ச-40)

# கிழக்கில் கலந்துகொள்வதற்கு கல்வியமைச்சிடம் அனுமதியா?

### சாடுகிறார் மாகாணசபை உறுப்பினர் ஜனா

மட்டக்களப்பு,டிசெ.4

பாடசாலைகளில் பொது நிகழ்வுக்கு அரசியல் வாதிகளை அழைக்கும்போது கல்வியமைச்சின் அனுமதி பெறவேண்டும் என்ற சுற்றறிக்கை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழ் மக்களிடம் இருந்து அந்நியப்படுத்த எடுத்த நடவடிக்கையாகும் என்று கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) குற்றம் சாட்டியுள்ளார்.

கிழக்கு மாகாணசபைக் குட்பட்ட பாடசாலைகளில் பொதுநிகழ்வுக்கு அரசியல் வாதிகளை அழைக்கும்போது கல்வியமைச்சின் அனுமதி பெறவேண்டும் என்ற சுற்றறிக்கை தொடர்பில் நேற்று திங்கட்கிழமை அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கிழக்கு மாகாணசபையின் கல்வியமைச்சின் ஊடாக சகல கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கும், பாடசாலைகளுக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

வலய மட்டம், கோட்ட மட்டம், பாடசாலை மட்டம் என நடைபெறும் விழாக்கள், வைபவங்கள், விளையாட்டுப்போட்டிகள் உட்பட அனைத்து பொது நிகழ்வுகளுக்கும் மாகாணசபை உறுப்பினர்களை அழைப்பதாக இருந்தால் முற்கூட்டியே மாகாணக்கல்வி அமைச்சிடம் அனுமதி பெறவேண்டும்.

இந்தச் சுற்றறிக்கை ஆளும் கட்சி உறுப்பினர்களைத் தவிர தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களை அழைக்கக்கூடாது என்பதற்காகவே அனுப்பப்பட்டுள்ளது.

தினமும் பாடசாலைகளிலும் வலய, கோட்ட மட்டங்களிலும் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இவற்றில் ஆளும் கட்சி மாகாணசபை உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் கலந்து கொண்டு வருகின்றனர். எனவே இவர்கள் அனைவரும் அவ்வாறு அனுமதிபெற்றுத்தான் கலந்துகொண்டு வருகின்றார்களா என்பது தொடர்பில் நாங்கள் அறிய விரும்புகின்றோம்.

மாகாணசபை உறுப்பினர்கள் அனைவரும் சமமான கௌரவத்துக்கும் மதிப்புக்கும் உரியவர்கள்.

அனைத்து மாகாணசபை உறுப்பினர்களும் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள்.

இந்தநிலையில் எம்மை தெரிவுசெய்த மக்களை எங்களிடம் இருந்து அந்நியப்படுத்தும் நடவடிக்கையாகவே இந்த சுற்றறிக்கையை நோக்க வேண்டியுள்ளது.

இந்த சுற்றறிக்கையின் கபடத்தனத்தை எமது மக்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே அதற்கு எதிராக எமது கண்டன அறிக்கையை வெளியிட்டுள்ளோம்.

ஆளும்கட்சியினது இந்தக் கபடத்தனமான நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கிறோம். முதலமைச்சரும், தலைவரும் மாகாணசபை உறுப்பினர்களது கௌரவத்தையும் உரிமையையும் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகின்றேன்.

இந்தநிலையில் இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்பவர்கள் தமது அதிகாரபலத்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், தமிழ் மக்களையும் பிரித்தாள மேற்கொள்ளும் முயற்சிகள் உங்களுக்கு எதிர்வினையான விளைவையே ஏற்படுத்தும். அது எமக்கு ஆதரவினையே பெற்றுத்தரும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## 37 இந்திய மீனவர்கள் திருகோணமலையில் கைது

திருகோணமலை,டிசெ.4

இலங்கை கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் இந்திய மீனவர்கள் 37 பேரைக் கடற்படையினர் நேற்று திங்கட்கிழமை காலை கைதுசெய்துள்ளனர்.

திருகோணமலை, புல்மோட்டை கடல் பகுதிக்கு அப்பாலேயே குறித்த மீனவர்கள் 5 ட்ரோலர் படகுகளுடன் கைதுசெய்யப்பட்டனர் என்று கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

இவர்கள் திருகோணமலை கடற்படை முகாமில் தற்போது தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களை திருகோணமலை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். (ச)

**WANTED**

**English Lecturers**

Full / Part Time

**Lecturers with excelent teaching skills to conduct English language program designed by Gateway.**

**Training will be provided in colombo by Gateway International.**

**Interested applicants may send their Curriculame vitae with in 7 days to the following mail address.**

**recruitment. gatewaynelli@gmail.com**

**உடனடி வேலைவாய்ப்பு**

உதயன் நிறுவனத்தின் கொழும்புக் கிளை அலுவலகத்துக்குப் பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான தகுதியும் அனுபவமும் உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

01. கிளை முகாமையாளர் (Manager)
02. அலுவலக முகாமைத்துவ உதவியாளர் (Management Assistant)
03. கணினி / தட்டச்சு உதவியாளர்
04. மனித வள முகாமையாளர் (Human Resources Manager)

உணவு மற்றும் தங்குமிட வசதிகள் தேவைப் படின் ஏற்பாடு செய்யப்படும்.

விண்ணப்பங்களை

hrm@uthayan.com

என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

## டெங்கு ஒழிப்பு கண்காணிப்பு

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக அரசடி கிராம சேவையாளர் பிரிவில் கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் வீடுகள் தோறும் சென்று கண்காணிப்பில் ஈடுபட்டதுடன், டெங்கு ஒழிப்பு அறிவுறுத்தல்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களையும் மக்களுக்கு வழங்கினர்.

இந்தக் கண்காணிப்பு நடவடிக்கைகள் 25 வீடுகளில் மேற்கொள்ளப்பட்டன.அதில் டெங்கு பரவுவதற்கு ஏதுவான சூழல் கொண்ட 3 வீடுகள் கண்டு பிடிக்கப்பட்டன என்று அரசடி கிராம சேவையாளர் திருமதி எஸ்.சௌந்தரராஜா தெரிவித்தார்.

டெங்கு பரவக் காரணமாக இருந்த வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-40)

## தேர்தல் முடிந்தும் கொடுப்பனவு இல்லை

நடந்து முடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தேர்தல் பணிகளில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கு தேர்தல் கடமைக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை இந்தக் கொடுப்பனவுகள் திருகோணமலை வலயக் கல்விப் அலுவலகத்தினால் செலுத்தப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.திருகோணமலை மாவட்டத்திலிருந்து தேர்தல் பணிகளில் ஈடுபட்ட ஆசிரியர்களுள் சுமார் 250 பேருக்கு இது வரை கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-40)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



இ.செந்தில்



ம.பிரதீப்



த.பிருந்தாகரன்

இலங்கை நிர்வாக சேவையில் (SLAS) 03.12.2012 இல் நியமனம் பெற்ற நண்பர்களான இ.செந்தில், ம.பிரதீப் ஆகியோரையும் 02.01.2012 இல் நியமனம் பெற்று பாண்டியன்குளம் உதவிப் பிரதேச செயலராகப் பணியாற்றும் த.பிருந்தாகரனையும் மேன்மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

பல்கலைக்கழக நண்பர்கள், சங்கானை

(C/3'9')

HAPPY BIRTH DAY

வாழ்க பலலாண்டு

**முதலாவது பிறந்தநாள் வாழ்த்து**

கோப்பாய் வீரபத்திர கோயிலடியைச் சேர்ந்த

**கிருபாஹரக் குருக்கள் சங்கீதா**

தம்பதியரின்

செல்வப் புதல்வன்

**அனிருத்தன்**

தனது முதலாவது பிறந்த நாளை நேற்று (03.12.2012) திங்கட்கிழமை தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடினார்.

அவரை வீரபத்திரப் பெருமான் அருளால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் சீருடனும் சிறப்புடனும் வாழ அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, சித்தப்பாமார், சித்திமார், அக்கா, அண்ணா, தங்கை, மாமாமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார் வாழ்த்துகின்றார்கள்.



Best Wishes

(26354)(2.6)

*வாழ்த்துவோர்,* தாத்தா, கோ.இ.பி.குருக்கள், வீரபத்திரர் கோயில், கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# சொல் ஒன்று செயல் வேறாய் தொடரும் தமிழ்மொழி உபயோகம்

இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களின் மொழி உரிமை மீறப்படுகிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் செயற்படும் அரச அலுவலகங்களுக்கு தனிச்சிங்களத்தில் மட்டுமே சுற்றறிக்கைகள் அனுப்பப்படுகின்றன. அமைச்சுகளும் மற்றும் அரச திணைக்களங்களும் இன்னமும், தொடர்ந்தும் அதனையே செய்து வருகின்றன. அதனால் மேற்குறிப்பிட்ட இரண்டு மாகாணங்களிலும் அரச அலுவலகங்களில் பணியாற்றும் தமிழ் அரச அலுவலர்கள் தமக்குரிய கடமைகளைச் சரிவரச் செய்யமுடியாது பாதிக்கப்படுகின்றனர். அதன் விளைவு தமிழ் மக்கள், அரசாங்கத்துடன் தொடர்புள்ள மிக முக்கிய பணிகளை ஆற்றமுடியாமல் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த யதார்த்தத்தை, அர்த்தபுஷ்டியான உண்மையை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சமூகநிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் லயனல் குருகே மிகத் துல்லியமாக எடுத்துக்காட்டி உள்ளார்.

இந்த நாட்டின் இரு பெரும் இனங்களான சிங்கள, தமிழ் மக்களிடையே பிளவையும் விரோதத்தையும் குரோதத்தையும் உருவாக்கியது 1956 ஆம் ஆண்டில், அப்போதைய அரசாங்கத்தினால் திணிக்கப்பட்ட தனிச்சிங்களச் சட்டமே என்பதுடன் இந்த நாட்டின் இனஐக்கியத்தின் மீது வீழ்த்தப்பட்ட பெருங் கருங்கல்லாகும்.

அதன் பின்னர், இலங்கையில் தமிழ் மக்களுக்குரிய மொழி உரிமை வழங்கப்படுகிறது என்று காட்டுவதற்காக, அவ்வப்போது சிங்கள அரசுகளால் அறிமுகப்படுத்தப்பட்ட நியாயமான தமிழ் மொழி உபயோகம் போன்ற சட்டங்கள் வெறும் கண்துடைப்புகளே.

ஏன், 1987 ஆம் ஆண்டு ராஜீவ் - ஜே.ஆர். ஒப்பந்தத்தின் மூல விளைவுகளில் ஒன்றாக அமைந்த சிங்களமும் தமிழும் அரச மொழிகள் என்ற சட்ட ஏற்பாடும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், கடந்த கால் நூற்றாண்டு கால வேளையில் - இருபத்தைந்து ஆண்டுகளாக - வெறும் எழுத்து வடிவிலேயே உறைந்து கிடக்கின்றது.

சிங்களமும் தமிழும் தேசிய மொழிகள் என்று இடைக்காலத்தில் மொழியப்பட்டு, தமிழ் அரச அலுவலர்கள் சிங்களத்திலும், சிங்கள அரச அலுவலர்கள் தமிழிலும் தேர்ச்சி பெற வேண்டும் என்று அதற்கான வசதிகளும் செய்யப்பட்டன.

ஆனால் தமிழ்ப் பிரதேசங்களுக்கு இன்னமும் அநேகமாகத் தனிச்சிங்களத்திலேயே சுற்றறிக்கைகளும் ஏனைய பிரதான ஆவணங்களும் வந்துசேர்கின்றன. சிங்களச் சுற்றறிக்கைகளை தமிழில் மொழிபெயர்க்கும் வசதிகள் குறைவாக இருப்பதாக நொண்டிச் சாட்டுகள் ஒப்பியாசாரத்துக்காக முன்வைக்கப்படுகின்றன.

மொத்தத்தில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசு கடைப்பிடித்துவரும் மாற்றாந்தாய் மனப்பாங்கினால் தமிழ் மக்களும், தமிழ் அரச பணியாளர்களும் பெரும் இடர்களை எதிர்நோக்குகிறார்கள். இந்தப் பின்னடைவு அரசாங்கத்துக்குத் தெரியாததும் அல்ல; புரியாததும் அல்ல.

தமிழும் அரச கரும மொழிகளில் ஒன்று எனச் சட்டப் புத்தகத்தில் வெறுமனே எழுதி வைத்திருப்பதால் தமிழர்களுக்கு என்ன பயன் கிடைக்கிறது. அரசும் அதன் உயர் அதிகாரிகளும் இதுவிடயத்தில் மனமொன்றிச் செயற்படுவதில்லை.

இந்த வகையில் மொழி உரிமை மீறப்பட்ட சுமார் 150 பாரதூரமான வகையறாக்கள் இனங்காணப்பட்டு அவை குறித்து - அவற்றுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்டி உள்ளது.

வடக்கு, கிழக்கு மக்களின் குடிசார் நிர்வாக நலனை மனதில் கொண்டாவது தமிழ் மொழி உபயோகத்தை, அதற்கான செயல்திறனை நடைமுறைப்படுத்துவதில் முயற்சி செய்வதற்கான அறிகுறி எதனையும் காணமுடியவில்லை.

ஆனால் -

மக்களை ஒன்றிணைப்பதற்கும் அவர்களிடையே பிணைப்பை உண்டாக்குவதற்கும் மொழியைப் பயன்படுத்தும் கொள்கையைப் பின்பற்றி வருகிறோம். எமது நாட்டை பன்மொழிகள் கொண்ட நாடாகப் பரிணமிக்கச் செய்வதே எமது அரசாங்கத்தின் நோக்கம். -

இவ்வாறு கடந்த ஒக்ரோபர் மாதத்தில் நடைபெற்ற மொழிகள் மற்றும் அபிவிருத்தி தொடர்பான மாநாட்டில் ஜனாதிபதி அவர்கள் முழங்கியிருந்தார். ஆனால் வடக்கு, கிழக்கில் தமிழை அரசமொழியாகப் பயன்படுத்துவதில் போதிய அக்கறையும் சிறிதளவு ஆர்வம் தானும் வெளிப்படவில்லை. கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாத ஒருவர் வானமேறி வைகுந்தம் போகப்போவதாக கூறிய கதைதான் இப்போது ஞாபகத்துக்கு வருகிறது.

சொல்வது ஒன்று செய்வது வேறொன்று என்ற வாய்ப்பாட்டைச் செயலாக்குவதில் இன்றைய அரசு பலே கில்லாடி என்று உவமேயப்படுத்தும் அளவுக்குக் காரியங்கள் நடந்தேறுகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையான - போர் நடைபெற்ற காலத்தில் இருந்த எண்ணிக்கைக்கும் சற்றும் அதிகமான - தமிழ்ப் பொலிஸார் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். வாஸ்தவமே! ஆனால் மிகப்பெரும்பாலான பொலிஸ் நிலையங்களில் தமிழ் பொதுமக்களது முறைப்பாடுகள் சிங்கள மொழியிலேயே பதியப்பட்டு, அதனைச் சுத்தமாக விளங்கிக் கொண்டதாக முறைப்பாட்டாளரிடம் ஒப்பமும் பெறப்படுகிறது. அதனால் முறைப்பாட்டாளர் பின்னர் பல வழிகளிலும் வகைகளிலும் பெரும் சிரமங்களுக்கும் பாதிப்புகளுக்கும் முகம் கொடுக்க நேரிடுகிறது.

தேசிய நல்லிணக்கம் என்றும் தமிழ் மொழிப் பயன்பாட்டுக்கு உரிய இடம் என்றும் மாநாடுகளிலும் கூட்டங்களிலும் அரச பிரதானிகள் முழங்குவதால் மட்டும் தமிழர்களுக்கு எதுவும் கைக்கு வராது. சிங்கள மக்களைப் போன்றே, தமிழ் மக்களும் தமது குடிசார் தேவைகளை தாய்மொழியில் ஆற்றவும் - அதாவது தமிழில் படித்துப் புரிந்துகொண்டு ஆற்றவும் - அவர்களுக்குரிய அழிக்க முடியாத உரிமை வழங்கப்பட வேண்டும். சட்டம் ஒன்று, விதிமுறை வேறொன்று, செயலாக்கம் இன்னொன்று என்று குட்டையைக் குழப்புவதால் தமிழ் மக்களின் சேவைசார் தேவைகளை நிறைவேற்ற முடியாது! இதனைத் தொடர்ந்தே அரசு விரும்புகிறது என்பதே அர்த்தமாகிறது.

# மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து இந்திய அரசுக்கு அக்கறை இல்லை

## இந்திய நிரபராதிகளின் மீனவர் சங்கத் தலைவர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ.04

வடக்கு கடற்பரப்பில் இடம் பெற்றுவரும் மீனவர்களது பிரச்சினை பற்றியோ, இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பாகவோ இந்திய அரசு அக்கறை கொள்வது இல்லை.

இந்திய நிரபராதிகளின் மீனவர் சங்கத் தலைவர் விவேகானந்தன் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்.மாவட்டக் கடற்றொழில் சமாசங்களின் தலைவர்களுடனான சந்திப்பு ஒன்று யாழ். மாவட்டக் கடற்றொழில் சம்மேளனத் தலைவர் எமிலியாம்பிள்ளை தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது இங்கு வருகை தந்து இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இரண்டு பகுதிக் கடற்றொழிலாளர்களதும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பான ஒன்றுகூடல் 2004 ஆம் ஆண்டு மன்னாரில் இடம்பெற்றது.

அதன் போது சில விடயங்கள் குறித்துத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இந்த நிலையில் 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமியும் , தொடர்ந்து 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற உச்சக்கட்டப் போர் என்பன காரணமாக இங்கு பேசப்பட்ட விடயங்கள் பின்பற்றப்படவில்லை.

போர் முடிவடைந்தது என்று கூறப்பட்ட நிலையில் 2010 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இந்திய மீனவர் குழுவுடன் பேசப்பட்டது. அப்போது இரண்டு பகுதியினராலும் இது வரவேற்கப்பட்டது.

தமது கடற்பரப்புகளுக்குள் தொழில் செய்வதை விடுத்து இந்திய மீனவர்கள் எல்லையைத் தாண்டி இலங்கைக் கடற்பரப்புக்குள் வரும் போது இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுகின்றனர். இன்றும் அந்த நிலைமை நீடித்துச் செல்கிறது.

இந்திய மீனவர்கள் முன்னர் நூறு படகுகளில் வருவார்கள். தற்போது அவற்றை விட அதிக எண்ணிக்கையான படகுகளுடன் வந்து இலங்கைக் கடற்பரப்பில் தொழில் செய்கின்றனர்.

இந்த நிலையில் இலங்கை மீனவர் ஏற்றுக் கொள்ளும் தீர்வை இரண்டு அரசுகளும் எடுக்க வேண்டும். அப்போதே மீனவர் பிரச்சினை முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்று தெரிவித்தார். (ம-13)

# சிங்கள மொழியில் பயிற்சிப்பட்டறை அரச உத்தியோகத்தர் சிரமத்தில்

யாழ்ப்பாணம்,டிசெ.4

அரச உத்தியோகத்தர்களுக்கு தென்னிலங்கையில் நடத்தப்படும் பயிற்சிப்பட்டறைகள் சிங்கள மொழியில் நடத்தப்படுவதால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து பயிற்சிப்பட்டறைக்காகச் செல்லும் தமிழ் உத்தியோகத்தர்கள் சிரமம் அடைந்து வருகின்றனர்.

தமது மொழி உரிமை மீறப்படுவது தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத் திடம் முறைப்பாடு ஒன்றையும் வழங்கியுள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் தென்னிலங்கையில் அமைந்திருப்பதால் திணைக்களங்களால் நடத்தப்படும் பயிற்சிப்பட்டறைகள் தலைமை அலுவலகங்களிலேயே ,இடம்பெறுகின்றன.

இந்த நிலையில் உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்படும் பயிற்சிப்பட்டறைகள் சிங்கள மொழியில் நடத்தப்படுகின்றன. அதற்கான மொழிபெயர்ப்புக்கள் எதுவும் செய்யப்படுவதில்லை.

இதன் காரணமாக மொழி புரியாமல் நடத்தப்படும் பயிற்சிப்பட்டறைகளால் தமக்கு எந்தப் பயனும் இல்லை என்றும் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளுக்கு பலமுறை எடுத்துக்கூறியும் அதற்கான மாற்று நடவடிக்கைகள் எதையும் அவர்கள் மேற்கொள்ளவில்லை.

எனவே தற்போது இரு மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொண்டுவரும் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் இது தொடர்பான முறைப்பாட்டைப் பதிவு செய்து அரச உத்தியோகத்தர்களுக்கு தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளும் விளங்கக்கூடிய முறையில் பயிற்சிப்பட்டறைகளை நடத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். (ம-14)

காரைநகர் பிரதேச சபைத் தலைவரின்

# வீடு எரிக்கப்பட்ட சம்பவம் மிலேச்சத்தனமான செயல்

யாழ்ப்பாணம்,டிசெ.4

காரைநகர் பிரதேச சபைத் தலைவரின் வீடு எரிக்கப்பட்ட சம்பவம் மிலேச்சத்தனமான செயல். இதனைக் கட்சி சார்பின்றி கண்டிப்பதாக காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் க.பாலச்சந்திரன் தெரிவித்தார்.

சபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை பிரதேச சபைத் தலைவர் வே.ஆனைமுகன் தலைமையில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் க.பாலச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்:-

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதல், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், உதயன் ஆசிரியர் மீதான தாக்குதல்களையும் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இவ்வாறான சம்பவங்கள் தமிழ் மக்களைப் பழைய நிலைமைக்கு கொண்டு செல்வனவாகவே உள்ளன.-என்றார்.

இந்தக் கூட்டத்தில் பிரதேச சபைத் தலைவரின் வீடு தாக்கப்பட்டு எரியூட்டப்பட்டமையை கண்டித்து கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பிவைப்பது குறித்தும் தீர்மானிக்கப்பட்டது. (ம-60)

# குஜ்ரால் மறைவு: அஞ்சலிகளைப் பதிவு செய்யலாம்

யாழ்ப்பாணம்,டிசெ.4

முன்னாள் இந்தியப் பிரதமர்களில் ஒருவரான இந்தர்குமார் குஜ்ரால் மறைவையொட்டி இந்திய அரசு நவம்பர் 30 ஆம் திகதியிலிருந்து டிசெம்பர் 6 ஆம் திகதி வரை ஏழு நாள்கள் தேசிய துக்க தினமாக அறிவித்துள்ளது.

இதனையடுத்து யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணை தூதரகத்தில் பொதுமக்கள் தமது அனுதாபங்களைப் பதிவு செய்யும் வசதிக்காக டிசெம்பர் 4-5 ஆம் திகதிகளில் மு.ப. 10 மணியிலிருந்து 12 மணி வரை அஞ்சலிப் புத்தகம் ஒன்று அவர்களுக்காக வைக்கப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# வினா–விடைப் போட்டி முடிவுதிகதி நீடிப்பு

தென்மராட்சி,டிசெ.4

சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு ஐக்கிய அபிவிருத்தி நிதியத்தின் அனுசரணையுடன் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நடத்தும் எயிட்ஸ் விழிப்புணர்வு வினா விடைப் போட்டிக்கான முடிவு திகதி நாளை மறுதினம் வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிக்கான முடிவு திகதி நேற்று என்று முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்ததாகவும், போட்டியில் கலந்து கொள்பவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க நாளை மறுதினம் வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# வடமாகாண இலக்கியப் பெருவிழா

வடமராட்சி,டிசெ.4

வடமாகாண தமிழ் இலக்கியப் பெருவிழா எதிர்வரும் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இரு தினங்களும் காலை 9 மணிக்கு வடமாகாண தமிழ் இலக்கியத்தின் செல்நெறிகள் என்னும் நிகழ்வுகளாக தமிழர் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் கலை நிகழ்வுகளும இடம்பெறவுள்ளன.

இரண்டாம் நாள் பிறபகல் 2.30 மணிக்கு பண்பாட்டுப் பேரணியும் தொடர்ந்து நல்லதம்பி சிவசுப்பிரமணியம் அரங்கில் கடந்த வருடத்துக்கான சிறந்த நூல் பரிசுத் தேர்வு விருது, ஆளுநர் விருது என்பன வழங்கலும் இடம்பெறும்.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சால் நடத்தப்படும் இந்தப் பெருவிழாவில் கலந்து கொள்ளவரும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பிரமுகர்கள், பேராளர்கள் தங்குவதற்கு வடமராட்சிப் பிரதேசத்தில் தங்கும் விடுதிகள் பல ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப் பிரதேச கல்வி வலயங்களில் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும்

## ஆசிரியர் சங்கம் ஆளுநரிடம் கோரிக்கை

வன்னிப் பிரதேசத்தில் உள்ள கல்வி வலயங்களில் இடம்பெறும் ஆசிரியர் குறைபாடுகள் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் கடந்த 29 ஆம் திகதி வடமாகாண ஆளுநருடன் மேற்கொண்ட சந்திப்பின் போது சில முக்கிய விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளதாக அறிவித்துள்ளது.

இதில் மன்னார், துணுக்காய் ஆகிய கல்வி வலயங்களில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் கோட்டக் கல்வி அதிகாரிகள் நேர்முகப் பரீட்சை இன்றி நியமிக்கப்படுகின்றனர். முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா தெற்கு வலயங்களில் சம்பள நிலுவை வழங்கப்படவில்லை. முல்லைத்தீவு கல்வி வலயத்தில் கணக்காளர் நியமிக்கப்படவில்லை. துணுக்காய் கல்வி வலயத்தில் நிர்வாக அலுவலர்கள் நியமிக்கப்படவில்லை. துணுக்காய் கல்வி வலயத்தில் கடமையாற்றிய மூன்று பாடங்களின் உதவிக் கல்விப் பணிப்பாளருக்கு மீள் விண்ணப்பம் கோரப்பட்டு மூன்று மாதங்கள் கடந்தும் அவர்களுடைய பதவிகளுக்கு மீள நியமனம் வழங்கப்படவில்லை போன்ற பிரச்சினைகள் சுட்டிக்காட்டப்பட்டன.

இதன்போது இலங்கை ஆசிரியர் சங்கத்தால் பின்வரும் விடயங்கள் அடங்கிய கடிதமும் கையளிக்கப்பட்டது.

★ மருத்துவ காரணம் காட்டி இடமாற்றம் கோரும் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் பரிசீலிக்கப்பட்டு காலக்கிரமத்தில் வழங்கப்பட வேண்டும்.

★2011 ஆம் ஆண்டு பதவி உயர்வு சுற்றறிக்கை முழுமையாகப் பெறவேண்டும்.

★அதிபர், ஆசிரியர்கள் தொடர்பான விசாரணைகள் நடைமுறைப்படுத்தும் போது இரகசியத் தன்மை சுயகௌரவம் பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும்.

★அதிபர், ஆசிரியர்கள் அதிகாரிகளின் பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் சட்ட வரையறைக்கு உட்பட்டதாக அமையவேண்டுமே தவிர பழிவாங்கும் நடவடிக்கையாக அமையக்கூடாது.

★ வருடம் முழுவதும் இடமாற்றம் நடைபெறக் கூடாது. இதனால் மாணவர்களின் கல்வியில் பாதிப்பு ஏற்படுவதோடு ஆசிரியர்களின் உளநலமும் பாதிக்கப்படுகிறது.

★அதிகாரிகளின் ஆளணி சீராக்கம் நடைபெறும் போது வலயத்துக்கு வலயம் வேறுபாடு இல்லாமல் வடமாகாணம் முழுவதும் ஒரே நடைமுறை பின்பற்ற வேண்டும்.

★ 2007 ஆம் ஆண்டு இடமாற்றக் கொள்கைக்கு அமைவாக வடமாகாண இடமாற்றங்கள் அமையப் பெறவேண்டும்.

★ 17.6.2012 இல் ஆளுநர் தலைமையில் தீர்மானிக்கப்பட்ட கஷ்ட, அதிகஷ்ட படி தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டு பூரணப்படுத்தப்பட வேண்டும்.

★ 1996 இல் அதிபர் தரம் 2-II நியமிக்கப்பட்டவர்களுக்கு 16 வருடங்களாகியும் தரம் I பதவி உயர்வு வழங்கப்படவில்லை.

ஆகிய கோரிக்கைகள் அதில் அடங்கியுள்ளன. இவற்றுக்கு உடனடியாகத் தீர்வு காணுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (ஐ-422)

## காட்டு யானைகளால் நெடுங்கேணியில் தொல்லை

நெடுங்கேணியில் காட்டு யானைகளின் அட்டகாசத்தால் பகல், இரவு வேளைகளில் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

நெடுங்கேணி பொது விளையாட்டு மைதானப் பகுதியில் யானைகள் மரங்களை முறித்து நாசம் செய்துள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

பகல் நேரங்களில் இந்த யானைகள் குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்து அட்டகாசம் செய்கின்றன. இதனால் தமது தோட்டப் பயிர்களும் நெற்பயிர்களும் நாசமாவதுடன் உயிர் அச்சுறுத்தலும் ஏற்பட்டுள்ளதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-422)

## உடற்கல்வி ஆசிரியருக்கு ஓமந்தையில் செயலமர்வு

வவுனியா வடக்கு கல்வி வலய உடற்கல்வி ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று காலை 8.30 மணிக்கு ஓமந்தை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வருடந்தோறும் வடமாகாணத்தால் புதிய பெரு விளையாட்டுக்கள் பாடசாலை மட்டத்தில் சேர்க்கப்பட்டு வருகின்றன. 2013 ஆம் ஆண்டும் கரப்பந்துப் போட்டிகள் புதிதாகச் சேர்க்கப்பட்டு வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகள் நடத்தப்பட்டு தேசிய மட்டத்தில் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக வடமாகாண கல்வித் திணைக்கள மாணவர் அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சத்தியபாலன் தெரிவித்திருந்தார்.

இதற்கமைய இந்தமுறை நடைபெறும் இந்தச் சுற்றுப் போட்டிக்கு மாணவர்களை பங்குபெறச் செய்வதற்கு வவுனியா வடக்கு கல்வி வலயத்தால் இந்தப் பயிற்சி முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு உடற்கல்வி ஆசிரியர்களையும் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஏனைய ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு வவுனியா வடக்கு கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. மங்கலகுமார் கேட்டுள்ளார். (ஐ-422)

## பேசாலையில் தமிழ் தெரிந்த கடற்படையினர் இல்லாமையால் மீனவர்கள் பெரும் சிரமம்

### மொழி தெரியாதவர்கள் நீண்ட நேரம் காத்திருப்பு

யாழ்ப்பாணம், டிசெ.4

மன்னார் பேசாலைக் கடற்படை முகாமில் தமிழ் தெரிந்த கடற்படை உத்தியோகத்தர்கள் கடமையில் இல்லாத காரணத்தால், ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் பாதிப்படைந்துள்ளனர் எனத் தெரிவித்தார் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.ஸ்ரீ.புஞ்சிஹேவா.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னார் மாவட்டத்துக்குக் கடந்த வாரம் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் குழுவினர் பயணம் ஒன்றை மேற்கொண்டனர். அதன்போது மன்னார் மாவட்ட மீனவர்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாக எம்முடன் கலந்துரையாடினர்.

மன்னார் பேசாலை கடற்படை முகாமில் மீனவர்களுக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் இடத்தில் தமிழ் மொழியில் உரையாடக்கூடிய கடற்படை உத்தியோகத்தர்கள் எவரும் இல்லாத காரணத்தால் சிங்கள மொழி தெரிந்தவர்கள் தமக்கான பாஸ் அனுமதியைக் குறித்த நேரத்தில் பெறுவதுடன், மொழி புரியாத ஏனையவர்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் எம்மிடம் தெரிவித்தனர்.

அத்துடன் சோதனைச் சாவடிகளில் இருந்து விசாரணைகளுக்கு அழைத்துச் செல்பவர்களை உறவினர்கள் பார்வையிடச் செல்லும் போது மொழி புரியாத காரணத்தால் சுமார் 3 மணி நேரம் கழித்து இந்த முகாமில் குறித்த நபர் இல்லை. அவரை வேறு முகாமுக்கு அழைத்துச் சென்று விட்டனர் எனவும் கூறப்படுகிறது. மீனவர்களுக்கு எதிராகத் தவறான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு முறைப்பாடுகள் வேறு விதமாகப் பதியப்படுகின்றன.

இது போன்ற பல்வேறு பிரச்சினைகளை மன்னார் மாவட்ட மீனவர்களும் அவர்களின் குடும்பங்களும் எதிர் கொண்டுள்ளன -என்றார். (த-14)

## இறுவட்டு வெளியீடு

வவுனியா, டிசெ.4

வவுனியா கூடங்குளத்தைச் சேர்ந்த ஆசிரிய மாணவர் எம்.றொபேட் ஜோன்சனின் ''கனவுகள்'' என்னும் இசை இறுவட்டு கடந்த 25ஆம் திகதி வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதற்கான பாடல் வரிகளை யாழ்ப்பாணம் கைதடியைச் சேர்ந்த ஆசிரிய மாணவர் எஸ்.விமல் எழுதியுள்ளார்.

இசையை வவுனியாவைச் சேர்ந்த சி.ரஞ்சன் சிம்சன் அமைத்துள்ளார்.

பாடல்களை எம்.றொபேட், எஸ்.விமல், ட.சுஜாதா ஆகியோர் பாடியுள்ளனர். (த-402)

## தேசிய வாசிப்பு வாரத்தின் நிறைவு நாள் நிகழ்வுகள்

மன்னார், டிசெ.4

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டிய நிறைவுநாள் நிகழ்வுக்ள் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மன்னார் நகரமண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் நகரசபையின் நூலக ஆலோசனைக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த விழாவுக்கு மன்னார் நகரபிதா எஸ். ஞானப்பிரகாசம் தலைமை வகித்தார்.

மன்னார் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம். ஜே. துரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வின்போது இந்த ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வும் மன்னார் மாவட்டத்தில் நூல்களை வெளியிட்ட எழுத்தாளர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மன்னார் நகரசபைச் செயலாளர் வரவேற்புரை நிகழ்த்தினார். மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் வாசிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி சிறப்புரை ஆற்றினார். மன்னார் நகரசபையின் நூலகர் ஹசன் குத்தூஸ் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தார். (க-12)

## மின்சாரம் எப்போது கிடைக்கும் காத்திருக்கும் மாந்தை கிழக்கு மக்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாந்தை கிழக்கு பிரதேச கிராமங்களுக்கு மின்சாரத்தை வழங்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இறுதிப் போரின்போது இடம்பெயர்ந்து கடந்த 2009 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட முல்லைத்தீவு மாந்தை கிழக்கு, சிவபுரம், வவுனிக்குளம், நட்டாங்கண்டல், கரும்புள்ளியான், பாண்டியன்குளம், செல்வாபுரம் உள்ளிட்ட கிராமங்களிலும் ஏனைய இடங்களான பாலைப்பாணி, மூன்றுமுறிப்பு, சிறாட்டிகுளம் போன்ற பகுதிகளுக்கும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. மின்விநியோக நடவடிக்கைக்கான பணிகள் முடிவுற்ற போதும் அதிகாரிகள் அசிரத்தையாக உள்ளனர் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் கடந்த 2010 ஆம் ஆண்டு சில பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படுவதாக தெரிவித்தும் ஒரு சில வீடுகளுக்கு மட்டுமே கிடைத்துள்ளது எனவும் மக்கள் கூறுகின்றனர். (ஐ-6)

## நிரந்தர நியமனம் இன்றி மன்னார் தபால் ஊழியர்கள்

யாழ்ப்பாணம், டிசெ.4

மன்னார் தபால் அலுவலகம் மற்றும் உப தபால் அலுவலகங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட பணியாளர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தபாலகங்களில் 7 பேர் கடந்த 6 வருடங்களாகக் கடமையாற்றி வருகின்றனர். இவர்கள் தமது நிரந்தர நியமனம் தொடர்பில் அங்குள்ள அதிகாரிகளிடமும், உயரதிகாரிகளிடமும் பலமுறை எடுத்துக்கூறியும் இதுவரை உறுதியான பதில் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கின்றனர். தமக்குப் போதிய தகுதிகள் அனைத்தும் உள்ள போதும் நிரந்தர நியமனம் வழங்கப்படாதது குறித்து அவர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

தமது நிரந்தர நியமனம் தொடர்பில் மன்னார் தபால் அலுவலகத்தின் சில மேலதிகாரிகள் தொடர்ந்தும் அசமந்தப்போக்குடன் செயற்படுகின்றனர் என்றும் அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். இது தொடர்பாக மன்னார் பிரதம அஞ்சல் அதிபருடன் தொடர்பு கொள்ள முயன்ற போதும் அது கைகூடவில்லை. (ஐ-12)

## மாற்று வலுவுடையோருக்கு ஸ்கந்தபுரத்தில் உதவிகள்

கிளிநொச்சி, டிசெ.4

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் யாழ்.நல்லூர் லயன்ஸ் கழகத்தின் உதவியுடன் மாற்று வலுவுடையோருக்கான உதவிகள் வழங்கும் நிகழ்வும் விசேட மருந்துவ முகாம் ஒன்றும் ஸ்கந்தபுரத்தில் நடைபெற்றுள்ளன.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் நல்லூர் லயன்ஸ் கழகத்தால் கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இல.1 பாடசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை 9 மணிமுதல் பகல் ஒரு மணிவரை இந்த மருத்துவ முகாம் நடைபெற்றது.

இதில் மாற்று வலுவுடையோருக்கான சக்கர நாற்காலிகள், ஊன்றுகோல்கள் என்பன வழங்கப்பட்டதுடன் தென்னை, தேசி போன்ற பயன்தரு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நடமாடும் மருத்துவ சேவையில் தோல்சார்ந்த நோய்கள், நீரிழிவு நோய், குழந்தைகளுக்கான நோய்கள், கண்பரிசோதித்து கண்ணாடி வழங்கும் நிகழ்வு எனப் பல்வேறு சிகிச்சைகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. (த-6)

## கிளி., முல்லை பொலிஸாரின் மாற்றுவலுவுடையோர் தினம்

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பொலிஸ் பிரிவினால் சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினம் கிளிநொச்சியில் கொண்டாடப்பட்டுள்ளது.

இவ்வாண்டுக்கான சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினத்தையொட்டி விசேட நிகழ்வு ஒன்று கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ் மா அதிபர் என்.டி. நீல் தளுவத்தவின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட பொதுமக்கள் தொடர்பாடல் பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.எல்.அரிப்டீன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினர்கள், சிறப்பு விருந்தினர்கள் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டு விழா மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு நிகழ்வுகள் நடைபெற்றன. நிகழ்வில் மாற்றுவலுவுடையோரின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் என்.டி.நீல் தளுவத்த, முன்னாள் அரச அதிபரும், மகாதேவா ஆச்சிரம சைவச் சிறுவர் இல்லத்தின் தலைவருமான தி.இராசநாயகம், 'ஹன்டிக்கப்' நிறுவனத்தின் பிரான்ஸ் நாட்டின் இலங்கைக்கான பிரதிநிதி செல்வி ஜென் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் சமூக சேவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள், மாற்றுவலுவுடையோர் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 96 லட்சம் ரூபா செலவில் நயினாதீவு வீதி திருத்தம்


நயினாதீவு பெருங்குள வீதி 96 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் இந்த வீதியின் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றன. இந்த வீதி போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்குச் சேதமடைந்து காணப்பட்டது.

தற்போது புனரமைக்கப்பட்டதால் போக்குவரத்து இலகுவாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நயினாதீவின் பெரும்பாலான வீதிகள் வருடக் கணக்கில் புனரமைப்பு அற்ற நிலையில் சேதமடைந்து காணப்படுகின்றன.

நயினாதீவு மகா வித்தியாலய வீதி, விநாயகர் வீதி, நயினாதீவு தெற்கு கடற்கரை வீதி போன்றவை போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றன.

இந்த வீதிகளைப் புனரமைக்கச் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (ம-17)



சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினத்தை முன்னிட்டு யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் மாற்றுவலுவுடைய பயனாளிகளுக்கான உபகரணங்களை ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெற்ற சர்வதேச மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வில் வைத்து வழங்கியது. ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம், ஜெய்ப்பூர் நிறுவனத்தின் தலைவர் திருமதி ஜே.கணேசமூர்த்தி ஆகியோர் சக்கர நாற்காலியை வழங்குகின்றனர். (ம-7)

## கடலேரியோர புற்கள் அகற்றல்

தென்மராட்சி, டிசெ.4

கடலேரியோரப் புற்கற்றைகள் தினமும் வெட்டி வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுவது குறித்துப் பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரியில் இருந்து கச்சாய் வரையான கடலேரி கரையில் வாகனத்தில் வருவோர் புற்களை வெட்டி வாகனங்களில் ஏற்றிச் செல்கின்றனர்.

இதனால் வெள்ளம் வரும் காலங்களில் கடல் எல்லை விஸ்தரிக்கப் படலாம் என்று தெரிவித்தனர்.

பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் காவலரண்களுக்கு அடுக்குவதற்காக இவை வெட்டிச் செல்லப்படுகின்றன என்று கூறப்பட்டது. (ம-9)

## கோப்பாய் பிரதேசத்தில் நடமாடும் சேவையால் நன்மை

யாழ்ப்பாணம், டிசெ.4

கோப்பாய் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற திருமண, இறப்பு, பிறப்புச் சான்றிதழ் வழங்கும் நடமாடும் சேவையில் மக்கள் பெரும் நன்மை அடைந்துள்ளனர் என்று பிரதேச செயலர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

இந்த நடமாடும் சேவை மூலம் 203 பேருக்கு உடனடியாக பிறப்பு உத்தேசச் சான்றிதழ்கள் கிடைத்துள்ளன. அத்துடன் 10 பேருக்கு பிறப்புச் சான்றிதழ்களும் ஒருவருக்குத் திருமணச் சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுடன் இரு இறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன. இந்த நடமாடும் சேவை மூலம் மக்கள் பிரச்சினைகள் இலகுவாகத் தீர்த்து வைக்கப்பட்டன. அச்சுவேலிப் பகுதியில் எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இந்த நடமாடும் சேவையை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலிதெற்கு,வடக்கு, வளலாய், இடைக்காடு, பத்தமேனி, கதிரிப்பாய் போன்ற கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இந்த நடமாடும் சேவையைப் பயன்படுத்தி நன்மை பெறுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-17)

# காலாவதியான மருந்துகள் உடுவில் மருந்தகங்களில் அழிப்பு

வலி.வடக்கு,டிசெ.4

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் காலாவதியான மருந்துகள் இனங்காணப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி அ.ஜெயக்குமார் தலைமையிலான குழுவினர் உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மருந்தகங்கள் மீது திடீர் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன் போது காலாவதியான பெருமளவான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. புன்னாலைக் கட்டுவன், மருதனார் மடம், சுன்னாகம் பகுதிகளில் உள்ள மருந்தகங்கள் மீது இந்த திடீர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த விடயங்கள் தொடர்பாகப் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில்:- பொது மக்களுக்கு வழங்கப்படும் மருந்துகள் உரிய பாவனைத் திகதிக்கு உட்பட்டவையாக இருக்க வேண்டும்.

காலாவதித் திகதிகளைப் பொதுமக்கள் பார்த்து வாங்குவது இல்லை. வைத்தியர்கள் கொடுக்கும் சிட்டையைக் கொடுத்து மருந்து வாங்கினால் சரி என்று நினைக்கின்றனர். மருந்துகளின் காலம் குறித்து கவனம் செலுத்துவதில்லை.

இதனால் நோய்மாறாத நிலைமை காணப்படுவதுடன், பக்க விளைவுகளும் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

மருந்தகங்களும் இந்த விடயத்தில் கவனம் எடுக்க வேண்டும்-என்று கூறினார். (ம-86)

## டெங்கு ஒழிப்பில் சுன்னாகம் பிரதேசசபை

வலி.வடக்கு,டிசெ.4

டெங்கு பரவுவதைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளில் சுன்னாகம் பிரதேச சபையும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது.

உடுவில் பிரதேச வைத்திய அதிகாரி பணிமனையுடன் இணைந்து இந்த நடவடிக்கைகளில் பிரதேச சபையும் ஈடுபட்டு வருகிறது.

டெங்குஒழிப்புநடவடிக்கை தொடர்பாக சுன்னாகம் பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஷ் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் வலி.தெற்கு பிரதேசத்தில் டெங்கு நோயின் தாக்கம் மிகக்குறைவாகவே காணப்படுகின்றது.

மழை காலம் மீண்டும் ஆரம்பிக்கும் போது இவ்வாறான அச்சுறுத்தல்கள் ஏற்படாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கேற்ற வகையில் கழிவகற்றும் நடவடிக்கைகள் சீராக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. டெங்கு பரவும் சூழல்கள் இனங்காணப்படுவது தொடர்பில் அந்தப் பகுதி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன.-என்று கூறினார். (ம-86)

## கற்கடதீவுக் கடலில் காணாமல் போன படகு

### கடற்றொழிலாளர் முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.4

யாழ்.குடாக்கடலில் கற்கடதீவு கடற்பகுதியில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒருவரின் படகு காணாமல் போயுள்ளது. ஞாயிற்றுக்கிழமை இரவு இந்தப் பகுதியில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த படகில் இருந்தவர்கள் திடீரென வீசிய காற்றை அடுத்து மற்றைய இழுவைப் படகுக்கு மாறியுள்ளனர். குறித்த படகை இழுவைப் படகுடன் சேர்த்துக் கயிற்றால் இணைத்துள்ளனர். இந்தநிலையில் இந்தப் படகு, கட்டியிருந்த கயிறு அறுபட்ட நிலையில் காணாமல் போயுள்ளது.

காற்றால் வேறு இடங்களில் இந்தப் படகு ஒதுங்கியிருக்கலாம் என்று கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் படகு காணாமல் போனமை தொடர்பாக மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் சம்பந்தப்பட்ட கடற்றொழிலாளர்கள் நேற்று முறையிட்டுள்ளனர். (ம-17)

## வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வு

தென்மராட்சி, டிசெ.4

சாவகச்சேரி நகர சபையின் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பா.ஜெயகரனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மீன்பிடி நீர்வள அபிவிருத்தி அலுவலக உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி, சாவகச்சேரி ஹற்றன் நஷனல் வங்கிக் கிளை முகாமையாளர் என்.கருணைராஜ் ஆகியோரும் கலந்துகொள்வர்.

நிகழ்வில் உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் எழுத்தாளர்கள், தென்மராட்சி பிரதேச எழுத்தாளர்கள் ஆகியோர் கௌரவிப்பு, தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள், வாசகர்களுக்கு பரிசில்கள் வழங்கல் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறுமென நகரசபை செயலாளர் சு.புத்திசிகாமணி தெரிவித்தார். (ம-9)

## களை நாசினியும் கைவிட்டது

தென்மராட்சி, டிசெ.4

நெல்வயல்களில் விசிறப்பட்ட புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட களைநாசினி பயன் கிடைக்காததால் களை பிடுங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

தென்மராட்சி பிரதேசத்தில் இந்த வருடம் விவசாய மருந்துக் கடையில் விற்பனை செய்யப்பட்ட புதியரக களைநாசினியைப் பெருமளவு நெற்செய்கையாளர்கள் கொள்வனவு செய்து வயல்களில் பயன்படுத்தினர்.

களை நாசினி பயனளிக்காததால் வயல்களில் களைகள் பெருமளவில் காணப்படுவதால் அவற்றை ஆள்களை வைத்து பிடுங்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தனர். (ம-9)

## இராஜ வீதிக்கு விடிவு கிட்டுவது எப்போது?

வலி.வடக்கு,டிசெ.4

கோப்பாய் இராஜ வீதி மிக மோசமான நிலையில் சேதமடைந்து காணப்படுகின்ற நிலையில் இதனைத் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்படாதது ஏன் என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நிலாவரைச் சந்தியிலிருந்து அச்சுவேலி செல்லும் பாதை மிகவும் சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

இந்த வீதியைப் பெரும் எண்ணிக்கையான பயணிகள் பயன்படுத்தி வருகின்றனர். ஆயிரக்கணக்கான விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளுக்காகப் போக்குவரத்துப் பாதையாகவும் இதனையே உபயோகித்து வருகின்றனர்.

இந்த நிலையில் இந்த வீதி குறித்துக் கவனம் செலுத்தப்படாது இருப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-86)

## கொட்டடிப் பகுதி மக்களுக்கு நிரந்தர காணி வழங்கத் திட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.4

கொட்டடி முத்தமிழ் வீதிப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு நிரந்தர காணிகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பகுதிகளில் வாழும் 23 குடும்பங்கள் நிரந்தர வீடுகள் அற்ற நிலையில் உள்ளன.

இந்த நிலையில் வீடமைக்கக் காணி வசதிகள் இன்மையால் முதற்கட்டமாக நிரந்தரக் காணிகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை, இந்தப் பகுதி மக்களுக்குப் பாலர் பாடசாலை, சனசமூக நிலையம், விளையாட்டு மைதானம் போன்றவற்றை அமைத்துக் கொடுப்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருகிறது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு இது குறித்து நடவடிக்கை எடுத்து வருகிறது. (ம)

## இடையூறு செய்தவருக்கு ரூ.6 ஆயிரம் அபராதம்

தேய்ந்த ரயர்களுடன் நடு வீதியில் ஓட்டோவை நிறுத்தி வைத்து போக்குவரத்துக்கு இடைஞ்சல்களைப் புரிந்த சாரதிக்கு பருத்தித்துறை நீதிமன்றில் 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நெல்லியடி நகரப் பகுதியில் நடு வீதியில் ஓட்டோவை நிறுத்தி வைத்திருந்த சாரதி மீது நெல்லியடிப் பொலிஸார் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது ஓட்டோ சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

இதனையடுத்து இரு குற்றச்சாட்டுக்களுக்கும் தலா 3 ஆயிரம்ரூபாவீதம்மொத்தம் 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீன எல்லையில் பாதுகாப்பு உஷார் இந்திய இராணுவத் தளபதி களத்தில்



கொல்கத்தா, டிசெ.4

சீன எல்லையை ஒட்டிய வட கிழக்கு மாநிலங்களில், இராணுவ தளபதி, விக்ரம் சிங் நேற்று முன்தினம் ஆய்வு மேற்கொண்டார்.

இராணுவத் தளபதியாக, கடந்த மார்ச் 31 ஆம் திகதி விக்ரம் சிங் பொறுப் பேற்றதும் வட கிழக்கு மாநிலங்களில் சீன எல்லையை ஒட்டியுள்ள பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்தினார். இதற்காக அவர் சுக்னா, திமாபூர் மற்றும் தேஸ்பூர் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களுக்குச் சென்று பார்வையிட்டார்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் அவர் கொல்கத்தாவிலிருந்து அருணாச்சல பிரதேசம் வரையிலான கிழக்கு பிராந்தியத்துக்கான இராணுவத் தளங்களுக்கு சென்று அங்குள்ள ஏற்பாடுகளைப் பார்வையிட்டார். அவருடன் கிழக்கு பிராந்திய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தல்பிர் சிங் சுகாக் சென்றிருந்தார்.

இராணுவத் தலைமை தளபதியாகப் பொறுப்பேற்கும் முன் இரண்டாண்டுகளுக்கு கிழக்குப் பிராந்திய இராணுவத் தளபதியாக விக்ரம் சிங் பொறுப்பு வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# ஈழத்தமிழகம் கிடைக்காததற்கு காரணம் தமிழர் மத்தியில் ஒற்றுமையின்மையே

**கருணாநிதி குற்றச்சாட்டு**

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து 1961 ஆம் ஆண்டே ஐ.நா. சபைக்கு அண்ணா கடிதம் எழுதினார்.



சென்னை, டிசெ.4

இலங்கையில் ஈழத்தமிழகம்' அமையாமல் போனதற்குக் காரணம் தமிழர்களிடையே ஒற்றுமை இல்லாமை தான் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணியின் 80 ஆவது பிறந்த நாள் விழாவில் அவர் கலந்து கொண்டு பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெரியாருக்குப் பின்னர் அவரது 'சொத்துகளையும் கொள்கைகளையும் வீரமணி பாதுகாத்து வருகிறார். 1949 ஆம் ஆண்டு ராபின்சன் பூங்காவில் நடைபெற்ற தி.மு.க. அறிமுக கூட்டத்தில் பேசிய அண்ணா, இந்த இயக்கம் பெரியாருக்கும், திராவிடர் கழகத்திற்கும் எதிரானது அல்ல. தி.மு.க. வும் தி.க.வும் இரட்டைக் குழல் துப்பாக்கியாக இயங்கும் என்றார்.


இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து 1961 ஆம் ஆண்டிலேயே ஐம்பத் தொரு வருடங்களுக்கு முன்னரே ஐ.நா. சபைக்கு அண்ணா கடிதம் எழுதினார். இலங்கையில் உள்ள 25 லட்சம் தமிழர்களை அழிக்க நினைக்கும் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று அதில் கூறியிருந்தார்.

தற்போது ஸ்டாலின், டிஆர்.பாலு ஆகியோர் மூலம் ஐ.நா. சபைக்கு கோரிக்கை கடிதம் அனுப்பியதை அமைச்சராக இருந்த ஒருவர் விமர்சனம் செய்துள்ளார். இதுதான் விதண்டா வாதம். தமிழன் உருப் படாமல் போனதற்கு இது தான் காரணம்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆயுதம் ஏந்திப் போராடிய போதே தமிழீழம் அமைந்திருக்க வேண்டும். ஆனால் தமிழர்களிடையே ஒற்றுமை இல்லாத காரணத்தால் தான் ஈழத்தமிழகம் கிடைக்கவில்லை. எனவே தமிழீழம் கிடைக்க வேண்டும் என்பதற்காக நானும் வீரமணி, திருமாவளவன் உள்ளிட்டோர் கொண்ட டெசோ அமைப்பு முயற்சித்து வருகிறது - என்றார் அவர். (வ)

## எம்.ஜி.ஆர்.நினைவிடத்தில் இரட்டை இலை சின்னம்

**அமைக்கக் கூடாது என்கிறது தி.மு.க.**



சென்னை, டிசெ.4

சென்னை மெரினா கடற்கரையில் உள்ள எம்.ஜி.ஆர். நினைவிடத்தின் முகப்பில் இரட்டை இலைச் சின்னம் அமைப்பதைத் தடுக்க வேண்டும்என்றுதி.மு.க. சட்டத்தரணி அணி செயலாளர் ஆர்.எஸ். பாரதி வலியுறுத்தி யுள்ளார்.

இதுதொடர்பாக தமிழக தலைமைச் செயலாளர் தேவேந்திரநாத் சாரங்கி, தலைமைத் தேர்தல் ஆணையாளர் வி.எஸ்.சம்பத் உட்பட்டோருக்கு ஆர்.எஸ். பாரதி நேற்று முன்தினம் முறைப்பாட்டு மனு அனுப்பியுள்ளார்.

அந்த மனுவில், எம்.ஜி. ஆர். நினைவிடத்தின் முகப்பாக அ.தி.மு.கவின் இரட்டை இலைச் சின்னம் அமைக்கப்படுவதாக எங்களுக்குத் தெரிய வந்துள்ளது. அரசு பராமரிக்கும் இந்த நினைவிடங்களில் கட்சியின் சின்னத்தை அமைக்க முடி யாது.

அரச நிதியில் இவ்வாறு அமைப்பது தவறானதாகும். பொதுமக்களின் பார்வையில் இரட்டை இலைச் சின்னம் தமிழக அரசின் சின்னம்போல் பார்க்கக்கூடிய நிலை வரும். இது தேர்தல் நேரத்தில் தி.மு.க. உட்பட அனைத்துக் கட்சிகளையும் பாதிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். (வ)



தமிழகத்துக்குத் தேவையான காவிரி தண்ணீர் திறந்துவிட மறுத்த கர்நாடக முதல்வர் ஜெகதீஷ் ஷெட்டரின் கொடும்பாவியை இளைஞர் காங்கிரஸ் அணியினர் எரித்தனர்.

## கேரளாவில் கண்ணகி சிலை



கொச்சி, டிசெ.4

முதன் முறையாக கேரளாவில் கண்ணகி சிலை அமைக்கப்பட உள்ளது.

கண்ணகி குறித்து 16 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே இளங்கோ அடிகள், தனது சிலப்பதிகாரத்தில் வாழ்க்கை வரலாற்றைக் கூறியுள்ளார்.

தமிழ் இலக்கியத்தில் சிலப்பதிகாரம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இந்தநிலையில் கொச்சி அருகே உள்ள மதிலக மாநிலத்திலேயே முதல் கண்ணகி சிலை வடிவமைக்கப்பட உள்ளது. (வ)

## இந்திய – சீன எல்லைப் பிரச்சினை பேச்சு ஆரம்பம்

இந்தியா- சீனா இடையிலான எல்லைப் பிரச்சினைகள் குறித்து 10 ஆண்டு கால வரலாற்றில் உயர்மட்ட அதிகாரிகள் பங்கேற்கும் கூட்டம் நடைபெற்றது.

இதற்கென 3 நாள் பயணமாக இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோச்கர் சிவ் சங்கர்மேனன் பீஜிங் புறப்பட்டுச் சென்றார்.

அவர் அங்கு பாதுகாப்பு துறை அதிகாரிகள் மற்றும் இராணுவத் தொடர்பாளர்களுடன் பேச்சு நடத்தவுள்ளார். அதைத்தொடர்ந்து அவர் சமீபத்திய புதிய தேர்வாளர்களையும் சந்தித்துப் பேசவுள்ளார். (வ)

# இந்திய - பாக். கடல் எல்லையில் 'மிதக்கும் வேலி'

**மத்திய அரசு நடவடிக்கை**

புதுடில்லி, டிசெ.4

இந்தியா - பாகிஸ்தான் இடையேயான எல்லையில் மிதக்கும் வேலி அமைக்க, மத்திய அரசு முடிவு செய் துள்ளது.

அண்டை நாடான பாகிஸ்தானுடன் இந்தியா இன்னும் நிரந்தரமாக எல்லை பிரித்துக் கொள்ளவில்லை. இரு நாடுகளுக்கும் இடையே, ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தை ஒட்டி தற்காலிக எல்லையாக எல்லைக் கட்டுப்பாட்டுக்கோடு உள்ளது. அதேபோல், குஜராத் மாநில எல்லையை ஒட்டிய பகுதியில் ரான் ஒப் கட்ச் எனப்படும் பகுதியிலும் நிரந்தரமான எல்லை கிடையாது. பாலைவனமும், சதுப்பு நிலத்துடன் கூடிய கடலும் சூழ்ந்த அந்தப் பகுதியில் அதிகமாகப் பாகிஸ்தான் தரப்பிலிருந்து ஊடுருவல் இடம்பெறுவது வழக்கம்.

அந்த வகையில் சர் கிரீக் எல்லையில் 96 கி.மீ., தூரம், அடிக்கடி சர்ச்சைக்கு உள்ளாகி வருகிறது. பாகிஸ்தான் மீனவர்கள் அந்தப் பகுதியில்நுழைந்து மீன்பிடிப்பதும் மீனவர்கள் போர்வையில் தீவிரவாதிகள் ஊடுருவதும் அவர்களை இராணுவத்தினர் விரட்டியடிப்பதும், வாடிக்கையாக நடைபெறுகிறது.

இந்தநிலையில் அந்தப் பகுதியில் வேலி அமைக்க முடிவு செய்யப்பட்டது. நிலத்தில் எளிதில் வேலி அமைத்து விடலாம். கடலில் அமைப்பது எப்படி என்று மத்திய அரசு யோசித்தது. மத்திய அரசின் கட்டுமான நிறுவனமான என்.பி.சி.சி., மற்றும் மத்திய பொதுப் பணித்துறை இணைந்து சர் கிரீக் பகுதியின் 96 கி.மீ. தூரத்துக்கு கடலில் மிதக்கும் எல்லை அமைக்க முடிவு செய்யப்பட்டது.

சதுப்பு மண் நிறைந்த கடல் பகுதியில் கம்பங்கள் நட்டு, வேலி அமைப்பது மிகவும் சிரமம் என்பதால், கடலில் மிதக்கும் வகையில் பாலம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. 'காபியான் பொக்ஸ்' எனப்படும் நீள் சதுர அமைப்பில் கம்பி வலைகளைக் கட்டி அதில், கற்களை நிரப்பி, பாலம் அமைக்கப்பட உள்ளது. 'பொன்டூன்' எனப்படும், இருபுறமும் பாலம் போன்ற அமைப்பை ஏற்படுத்தி, அதில் கற்களைக் கொண்டு நிரப்பி மேலே வீதி அமைக்கலாம் என்று கூறப்பட்ட ஆலோசனை நிராகரிக்கப்பட்டது. ஏனெனில் 'பொன்டூன்' பாலம், 96 கி.மீ., தூரம் அமைப்பதற்கு அதிக செலவாகும் என்பதால் எளிதான செலவு குறைந்த 'காபியான் பொக்ஸ்' மூலம் மிதக்கும் பாதை அமைத்து அதன் மூலம் வேலி அமைக்கப்பட உள்ளது. இதற்காக மத்திய அரசு ஆயிரத்து 200 கோடி ரூபா ஒதுக்கியுள்ளது. எளிதில் அணுக முடியாத அந்தப் பகுதியில் மிதக்கும் பாலம் அமைப்பதற்கான முன்னேற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பமாகி விட்டன.

இன்னும் ஒரு சில ஆண்டுகளில் இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் சர் கிரீக் பகுதியில் மிதக்கும் வேலி அமைக்கப்பட்டு விடும் என்று மத்திய பொதுப் பணித்துறை மற்றும் மத்திய கட்டுமான நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெப்போலியன் எழுதிய கடிதம் பெருந்தொகைக்கு ஏலம் போனது

மாவீரன் நெப்போலியன் தனது வெளிவிவகாரத்துறை அமைச்சருக்கு எழுதிய கடிதம் சுமார் 2 லட்சத்து 43 ஆயிரத்து 500 அமெரிக்க டொலருக்கு ஏலம் போனது.

பிரான்ஸ் மன்னர் நெப்போலியன் ரஷ்யா மீது படையெடுத்தார். அப்போது (1812ஆம் ஆண்டு) தனது வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஹியூகஸ் பெர்னார் மாரெட்டுக்கு கடிதமொன்று எழுதியிருந்தார். "ரஷ்யத் தலைநகர் மாஸ்கோவில் உள்ள க்ரெம்ளின் மாளிகையை 22ஆம் திகதி காலை 3 மணிக்குத் தகர்ப்பேன்" என்று அதில் குறிப்பிட்டிருந்தார்.

சங்கேத வடிவில் எழுதப்பட்ட இந்தக் கடிதம் லண்டனில் நேற்றுமுன்தினம் ஏலம் விடப்பட்டது.

இந்தக் கடிதத்தை பிரான்ஸைச் சேர்ந்த கடிதங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் அருங்காட்சியகம் ஏலத்தில் எடுத்தது. எதிர்பார்க்கப்பட்டதைவிட 10 மடங்கு அதிக தொகைக்கு இந்தக் கடிதம் ஏலத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

மாவீரன் நெப்போலியன் பிரான்ஸை 1804ஆம் ஆண்டு முதல் 1815ஆம் ஆண்டு வரை ஆண்டார். தனது 51 ஆவது வயதில் செயின்ட் ஹெலினா தீவில் உள்ள சிறையில் உயிர் துறந்தார்.





## எங்களுக்கு தற்போது தனிநாடு ஒன்று உண்டு

### ஆயிரக்கணக்கானோர் மத்தியில் பலஸ்தீன ஜனாதிபதி பெருமிதம்



"எங்களுக்குத் தற்போது தனிநாடுஒன்றுஉண்டு" என்று பெருமிதத்துடன் தெரிவித்தார் பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ்.

பலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் ஆயிரக்கணக்கான பலஸ்தீனியர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையில் பலஸ்தீனம் தொடர்பாக பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த வாக்கெடுப்பின் மூலம் பலஸ்தீனம் உறுப்பு நாடு அல்லாத கண்காணிப்பாளர் நாடு என்ற அந்தஸ்துப் பெற்றது. இந்த வாக்கெடுப்பில் கலந்துகொண்டு திரும்பிய அப்பாஸுக்கு பலஸ்தீனிய மக்கள்பெரும் வரவேற்பு அளித்தனர்.

"நாங்கள் கடக்க வேண்டிய பாதை நீண்டதாக இருந்தது. கடுமையான அழுத்தங்களை சந்திக்க வேண்டியிருந்தது. ஆனாலும் மனம் தளராமல் போராடினோம். அதன் பயனாகவே இந்த அந்தஸ்தைப் பலஸ்தீனர்கள் அடைந்துள்ளனர். பலஸ்தீன மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்" என்று அப்பாஸ் மேலும் தெரிவித்தார்.

மேற்குக்கரையின் பாலஸ்தீன நிர்வாகமும், காஸாவின் ஹமாஸ் நிர்வாகமும் பிளவுபட்டுநிற்பதுகுறிப்பிடத்தக்கது.



## நேருக்கு நேர் மோதின இரு பஸ்கள்

### 7 பேர் சாவு

எகிப்தில் இரண்டு பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதில் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த 5 பேர் உட்பட 7 பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்துக்கு வீதியின் நிலைமை மற்றும் போக்குவரத்து விதிகளை முறையாகக் கடைபிடிக்க தவறியதே காரணம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த மாதம் பஸ் ஒன்று ரயிலுடன் மோதியதில் 47 பள்ளிச் சிறுவர்கள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிரியாவில் வெடித்தது கார்க்குண்டு; 15 பேர் சாவு

டமாஸ்கஸ், டிசெ. 4

சிரியாவின் மத்திய பகுதியான ஹோம்ஸ் நகரில் நேற்றுக் கார் குண்டு ஒன்று வெடித்ததில் 15 பேர் உயிரிழந்தனர்.

25இக்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குண்டுவெடிப்பில் அந்தப் பகுதியில் இருந்த பல கட்டிடங்கள் சேதமடைந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

## அமெரிக்க கவர்ச்சி நடிகைக்கு பஹ்ரெய்னில் எதிர்ப்பு



அமெரிக்காவின் கவர்ச்சிக் கன்னி கிம் கர்தஷியான் பஹ்ரெயினுக்கு வருகை புரிந்துள்ளதை கண்டித்து பெரும் போராட்டம் வெடித்துள்ளது.

கிம் கர்தஷியானுக்கு உலகம் முழுவதும் ஏகப்பட்ட ரசிகர்கள் உள்ளனர். தற்போது இவர் அரபு நாடான பஹ்ரெயினுக்குசென்றதை அங்குள்ள பழைமைவாதிகள் எதிர்த்துள்ளனர். 50இக்கும் மேற்பட்டவர்கள் கூடி கிம்முக்கு எதிராக போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இதனையடுத்து கலகத் தடுப்பு பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசி கூட்டத்தினரை கலைத்தனர். கிம் பஹ்ரைனின் ரிபா நகரில் மில்லியன்ஸ் ஆப் மில்க் ஷேக்ஸ் நிறுவனத்தைத் திறந்து வைப்பதற்காகவே வந்திருந்தார்.

திறப்பு விழாவுக்கு வருவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு இந்தக் கலவரம் நடந்தது. பொலிஸார் கூட்டத்தினரை அப்புறப் படுத்திய பின்னர் பலத்த பாதுகாப்புடன் கிம் அழைத்து வரப்பட்டார்.

# பணிகளை இடைநிறுத்தியது எகிப்திய உயர் நீதிமன்றம்

### முர்சியின் ஆதரவாளர்களின் முற்றுகையை அடுத்து

எகிப்திய உயர் நீதிமன்றம் தனது பணிகளைக் கால வரையின்றி நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

எகிப்தில் இடைக்கால இராணுவ ஆட்சியின் போது நடந்த நாடாளுமன்றத் தேர்தலில்முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகக் கூறி அந்த நாட்டு உயர்நீதிமன்றம் நாடாளுமன்றைக் கலைக்க உத்தரவிட்டிருந்தது.

ஆனால் எகிப்திய ஜனாதிபதி முர்சி தொடர்ந்து நாடாளுமன்றம் செயற்படும் என்று அறிவித்தார். மேலும் ஜனாதிபதியின் அதிகாரங்களை அதிகரிக்கும் தீர்மானம் ஒன்றையும் வெளியிட்டுள்ளார். இதனால் நீதித் துறைக்கும், அரசுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன.

இந்தநிலையில், அரசமைப்பு வரைவு தொடர்பான தீர்ப்பு வழங்குவது குறித்து நீதிபதிகள் கெய்ரோவில் ஒரு கூட்டத்தை நடத்தத் திட்டமிட்டிருந்தனர். இந்தக் கூட்டத்தை முர்சியின் ஆதரவாளர்கள் போராட்டம் நடத்தித் தடுத்தனர். அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கு முகமாகவே இந்த அறிவிப்பை உயர் நீதிமன்றம் வெளியிட்டுள்ளது.

"எமக்குஎதிராக மேற்கொள்ளப்படும் உளவியல் அழுத்தத்தை எதிர்ப்பதற்காகவே தாம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளோம். அரசமைப்பு வரைபின் சட்டத் தன்மை



குறித்து கேள்வி எழுப்பும் எந்தவிதமான தீர்ப்பையும் ஜனாதிபதி முஹமட் முர்சியின் ஆதரவாளர்கள் எதிர்க்கிறார்கள். எங்கள் மீதான அழுத்தத்தை நீக்கிய பின்னரே நாம் செயற்பட முடியும்.

இன்றைய தினம் எகிப்திய சட்டத்துறை வரலாற்றில் ஒரு கறுப்பு தினம்" என்று எகிப்திய உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.



வத்திகான் நகரில் போப்பாண்டவர் 16ஆவது ஆசீர்வாதப்பரைக் கலைஞர்கள் சந்தித்தார்கள். அப்போது சாகஸ நிகழ்ச்சிகள் நடத்தும் கலைஞர் ஒருவர் கொண்டு வந்த புலிக்குட்டியைத் தொட்டுப் போப்பாண்டவர் ஆசி வழங்கினார்.

## புதிதாக அமையும் மெக்ஸிக்கோ அமைச்சரவையில் மூன்று பெண்கள்

மெக்சிக்கோ ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள என்றிக்கோ பேனா நீட்ரோ 20 பேர் கொண்ட தமது அமைச்சரவையை அறிவித்தார்.

புதிய அமைச்சரவையில் மூன்று பெண்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

புதிய அமைச்சரவையை அறிவித்த நீட்ரோ, "மெக்ஸிக்கோவின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். போதைப் பொருளுடன் தொடர்புடைய வன்முறைகளை இல்லாதொழிக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம் - என்று தெரிவித்தார்.

## பாக். இராமர் கோயில் இடிப்பு; எதிர்த்து மக்கள் போராட்டம்

பாகிஸ்தான் கராச்சி பகுதியில் உள்ள இராமர் கோவில் இடிக்கப்பட்டதைக் கண்டித்து அந்தப் பகுதியில் உள்ள இந்துக்கள் போராட்டம் நடத்தினர்.

கராச்சியின் சோல்ஜர் பஜ்ஜார் பகுதியில் உள்ள இராமர் கோவிலே இடிக்கப்பட்டுள்ளது.

கோயில் சட்டவிரோதமாகக் கட்டப்பட்டுள்ளது என்று கூறியே இடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.


கோவிலைச் சுற்றியுள்ள இந்துக்களின் வீடுகளையும் இடித்து தரைமட்டமாக்கியுள்ளனர். கோவிலில் சிலைகள் மீது அணிவிக்கப்பட்டிருந்த தங்க கிரீடம் மற்றும் நகைகளை கட்டுமான நிறுவனத்தினர் எடுத்துச் சென்றுவிட்டதாக அங்குள்ள இந்துக்கள் தெரிவித்தனர்.



இராமர் கோயில் இடிக்கப்பட்டதைக் கண்டித்து இந்துக்கள் இணைந்து கராச்சி பிரஸ் கிளப் அருகே போராட்டம் நடத்தினர். அப்போது கோயில் இடிக்கப்பட்டமை குறித்து அந்தப்பகுதி நிர்வாகம் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்று குற்றம் சுமத்தினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுரங்கப் பாதைக்குள் விபத்து; 9 பேர் சாவு




ஜப்பானின் முக்கிய தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சுரங்கப்பாதை போக்குவரத்து நெரிசலில் சிக்கி 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

மத்திய ஜப்பானில் உள்ள பெரிய தேசிய நெடுஞ்சாலை சூ எக்ஸ்பிரஸ் வே. இது டோக்கியோ நகரின் மேற்கு பகுதியிலிருந்து 80 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. நேற்று முன்தினம் இங்குள்ள சுரங்க வழியில் போக்குவரத்து நெரிசலில் சிக்கிய கார்கள் ஒன்றுடன் ஒன்று மோதி தீப்பற்றின. இதில் 9 பேர் உயிரிழந்தனர். மீட்பு பணிகள் இன்னும் நடந்து கொண்டு இருக்கின்றன என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இந்தச் சுரங்கப்பாதை ஒரே புகை மண்டலமாக காட்சியளிக்கிறது.

# மூங்கில் புதரில் மறைந்திருந்த போர்க்கால குண்டு வெடித்தது

## வியட்நாமில் 4 சிறுவர்கள் சாவு

வியட்நாம் போரில் பயன்படுத்தப்பட்ட மோட்டார் குண்டு வெடித்ததில் 4 சிறுவர்கள் உயிரிழந்தனர். 5 பேர் படுகாயம் அடைந்தனர்.

வியட்நாம், நியுகியா கிராமத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் மூங்கில் புதரில் இருந்து மோட்டார் குண்டைக் கண்டெடுத்துள்ளனர். அது வெடிகுண்டு என்று அறியாமல் சிறுவர்கள் விளையாடிய போதே அது வெடித்துள்ளது.

இதில் 3 சிறுவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். ஒரு சிறுவன் மருத்துவமனையில் உயிரிழந்தான். மேலும் 5 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

1975ஆம் ஆண்டு போர் முடிவடைந்தது. ஆனாலும் போரில் பயன்படுத்தப்பட்ட குண்டுகளை தெரியாமல் கையாண்டு, அது வெடித்ததில் இதுவரை 42,000 பொது மக்கள் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கடாபியின் அரசியல் எதிரி இறந்து 19 வருடங்களின் பின் உடல் மீட்பு

லிபியாவில் கடாபி ஆட்சி காலத்தில் முக்கிய எதிர்க் கட்சித் தலைவராக இருந்து காணாமல் போன மன்சௌர் அல்-கிகியாவின் உடல் இறந்து 19 ஆண்டுகளுக்குப் பிறகு கண்டெடுக்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது.

கடாபியின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிரான கட்சியில் தலைவராக இருந்தவர் மன்சௌர் அல்-கிகியா. இவர் திடீரெனக் காணாமற் போய் இருந்தார். கிகியா, கடாபிக்கு பயந்து தலைமறைவாகி விட்டதாக கடாபி ஆதரவாளர்களால் இதுவரை கூறப்பட்டு வந்தது.

தற்போது கடாபியின் மறைவுக்குப் பிறகு லிபியாவில் இதுகுறித்து விசாரணை நடந்து வந்தது. இந்த விசாரணகளின் போது கிகியா கடாபியின் ஆதரவாளர்களால் கடத்திக் கொலை செய்யப்பட்டமைதெரியவந்துள்ளது. இவரின் உடல் மறைவான இடம் ஒன்றில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. கிகியா கொலை செய்யப்பட்டு 19 ஆண்டுகள் கடந்த நிலையில் அவரது உடல் கண்டெடுக்கப்பட்டுள்ளது. கிகியா நெஞ்சில் கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். பிரேத பரிசோதனைக்குப் பிறகு நேற்று அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

**ஏவுகணை தயாரிப்பு முயற்சிகளில்**

# வடகொரியாவுக்கு உதவும் ஈரான் இராணுவ நிபுணர்கள்

நீண்டதூரம்சென்றுஇலக்கு களைத்தாக்கக்கூடியஏவுகணை தயாரிக்கும் வடகொரியாவின் முயற்சிகளுக்கு ஈரான் அதிகாரிகள் உதவி புரிவதாக தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் வடகொரியாவின் ஏவுகணை சோதனை முயற்சி தோல்வியடைந்திருந்தது. இதனையடுத்து தனது இரண்டாவது ஏவுகணை சோதனை முயற்சிகளில் வடகொரியா தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

இந்த புதிய ஏவுகணை எதிர்வரும் 22ஆம் திகதிக்குள் சோதனையிடப்படும் என்றும் அறிவித்துள்ளது.

இந்த நிலையில், இந்தப் பணிகளில் ஈரான் நாட்டு அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

''ஈரான் நாட்டு இராணுவத்தைச் சேர்ந்த 4 நிபுணர்கள் வடகொரியா சென்று ஏவு தளத்தில் முகாமிட்டு பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்'' என்று தெரிவிக்கப்படுகிறது. ஈரானும்- வடகொரியாவும் இந்த ஆண்டு தொடக்கத்தில் அறிவியல், தொழில்நுட்ப ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டன. அதன் அடிப்படையில் ஏவுகணை, ரொக்கெட் மற்றும் அணுசக்தி ஒத்துழைப்பை வழங்கி வருவதாக கூறப்படுகிறது.

## ஆயுதக் கொள்வனவில் ஊழல்; 4 இராணுவ அதிகாரிகள் பதவிநீக்கம்

பாகிஸ்தானில் ஆயுத ஊழல் காரணமாக நான்கு இராணுவ அதிகாரிகள் பதவி நீக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கான ஆயுதக் கொள்வனவிலேயே இந்த மோசடி இடம்பெற்றது.

சுமார் 1 கோடி ரூபா ஊழல் நடந்தமை விசாரணைகளின் போது தெரிய வந்தது.

இதையடுத்து நான்கு இராணுவ அதிகாரிகளும் உடனடியாக பதவி நீக்கப்பட்டனர்.

## 4 ஆயிரம் கிலோ வெடிபொருள் பறிமுதல்

**பாகிஸ்தானில் சம்பவம்**

பாகிஸ்தானில் பஸ்ஸில் மறைத்துக் கொண்டுசெல்லப்பட் 4 ஆயிரம் கிலோ வெடிமருந்துகளைப் பொலிஸார் கைப்பற்றினர்.

இஸ்லாமாபாத் அருகே உள்ள நோஷ்கியில் இருந்து குவெட்டா நோக்கி சென்று கொண்டிருந்த ஒரு பஸ்ஸை பாதுகாப்பு அதிகாரிகள் திடீரென வழி மறித்து சோதனை செய்தனர்.

இந்த சோதனையின் போது பஸ்ஸில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 4 ஆயிரம் கிலோ வெடிமருந்துகளை அதிகாரிகள் கண்டு பிடித்தனர்.

உடனடியாகவெடிகுண்டு நிபுணர்கள் வரவழைக்கப் பட்டு அவை சோதனையிடப்பட்டன. வெடிபொருள்களைக் கடத்தியதாகச் சந்தேகப்படும் 5 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



இலங்கை கல்வி நிர்வாக சேவையில் (SLEAS III)
திறமை, மூப்பு, சேவை அடிப்படை யில் பதவி உயர்வுபெற்று மீண்டும் எமது கோப்பாய் கோட்டத்தில் கல்விப் பணிப்பாளராகக் கடமையேற்கும்
உயர்திரு.
**வே.பாலசுப்பிரமணியம்**
அவர்களைப் பாராட்டுவதுடன் அவர் தொடர்ந்தும் பல பதவி உயர்வுகள் பெற்றுக் கல்விச் சமூகத்துக்கு நற்பணியாற்றி நீண்ட காலம் வாழ வாழ்த்துகின்றோம்.
**கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள்**
**லோ.கிரேதாகரன், சோ.தவநடராஜா, வி.கணாதீபன்.**
(26037)(2.6.7)

**வழிபடுநர் மகாசபை உறுப்புரிமை விண்ணப்பம் கோரல் -2013**

மேற்படி எம்மால் 01.12.201 2அன்று பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதற்கு மேலதிகமாக விண்ணப்பப் படிவத்தை உறுதிப்படுத்துபவர்கள் பின்வரும் தகைமை உடையவர்களாக அமைந்திருத்தல் வேண்டும்.

★ சமாதான நீதிவான்
★ இந்து மதகுரு
★ இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்
★ கிராமசேவை உத்தியோகத்தர்.
★ அரசாங்கப் பாடசாலை அதிபர்

மூலம் அத்தாட்சிப்படுத்த வேண்டும் அத்தாட்சிப்படுத்தப்படும் போது பெயர் பொறிக்கப்பட்ட பதவிக்கான றப்பர் முத்திரை பதிக்கப்பட வேண்டும்
அன்னையின் சேவையில்
**செயலாளர், அறங்காவலர் சபை,**
நயினாதீவு ஸ்ரீநாக பூசணி அம்மன் கோயில்.
(சி/3178)(6.7)

**விற்பனைக்கு**

**மாருதி 800 CC கார், கறுப்பு Pleasure மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.**

**175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**
(26042)(2.6)

**உணவகம் வாடகைக்கு**

ஆறுகால் மடம், மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் வைத்தியசாலையுடன் இணைந்த 45 அடி நீள பிரதான அசைவ உணவகம் ..., குளிர் சாதன வசதி, தளபாட, காஸ் வசதிகளுடன் உடன் வாடகைக்குண்டு.
தொடர்பு: நேரில் அல்லது தொலைபேசி ...
021 222 3475
(26034)(2.6) உரிமையாளர்.

# பாராட்டுவிழா

**மு/ சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை புதுக்குடியிருப்பு**

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2012**



2012 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 57 மாணவர்களையும் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகிறோம்.

"எழுவோம் எம் இலக்கை அடைவோம்"

– பாடசாலைச் சமூகம்.
(சி/4176)(2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(43)

காரசாரமான விவாதம் வேண்டாம்

பாபு என்பவன் மிக மிக நல்லவன். மனதில் பட்டதை அப்படியே சொல்வான். பொய் பேசத் தெரியாது. மற்றவர்களைப் புகழத் தெரியாது. அத்துடன் அவர்கள் மனதைப் புரிந்து கொள்ளவும் தெரியாது. கார் சாரதியாக ஒருவரிடம் வேலை செய்து வந்தான். சம்பளம் போதவில்லை.



ஆகையால் வேலையை விட்டுவிட்டு கார் தரகராக வேலை செய்யத் தொடங்கினான். அவனுக்குப் பொய் சொல்லத் தெரியவில்லை என்பதால் அவனால் பணம் சம்பாதிக்க முடியவில்லை. ஒரு காரைக் கூட அவனால் விற்றுத்தர முடியவில்லை. அவன் தோல்விக்குக் காரணம் இதுதான்!

அவனிடம் கார் வேண்டும் என்று சொல்பவர்கள் உடனடியாக ஒரு காரை வாங்க வேண்டும் என்று நினைப்பார்கள். அவனிடம் அம்பாசிடர் கார் ஏதாவது இருந்தால் கொண்டு வரும்படி சொல்வார்கள். அவனும் ஒரு நல்ல காராகக் கொண்டு வருவான். அது வெள்ளை நிறமாக இருக்கும்.

காரை வாங்க நினைத்தவர், 'வெள்ளைக் கார்தானா கிடைத்தது? நீல நிறக் கார் கிடைக்கவில்லையா?' என்பார்.

''நீல நிறமா? ஏகப்பட்ட கார்கள் இருக்கின்றன. ஆனால் வெள்ளைக் கார் மாதிரி வருமா? வெள்ளை நிறக் காரைப் பளபளப்பாகத் துடைத்து வைத்துக் கொண்டாலே போதும். பார்ப்பதற்குக் கவர்ச்சியாக இருக்கும். வெள்ளை நிறம் தான் உயர்வானது. நீல நிறத்தைக் குப்பையில் தள்ளுங்கள் சேர்''

'என்னப்பா அப்படிச் சொல்லிவிட்டாய்? எனக்கு நீல நிறம் பிடிக்கும். அதிர்ஷ்ட நிறமும் நீலம்தான். அதனால் தான் நீல நிறக் கார் கேட்டேன்'.

'அதிர்ஷ்டம் நிறத்தில் இல்லை சேர். நம் மனதில் இருக்கிறது. குருட்டு நம்பிக்கையில் நம்பிக்கை வைக்காதீர்கள்'.

'நீயும் வேண்டாம். உன் காரும் வேண்டாம். போய் வா'.

இப்படியே பாபு தன்னைத் தேடி வந்தவர்களையெல்லாம் விரட்டி விட்டான். பாபுவின் கருத்துக்களை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எண்ணினானே தவிர, மற்றவர்கள் கருத்துக்களை அவன் ஏற்றுக் கொள்ளவில்லை.

''நீல நிறம் தான் எனக்குப் பிடிக்கும். நீல நிறக் கார் தான் எனக்கு அதிர்ஷ்டம் கூட'' என்று யாராவது சொன்னால், 'அதற்கென்ன நீல நிற அம்பாசிடர் கிடைத்ததும் உங்களுடன் தொடர்பு கொள்கிறேன்' என்று பாபு சொல்லியிருக்க வேண்டும். பிறகு-

''உடனடியாக உங்களுக்கு நீல நிறக் கார் வேண்டுமானால், நான் ஒரு யோசனை சொல்கிறேன். இந்தக் காரின் இஞ்ஜின் நல்ல நிலையில் இருக்கிறது. ஒன்றும் வேலை செய்யத் தேவையில்லை. விலையும் மிகவும் நியாயமாக இருக்கிறது. வாங்கி உடனே பயன்படுத்திக் கொள்ளுங்கள். கொஞ்ச நாள் பொறுத்து நீல நிறக் கலர் அடித்து விட்டால் போகிறது'' என்று சொல்லியிருந்தால், காரை வாங்க வந்தவர், 'நீ சொல்வதும் சரிதான்' என்று ஒப்புக் கொண்டிருப்பார்.

''ஹிட்லர் சர்வாதிகாரிதான். ஆனால் மிக நல்லவன்'' என்று யாராவது பேசினால், அவன் கருத்தை எதிர்த்துப் பேசுவதால் பயனில்லை. அவன் சொல்வதை நாம் ஒப்புக் கொள்ளத் தேவையில்லை. ஹிட்லர் யூதர்களைப் பூண்டோடு அழிக்க வேண்டும் என்று இலட்சக்கணக்கானவர்களை இரண்டாவது உலக யுகத்தின்போது கொன்றுவிட்டான். விஷப் புகையைச் செலுத்திக் கொன்றான். பிறகு, அவர்கள் எலும்புகளை வைத்தே சாலைகள் கூடப் போட்டானாம்!

அப்படிப்பட்ட மாபாதகன் ஹிட்லரைக்கூட ஒருவன் பாராட்டுகிறான் என்றால், அவனை எதிர்த்துப் பேசி விவாதத்தில் இறங்கினால், விவாதத்தில் வெற்றி கிடைக்கலாம்.

ஆனால் நாம் ஒரு நண்பனை இழந்து விடுவோம். விவாதத்தில் நாம் வெற்றிபெற முடியாவிட்டாலும் சரி, நண்பனை இழப்பது உறுதி.

ஹிட்லர் கொடியவன், உலகத்தையே கட்டிப் பிடித்து சர்வாதிகாரியாக ஆளவேண்டும் என்று நினைத்தான். இதை உலகம் அறியும். அப்படியிருக்க, ஒருவன் முட்டாள்தனமாக அவன் நல்லவன் என்றால், அதை நாம் மறுத்துப் பேசி வீண் விவாதம் செய்வானேன்?

குறிப்பாக ஓர் உண்மையை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மேடையில் ஒருவர் தவறான கருத்து ஒன்றையோ, தவறான தகவலையோ சொல்கிறார் என்றால், அதை உடனே மறுத்துப் பேசி எதிர்க்கக்கூடாது. ஒரு சர்ச்சையை உண்டாக்கித் தவறான கருத்து சொன்னவரின் மானத்தை வாங்கக் கூடாது.

மற்றவர்கள் முன் ஒருவர் இழிவுபடும்போது, திரும்பத் திரும்பத் தான் கூறியதுதான் சரி என்று அடித்துச் சொல்வாரே தவிர, தான் கூறியது தவறு என்று ஒப்புக் கொள்ள மாட்டார். மாறாக- தன்னை எதிர்த்து வாதாடியவரைத் தன் எதிரியாக நினைப்பார்.

தமிழ்வாணன் (தொடரும்)

# வறிய மாணவர் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உழைக்கும் தியாகி

## பிறந்த தின உதவித்திட்ட நிகழ்வில் மக்கள் குழு இணைப்பாளர் பரமநாதன்

யாழ்ப்பாணம், டிசெ.4

யாழ். மாவட்டத்தில் சமூக சேவைகளுக்கு முன்னுதாரணமாக கடந்த 10 வருடகாலமாக தியாகி அறக்கொடை நிலையம் செயற்பட்டு வருகிறது.

இந்த சேவையால் ஏழை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு ஒளியேற்றப்படுகிறது. வறிய மக்களின் வாழ்வாதாரமும் மேம்படுத்தப்படுகின்றது.

இவ்வாறு சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு இணைப்பாளர் சு.பரமநாதன் தெரிவித்தார்.

தியாகி அறக்கொடை நிலைய ஸ்தாபகர் வாமதேவா தியாகேந்திரனின் 61 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கு உதவித் திட்டம் வழங்கும் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். தியாகி அறக்கொடை நிலையத்தின் சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:-

சமூக சேவைகளைச் செய்பவர்கள் தமக்கு பெயர், புகழ் கிடைக்க வேண்டும் என்று நினைக்க மாட்டார்கள். அந்த வகையில் கடந்த 10 வருடகாலமாகப் பலதரப்பட்ட சமூக சேவைகளைச் செய்தும் அதற்கான புகழ் சமூகத்திடம் இருந்து கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்காமல் சேவை மனப்பான்மையுடன் தனது உழைப்பை சமூகத்துக்கு பயன்படுத்தி வருபவர் தியாகி.

இவரது பெயரால் இந்த நிலையம் செய்து வரும் பணிகள் பாராட்டக் கூடியவை. மக்களின் தேவை உணர்ந்து சூழலுக்கு ஏற்ப சேவையை வழங்கி வருகின்றமை பாராட்டுக்குரியது- என்றார்.

நிறுவனப் பணிப்பாளர் செ.கமலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழுத் தலைவர் இரா. செல்வவடிவேல், நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. மாணிக்கராஜா, யாழ். மத்தியஸ்தர் சபைத் தலைவர் வி. சக்திவேல், நாடாளுமன்ற தகவல் இணைப்பாளர் ப.சுதர்சன் ஆகியோரும் சமயக் குருமுதல்வர்களாக நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், புனித யோசப் குருமட அடிகளார் வண பி.சத்தியசீலன், வண மீக ஹஜந்துரே ஸ்ரீவிமல தேரர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் 100 பாடசாலை மாணவர்களுக்கு உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

தியாகி அறக்கொடை நிலையத்தின் சிறுவர் இல்ல மாணவர்களின் வரவேற்பு நடனம், பேச்சு, பாடல் என்பனவும் இடம் பெற்றன.

(ம-14)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை இந்து மன்றக்கலை விழாவிலும் பரிசளிப்பு விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண விவசாயத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் கலாநிதி எஸ். சிவகுமாரின் பாரியார் யோகேஸ்வரி சிவகுமார் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குகின்றார். (ம-8)

## புதிய அதிபர் நியமனம்



வடமராட்சி, டிசெ.4

புலோலி மேற்கு தம்பசிட்டியைச் சேர்ந்த பரஞ்சோதி செல்வவிநாயகம் கட்டைவேலி ஞானாசாரியார் கல்லூரியின் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிபர் செ.ஸ்ரீஇராமச்சந்திரன் பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றுச் சென்ற இடத்துக்கே இவர் வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

எம்.ஏ. பட்டமேல் கல்வி டிப்ளோமா பட்டதாரியான இவர் இலங்கை அதிபர் சேவை II ஐச் சேர்ந்தவராவர். இவர் புலோலி மெ.மி.த.க. பாடசாலை, வதிரி திருஇருதயக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் ஆவார். (எ-8)

## பேச்சுப் போட்டியில் முதலாமிடம்



சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக கலாசார மற்றும் இலக்கிய தேசியமட்டப் போட்டியில் யாழ்.முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் உயர்தரம் கலைப்பிரிவில் கல்வி கற்கும் மாணவியான நா.சிந்துஜா மேற்பிரிவு பேச்சுப் போட்டியில் பங்குபற்றி முதலாம் இடத்தையும், தனிப் பாடல் போட்டியில் ஐந்தாம் இடத்தையும் பெற்றுள்ளார். இவர் திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் சைவச் சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்து கல்வி கற்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சித்திரப் போட்டியில் வெற்றிபெற்றோர்

யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தால் நடத்தப்பட்ட அழகியல் போட்டியில் சித்திர பாடத்தில் வெற்றி பெற்றோர் விவரங்கள் வெளிவந்துள்ளன.

பிரிவு 1, ஆக்க அலங்காரச் சித்திரம்

1 ஆம் இடம்-க.ரேனுசன் (ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி), 2 ஆம் இடம்- ப.லோகசனன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), 3ஆம்இடம்-அ.டெனின் (சென். ஜேம்ஸ் ம.வி.).

கருத்து வெளிப்பாட்டுச் சித்திரம்

1 ஆம் இடம்-க.றோஜினி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), 2 ஆம் இடம்-உ.ராம்ஜி (அச்சுவேலி மத்திய கல்லூரி), 3 ஆம் இடம்-எஸ்.அகல்யா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

சித்திர அறிவுப்போட்டி

1 ஆம் இடம்-சு.கஜன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), 2 ஆம் இடம்-[illegible] (பெரியபுலம் ம.வி.), 3 ஆம் இடம்-ந.தர்சன் (பெரியபுலம் ம.வி.).

பிரிவு 2, ஆக்க அலங்காரச் சித்திரம்

1 ஆம் இடம்-த.சந்துரு (அத்தியார் இந்துக் கல்லூரி), 2 ஆம் இடம்-ம.கீர்த்தனா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம்-சி.சஞ்சிகா (வைத்தீஸ்வராக் கல்லூரி).

கருத்து வெளிப்பாட்டுச் சித்திரம்

1 ஆம் இடம்-உ.முரளீதரன் (கனகரத்தினம் ம.வி.), 2 ஆம் இடம்-ச.கிறிஸ்ரின் டிலானி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), 3ஆம் இடம்-ஆ.கண்ணதாஸ் (ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி).

பொருள் பார்த்து வரைதல் சித்திரம்

1 ஆம் இடம்-சு.சர்மிளா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம்- பி.கபில்ராஜ் (யாழ்.மத்திய கல்லூரி), 3 ஆம் இடம்-வி.சஞ்ஜீவன் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி). (எ)

## கர்நாடக சங்கீத போட்டி முடிவு

வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையால் பிரதேச மட்டத்தில் நடத்தப்பட்ட கர்நாடக சங்கீத இசைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வெளிவந்துள்ளது.

தனி இசை கீழ்ப்பிரிவு- 1 ஆம் இடம்-தி.ஜனனி (பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.), 2 ஆம் இடம்-மு.சுர்மினி (தொல்புரம் மத்தி, சுழிபுரம்), 3 ஆம் இடம்-ச.சாரங்கா (பொன்னாலை மேற்கு, சுழிபுரம்).

தனி இசை மேற்பிரிவு- 1 ஆம் இடம்-பா.டெசிந்தா (தொல்புரம் மத்தி, சுழிபுரம்), 2 ஆம் இடம்-சி.வான்மதி (பண்ணா கம் மெய்கண்டான் ம.வி.), 3 ஆம் இடம்-ஆ.டிசாயினி (சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு).

குழு இசை கீழ்ப்பிரிவு- 1 ஆம் இடம்-மாணவர்கள் (வட்டு இந்துக் கல்லூரி), 2 ஆம் இடம்-மாணவர்கள் (கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் அறநெறிப் பாடசாலை, வட்டு மேற்கு), 3 ஆம் இடம்- மாணவர்கள் (சங்கானை மாவடி ஞானவைரவர் அறநெறிப்பாடசாலை).

குழு இசை மேற்பிரிவு- 1 ஆம் இடம்-மாணவர்கள் (விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்). - (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா சர்ச்சி. மூன்றாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மானு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்புரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சஹாரா ரன்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# அணைக்கமுடியா நெருப்பு

அசோகவனத்தில் காற்று நுழைந்தால் கூடக் கண்டுபிடிக்கும் தன்மையோடு அரக்க சேனைகள் விழிப்போடு இருந்தன. தம்மை மீறி எதுவும் நடந்துவிடாது என்ற இறுமாப்பு அவர்களுக்கு. ஆனால் அனுமன் அவர்களை விடக் கெட்டிக்காரன். உடல் வலுவில் மாத்திரமல்லாது புத்தியிலும் கூர்மையானவன். அரக்க சேனையின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, திட்டமிட்டபடி மாலையில் குறிப்பிட்ட நேரத்தில் அசோக வனத்துக்குள் குதித்தான். சீதையைச் சந்தித்தான். கணையாழியைக் கையளித்தான். இராமனின் காதலை அவளுக்குச் சொன்னான். சீதை இராமனின் நினைவுகளில் மூழ்கிப் போனாள்.

அசோக வனத்துக்குள் அனுமன் புகுந்த செய்தி, எல்லாம் முடிந்த பின்னரே இராவணனின் காதுகளுக்குள் எட்டியது. கொதித்துப்போனான்.

''என்னுடைய கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில், என் உத்தரவையும் மீறி சீதையைச் சந்திக்க அனுமனுக்கு என்ன துணிச்சல்? அதுகூடப் பரவாயில்லை. சீதையே மறந்திருந்த இராமனின் நினைவுகளை மீண்டும் அவள் மனதில் விதைத்துவிட்டானே இந்த அனுமன்.'' கோபத்தில் அவன் கண்கள் சிவந்தன. ''அடித்து இழுத்து வாருங்கள் அந்த வானரத்தை'' என்று கட்டளையிட்டான். அவனது உத்தரவுக்கு கீழ்ப்படிந்த அரக்க சேனைகள் அனுமன் இருக்கும் இடத்துக்கு விரைந்தன. பெரும் பிரயத்தனத்தின் மத்தியில் அனுமன் கட்டுண்டான். அரண்மனைக்குள் இழுத்துவரப்பட்டான்.

விசாரணை ஏதுமின்றியே அனுமன் மீது நிறையக் குற்றச்சாட்டுகள் அள்ளி வீசப்பட்டன. அவனின் கருத்து எதையும் கேளாமலேயே ''இந்த வானரத்தின் வாலில் மூட்டுங்கள் தீயை. எரிந்து சாம்பலாகட்டும்'' என்று தீர்ப்பிட்டு எழுந்து போனான் இராவணேசன்.

அனுமனின் ஆற்றல் பற்றி பத்துத்தலையோன் அறிந்திருக்கவில்லை. பார்ப்பதற்கு சாதுபோன்று இருந்த அனுமன், தன் வாலில் மூட்டப்பட்ட தீயைக் கண்டதும் விஸ்வரூபம் எடுத்தான். அனுமனை அழிக்கவென இராவணன் மூட்டிய தீ, இலங்காபுரியில் எல்லாத் திக்குகளிலும் பரவியது. தீக்காட்டுக்குள் மூழ்கிப்போனது இலங்கை.

இது இதிகாசம் சொல்லிச்செல்லும் கதை. அனுமனால் எரிக்கப்பட்ட பகுதிகள் இவைதான் என்று சில இடங்கள் இன்னமும் அடையாளப்படுத்தப்படுகின்றன. அனுமனைக் கொல்லவென மூட்டப்பட்ட தீ எவ்வாறு ஒட்டுமொத்த இலங்கையையும் எரித்ததோ அதேபோன்று இப்போதும் ஒரு தீ இங்கு மூண்டுள்ளது.

இந்தத் தீயை மூட்டியது படையினர். அனுமன் சீதைக்கு இராமனின் நினைவை கிளர்ந்தெழச் செய்தது போன்று, மாவீரர் பற்றிய நினைவுகளை மக்களிடம் பல்கலை மாணவர்கள் விதைத்துவிடுவார்களோ என்ற பயம் நீண்ட காலமாகவே பேரின அரசுக்கு உண்டு. எனவே இந்தமுறை பல்கலை மாணவர்கள் மீது கொஞ்சம் கடுமையாக நடக்க எண்ணியது. 'சிறுபிள்ளைகள் தானே. சும்மா இரண்டு அடி கொடுக்க அடங்கி விடுவார்கள்' என்ற நினைப்பில்தான் பல்கலை மாணவர்கள் மீது படைத் தரப்பு கைவைத்தது.

ஆனால் தம்மீது படைத்தரப்பு கைவைத்த பின்னர்தான் தம்முடைய விஸ்வரூபத்தை பல்கலை மாணவர்கள் காட்டியுள்ளனர். ஒரு படத்தில் நடிகர் அஜித் ''நான் தனிமரம் அல்ல; தோப்பு'' என்று சொல்வார். அதுபோன்று தாமும் தனித்தவர்கள் அல்ல என்பதை மாணவர்கள் நிரூபித்துள்ளனர். பல்கலை மாணவர்கள் மீது நிகழ்த்தப்பட்ட அராஜகத்தைக் கண்டித்து இலங்கையில் உள்ள ஏனைய பல்கலைக்கழக மாணவர்கள் இன, மத, மொழி என்ற பேதங்களைக் கடந்து போராட்டத்தில் குதித்துள்ளனர். ''மாணவர்களைத் தாக்காதே. கைது செய்தவர்களை உடனே விடுவி'' என்று ஒரேதொனியில் தமது மூச்சு முட்டுமளவுக்கு குரல் எழுப்புகிறார்கள். புலம்பெயர் நாடுகளிலும் போராட்டங்கள் வெடித்துள்ளன. அத்தோடு கட்சி பேதங்களைக் கடந்து போராடுவதற்காக பொது அமைப்புகளும் இன்று யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டக் களத்தில் இறங்கவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் மாணவர்கள் மீது படைகள் மூட்டிய தீ இப்போது அவர்கள் எதிர்பாராத வகையில் நாலெங்கும் மூண்டுள்ளது. எப்படி அதனை அணைப்பது என்று தெரியாமல் இராவணனைப் போன்று தடுமாறுகிறது இலங்காபுரி அரசு.

# சர்வதேச ஆதரவை இழக்கிறது இலங்கை

**கந்தவனம் கோணேஸ்வரன்**

எங்கள் பிரச்சினைகளை நாங்களே பேசித் தீர்வு காண முடியுமாக இருக்கும்போது வெளியார் ஏன் தலையிட வேண்டும்? வெளியாரின் தலையீடு எங்களுக்கு அசௌகரியமாக இருக்காதா, என்று கேட்டிருக்கிறார் இலங்கையின் மூத்த அரசியல்வாதிகளுள் ஒருவரான அமைச்சர் திஸ்ஸ விதாரண.

பலம் பொருந்தியதும் பொருள் நிரம்பியதுமான இந்தக் கேள்வியை அமைச்சர் ஜனாதிபதியைப் பார்த்தல்லவா கேட்டிருக்க வேண்டும்.?

### கெடுப்பார் இல்லாது கெட்டுப்போகும் மஹிந்தர்

வள்ளுவர் குறிப்பிட்டதுபோல் 'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னனாக' ஜனாதிபதியை வைத்துக்கொண்டு எல்லா அமைச்சர்களது அறிவுரைகளும் அரசியல் உரைகளும் தமிழ் மக்களைப் பார்த்துத்தான் பேசப்படுகிறதேயொழிய, கெடுப்பார் இல்லாமலேயே கெட்டுப்போய்க்கொண்டிருக்கின்ற ஜனாதிபதியைப் பார்த்துப் பேசப்படுவதில்லை. அவ்வாறு பேசினால் ஜனாதிபதியின் கோபத்துக்காளாகி அரசியல் அதிகாரங்களைப் பறிகொடுக்க நேருமோ என்ற பயம் இவர்களுக்கு.

இலங்கையின் ஆட்சியாளர்கள் நேர்மையானவர்கள் போலவும் இவர்களது நேர்மையைப் புரிந்துகொள்ளும் திறன் இல்லாமல் தமிழர்கள்தாம் ஆட்சி முறைமைக்குக் குந்தகம் ஏற்படுமாற்போல் நடந்து கொள்வது போலவும் ஒரு விதக் கற்பனை உலகத்தில்தான் இலங்கை அமைச்சர்களில் பெரும்பாலானோர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டுத் தமிழர்கள் முரண்பாடுகளை வளர்த்துவிடும் இனமாகவே இவர்கள் பார்வையில் தெரிகிறார்கள்.

### நித்திரை விட்டெழுந்த தேசப்பற்று இயக்கம்

இப்போது தேசப்பற்றுள்ள இயக்கத்தின் பொதுச் செயலாளர் வசந்த பண்டார என்பவர் எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் கொண்டுவரப்படுவது உறுதியாகிவிட்டது என்றதொரு விடயத்தைப் புதிதாகக் கண்டுபிடித்து நித்திரையால் எழுந்து தெரிவித்திருக்கிறார்.

இது தமிழின வெறுப்பின் அடையாளமா அல்லது நாட்டுப்பற்றால் விளையும் ஞானோதயமா என்பது நாட்செல்லத்தான் புரியும்.

பொதுமக்களிடம் முக்கியத்துவம் பெறும் இந்த அமைச்சர்கள் எல்லோரும் ஒன்று கூடி மாண்புமிகு ஜனாதிபதியைச் சந்தித்து ஐயா, தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான அதிகாரம் தங்களிடம் இருக்கிறது. அதற்கான பலமும் அரசிடம் இருக்கிறது. காலநேரமும் இப்போது சரியாக இருக்கிறது. அரசியல் அறிஞர்கள் எம்மிடம் இருக்கிறார்கள். இந்த வளங்களைப் பயன்படுத்தி ஒரே மாத காலத்துக்குள் சிங்கள மக்களின் சந்தேகங்களும் தமிழர்களின் அவலங்களும் நீங்குமாற்போல் ஒரு சிறந்த தீர்வைக் கண்டு இலங்கையை வழிநடத்துங்கள் என்று எப்போதாவது கேட்டிருக்கிறார்களா?

### தமிழர் பகுதிகளில் புத்தர் சிலை வைப்பது பௌத்தத்துக்கு அழகல்ல

இந்து மக்களும் புத்தரின்பால் மதிப்புக் கொண்டவர்கள்தாம். அவர்களும் புத்தபிரானை வணங்குகிறார்கள். ஆனால் ஆக்கிரமிப்புச் சின்னம் போல் தமிழர் பகுதிகளில் ஆங்காங்கே புத்தர் சிலைகளை வைப்பது பௌத்தத்துக்கு அழகல்ல. வணக்கத்துக்குரிய [illegible] தாமல்ல என்று எந்தப் புத்த பிக்கு வாவது ஜனாதிபதியிடம் கண்டிப்பான தொனியில் சொல்லியிருக்கிறார்களா?

இப்படி எதுவும் இலங்கை அரசியலில் நடந்ததில்லை. தமிழர் சார்பில் அமைச்சரான முருகேசு திருச்செல்வத்தைத் தவிர தனது இலட்சியத்துக்காக அமைச்சுப் பதவியைத் தூக்கி எறிந்தவர் எவருமில்லை. இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்ல அமைச்சராக பதவியேற்பதால் மட்டுமே இவ்வாறு துணிச்சலாக நடந்துகொள்ள முடியும். மாறாக அமைச்சராவதே இலட்சியமாகக் கொண்டு வாழ்பவர்களிடம் மக்கள் இத்தகைய ஆரோக்கியமான செயல்பாடுகளை எதிர்பார்க்க முடியாதுதான்.

### தட்டிக்கேட்டும் திறனில்லா பம்மி அமைச்சர்கள்

ஆனால், உண்மையில் இலங்கை அமைச்சர்கள் எவருக்காவது தட்டிக் கேட்கும் திறன் இருந்திருந்தால் நாடு இவ்வளவு தூரம் கையறு நிலைக்குப் போயிருக்காது. அமைச்சர்களுக்கு ஜனாதிபதியின் அன்பும் கடைக்கண் பார்வையும் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் ஜனாதிபதிக்கு அமைச்சர்களின் ஆதரவும் நல்லெண்ணமும். ஆனால் பதவிப் பித்துக் காரணமாக அமைச்சர்கள் எல்லோரும் தமது ஆதரவுதான் ஜனாதிபதிக்குப் பலம் என்பதை சௌகரியமாக மறந்துபோய் விட்டார்கள்.

அதுவுமல்லாமல் ஜனாதிபதியின் சிந்தனைதான் உலகமகா சிந்தனை போல் பாவனை செய்துகொண்டு பொது மக்களிடம் பேசியும் வருகிறார்கள். இந்தப் போக்கு பிரேமதாஸ, ஜே.ஆர். காலத்திலும் இடம் பெற்றிருந்தது. ஒரு காலத்தில் பிரேமதாஸ உலகப் பெருந் தலைவராக தன்னைப் பாவனை செய்து கொண்டதையும் அதனையே பிரேரேற்கொண்டு அமைச்சர்களும் ஆமாம் என்று வியந்ததையும் மக்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

ஜே.ஆரின் ஓரவிழிப் பார்வை இந்த உலகையே அசைத்து விடும் என்பது போல அன்றைய அமைச்சர்கள் பேசித் தங்கள் வயிற்றை நிரப்பிக் கொண்டதையும் மறந்துவிட முடியாது.

இவையெல்லாம் ஆரோக்கியமான அரசுக்கு அழகானவையல்ல. இலங்கையின் முன்னேற்றத்துக்கு உகந்தவையல்ல. மக்களின் பிரச்சினைகளை இனங்காணும் திறனற்றவர்கள், சிறுபான்மை இனங்களை அணைத்துச் செல்லும் வகையற்றவர்கள், ஆட்சி பீடத்தில் இருப்பதால் யாருக்கும் எந்த இலாபமும் இல்லை.

### தம் இனத்தைப் படுகுழியில் தள்ளும் முஸ்லிம் அமைச்சர்கள்

முஸ்லிம்களுக்கு வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுத்தோம்: எமது பகுதிகளை அபிவிருத்தி செய்தோம் என்று இவர்கள் கூறுவார்களானால் மனமறிந்தே தம் இனத்தைப் படுகுழியில் தள்ளுகிறார்கள் என்றுதான் கொள்ள வேண்டும். அரசியலில் கையறு நிலையில் இருக்கிறார்கள் என்றுதான் நம்ப வேண்டும்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை விட்டுத்தள்ளுங்கள். அவர்கள் பேச்சுக்கு வராவிட்டாலும் பரவாயில்லை. சிறுபான்மை மக்களின் மனக்குமுறல்களைக் களைய இலங்கை அரசிடம் என்ன தீர்வு இருக்கிறது என்றாவது இவர்கள் கேட்டிருக்க வேண்டாமா?

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தடையாக இருக்கிறது என்று நாக்கூசாமல் பேசுகின்ற இவர்கள் சரியான ஒரு தீர்வை தாமாகவேனும் முன்வைத்து இதனை முன்னெடுத்துச் செல்லுங்கள்: இல்லையேல் நாம் அரசிலிருந்து விலகிவிடுவோம் என்று எப்போதாவது சொல்லத் துணிந்திருக்கின்றார்களா? மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில்கூட்டாட்சி என்ற கோஷத்தை ஜனாதிபதியின் காதுகளுக்குள் மெதுவாக வேனும் முணுமுணுத்திருக்கிறார்களா?

ஜனாதிபதி முதற்கொண்டு எல்லா அமைச்சர்களும் இலங்கையில் பிறந்தவர்கள்தாம். இலங்கை அரசியலையே பிழைப்பாதாரமாகக் கொண்டவர்கள் தாம். இலங்கையில் என்ன நடக்கிறது, இந்தப் பிரச்சினை யாரால் தோற்றுவிக்கப்பட்டது, இதற்கு என்ன பரிகாரம் என்பவற்றை யாரும் இவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை.

### தமிழர் ஏற்கும் தீர்வை அரசு தாமாக முன்வைத்தால் அது செயல் வடிவம் பெறும்

தமிழர்களின் மனக் குமுறல்களை இவர்கள் ஆணைக்குழு வைத்து ஆராய வேண்டியதில்லை. பட்டவர்த்தனமாகத் தெரிகின்ற விடயங்களுக்குப் பலமாதங்கள் கூடிப் பேசவேண்டியதில்லை. தமிழ் மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வுத்திட்டத்தை அரசு தாமாகவே முன்வைக்குமானால் அது நிச்சயமாக செயல்வடிவம் பெறும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் கூட அதைத் தடுத்து நிறுத்திவிட முடியாது.

ஆனால் உண்மையில் நடப்பதென்ன? கடும் போக்காளர்களை அமைச்சர்களாக வைத்துக்கொள்வது, அவர்கள் இஷ்டப்படி கதையளக்க ஊக்குவிப்பது, அதற்கு கருத்துச் சுதந்திரமென பெயர் வைப்பது, பின்னர் ஒன்றைச் செய்ய முற்படும்போது சிங்கள மக்களின் பேரெதிர்ப்பு எழுகிறது. அதனைச் சமாளிக்க வேண்டிய நிலையில் அரசு இருக்கிறது என்று உலகை ஏமாற்றுவது போன்ற வேலையைத்தானே இலங்கை ஆட்சியாளர்கள் செய்து வருகிறார்கள்.

### அரசுக்கு முடியாதது எதுவுமில்லை

மக்களைத் தூண்டும் அரசியல்வாதிகளை அடக்குவதும், சிங்கள மக்களுக்கு உண்மையைத் தெளிவுபடுத்தி அவர்கள் ஆதரவைப் பெறுவதும் அரசுக்கு முடியாத காரியமல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவுக்கு தமிழர்கள் கட்டுப்படுமாற்போல் சிங்களத் தலைமைகளின் முடிவுக்கு சிங்கள மக்கள் நிச்சயம் கட்டுப்படுவார்கள்.

சிங்கள மக்களின் ஆதரவு இல்லாமல் எதுவும் செய்ய முடியாது. அமைச்சர்களின் கருத்துச் சுதந்திரத்தை உதாசீனம் செய்ய முடியாது.

### சினை ஆட்டு நியாயம் இனியும் வேண்டாம்

எல்லாக் கட்சிக் காரர்களையும் அழைத்துப் பேசி கருத்தொருமைப்பாடு கண்டுதான் நாட்டுப் பிரச்சினையை அணுக வேண்டும் என்பது போல் 'சினை ஆட்டு நியாயத்தை' அரசு இனிமேலும் காட்டிக்கொண்டிருக்க முடியாது. தெரிவுக்குழுவின் மூலம்தான் பேசமுடியும். ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மூலம் தான் தீர்வைப் பெற முடியும் என்று இனிமேலும் சொல்வது இலங்கைக்கு நல்லதல்ல.

இலங்கை ஆட்சியாளர்களின் நியாயத்துக்கான ஆதரவுத்தளம் உலகளவில் வெகுவாகச் சுருங்கிவருகிறது. அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஐ.நா. என்பவற்றுடன் மலேசியாவும் இன்று சேர்ந்துகொண்டுள்ளமை இலங்கைக்கு உவப்பான செய்தியன்று. இஸ்லாமிய பெருவிழாவின் அழைப்பை ஏற்று மலேசியாவுக்குக் கூட செல்ல முடியாத நிலையில் ஜனாதிபதி இருப்பது பெருமைப்படத்தக்க விடயமல்ல.

இன்னமும் இனவாதிகளின் பேச்சுகளைக் கேட்டுக் கொண்டிராமல், அமைச்சர்கள் எல்லோரும் அரசுக்கு ஆரோக்கியமான துணைகள் என்ற மாய எண்ணத்தைக் கைவிட்டு ஜனாதிபதி புதிய கோணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அனுசரணை எல்லோரும் மெச்சத்தக்க தீர்வொன்றை வெகுவிரைவில் கண்டு அதனை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

அதற்குரிய சக்தி ஜனாதிபதியிடம் நிறையவே உண்டு. இதைவிடுத்து இன்னமும் காலதாமதம் செய்யலாம் என்று நாட்கள் கடத்தப்படுமானால் வருங்காலத்தில் அது இலங்கைக்கே ஆபத்தாக முடியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் என்கின்ற பிராணி வெறும் ஜடம் மட்டுமல்ல. அவன் உயிரோட்டமுள்ள, உணர்வோட்டமுள்ள சமூகப்பிராணி''. சமூகவாழ்க்கையில் மனிதன் பலருடன் இணைவினை கொள்கிறான். இதன் காரணமாக நிமிடத்திற்கு நிமிடம் அவனது கருத்தோட்டம் மாற்றமடைகின்றது. அந்த வகையில் எண்ணங்களும் சிந்தனைப் போக்கும், மனவெழுச்சிகளும் மாற்றமடைந்து செல்கின்றன.

மனப்பதற்றம் என்பது தனித்து இருக்காது. அதற்கு ஒரு குடும்பம் உண்டு. அது என்னவென்றால் கலக்கம், தடுமாற்றம், துயரம், திகில், நடுக்கம் போன்றவைகளுடன் இருக்கும். ஆரம்பத்திலேயே பதற்றத்தைக் கிள்ளி எறிந்துவிடாவிட்டால் இந்தக் குடும்பமே நம்மிடம் வந்து ஒட்டிக்கொண்டு உறவாட ஆரம்பிக்கும். தன்னம்பிக்கை இல்லாத தன்னுடைய திறமைகளை முழுமையாகப் புரிந்து கொள்ளாத கூச்ச சுபாவமுள்ள, தாழ்வுணர்ச்சி கொண்ட மாணவருக்கு பதற்றம் வரும்.

எந்த வித முன்னேற்பாடுமின்றி ஒரு செயலில் ஈடுபடும் போது நிச்சயம் பதற்றம் ஏற்படும். இதனால் மேற்கொள்ளும், செயற்பாடும் பயனிழந்து பதற்றத்தின் விளைவாக தோல்வியே ஏற்படும். இப்பதற்றம் பெரும்பாலும் பல் வேறு உடல் நோய்களைப் போன்று மாயத்தோற்றம் அளிக்கும். பரீட்சை, மற்றும் நேர்காணலின் போது பெரும்பாலானவர்களுக்கு உடல் நோய்களைப் போன்று மாயத்தோற்றம் அளிக்கும். பரீட்சை மற்றும் நேர்காணலின் போது பெரும்பாலானவர்களுக்கு ''பதற்றம்'' ஏற்படுகின்றது. அளவோடு இருக்குமாயின் அது ஆக்கபூர்வமான செயலுக்கும், முன்னேற்றத்திற்கும் உதவியாய் இருக்கும். அதுவே, அளவுக்கு அதிகமாய் இருக்குமாயின் பாதிப்பாய் மாறிவிடும். மேலும், எல்லாம் இழந்துவிட்டது போன்ற உணர்வையும், முடங்கிப்போன மனநிலையையும் உண்டு பண்ணச் செய்யும்.

கல்வி கற்றலுக்குரிய பருவம் இளமைப்பருவம் என்பதனால் மாணவர்களின் முழுக்கவனமும் கல்வி கற்பதில் இருக்க வேண்டும். முழுக் கவனம் செலுத்தும் படி அவர்களை வலியுறுத்தும் போது, கற்றல் என்பது, சுமை போலத் தோன்றுகின்றது. சுமை உணர்வு வருவதற்குக் காரணம் பரீட்சைக்குத்தான் படிக்கின்றேன் என்ற எண்ணந்தான். பாடங்களில் உள்ள தகவல்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தைவிட பரீட்சைக்காகத் தான் அந்தத் தகவலை மனப்பாடம் செய்து, மறந்து விடாமல் பரீட்சையை எழுதி வெற்றி பெற வேண்டும் என்ற நினைப்பு மேலோங்கி விடுகிறது.


''பஞ்சை நீரில் நனைத்தெடுத்தால் அதன் கனம் அதிகமாகி விடும். அதுபோல பரீட்சைக்காகவும் படித்தாக வேண்டும் என்ற எண்ணம் ஈரமான பஞ்சுப் பொதியாகிக் கனக்கிறது. இதனால் பரீட்சைப் பதற்றம் வந்து விடுகிறது. பரீட்சையில் வெற்றி பெறுவோமா? அதிக புள்ளி எடுப்போமா? என்ற மனப்பதட்டம் மாணவர்களிடையே காணப்படுகிறது.


### பதற்றம் ஏற்படக் காரணங்கள்

பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்கள் நன்றாக கற்காது விடும் பட்சத்தில் பதட்டம் ஏற்படுகிறது. மேலும் கற்கும் போது பலவற்றை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. படித்தவற்றை மீளவும் ஞாபகத்துக்குக் கொண்டு வரும்போது ஞாபகம் வராவிட்டால் பதற்றம் ஏற்படுகின்றது. முழுமையாகக் கற்றாலும் ஏதோ ஒரு பயம் மாணவரை ஆட்கொள்கின்றது. ஆயத்தம் செய்யாது பரீட்சையை எதிர்கொள்ளும் போது பதற்றம் ஏற்படுகின்றது. மேலும், சகமாணவர்களின் தயார்ப்படுத்தலை நோக்கும் போதும், ஏனைய மாணவர்கள் பதில் அளிக்கும் போதும், தாம் பதில் கூறாது விடும் போதும் மாணவரிடையே பதற்றம் ஏற்படுகின்றது. எல்லாப் பாடத்தையும் கற்க வேண்டும். எவ்வாறு கற்பது? எதை முதலில் படிப்பது போன்ற எண்ணம். சிந்தனையில் குழப்பம் ஏற்படும் போதும் பதட்டம் வருகின்றது. பெற்றோரின் ஒத்துழைப்பு, ஆசிரியரின் ஒத்துழைப்பு சரியாகக் கிடைக்காத பட்சத்திலும் இது நிகழ்கின்றது.

மேலும், ஒரு மாணவன் எப்போதும் உயர்ந்த புள்ளி பெறுவது இயல்பாக இருந்தும், உயர்ந்த புள்ளி கிடைக்காமல் போய் விடுமோ? என்று கவலைப்படும் மாணவன் வேறு வகைகளிலும் பலவீனமாக இருத்தல் கூடும். ஒருவன் நல்ல புள்ளி எடுக்கலாம்.

ஆனால் படிப்பில் உள்ள அக்கறை அதற்குக் காரணமாக இருக்காது. போட்டி அரங்காக அவன் நினைக்கலாம். தன் சுய மதிப்பைக் காப்பாற்ற உயர் புள்ளி வாங்குவது முக்கியமாகும். பரீட்சை நெருங்கும்போதே அதில் வைக்கும் பயம் வெகு அதிகம். 'ஏ' தரசித்தி வாங்காமல் 'பி' தரச் சித்தி வாங்கி விட்டால் என்று அவன் தன் மதிப்புக் குறைவை பெரிதாக எண்ணுகின்றான். இவ்வாறு மாணவனுக்குள் பதற்றம் இடம் பிடித்துக் கொள்கின்றது.





# பரீட்சைக் கால பதற்றத்தைப் போக்குவோம்

திருநாவுக்கரசு ஜிந்தாஜினி,
மாவட்ட சிறுவர் அபிவிருத்தி அலுவலகம்.

எந்த வித முன்னேற்பாடுமின்றி ஒரு செயலில் ஈடுபடும் போது நிச்சயம் பதற்றம் ஏற்படும். இதனால் மேற்கொள்ளும், செயற்பாடும் பயனிழந்து பதற்றத்தின் விளைவாக தோல்வியே ஏற்படும்.

### பதட்டத்தால் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

மாணவருக்கு ஏற்படும் பதற்றத்தினால் அவர்களின் கற்றல் நடவடிக்கை பாதிப்படைகின்றது. மேலும், நம்பிக்கை அற்ற நிலை தோன்றுகின்றது. பதிலளிப்பதில் சில பிரச்சினைகள் எழுவதாலும் பதற்ற நிலை உருவாகின்றது. கற்கும் விடயங்களில் தெளிவில்லாத தன்மை காணப்படும் பொழுதும் மாணவர்கள் பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர். அதிக பதற்றமானது கற்க முடியாத சூழலை உருவாக்குகின்றது. சில வேளைகளில் பெற்றோர், சகோதரரிடையே முரண்பாடுகளைச் சந்திக்க நேரிடுகிறது. ஆசிரிய -மாணவ உறவில் சில சிக்கல்கள் எழுகின்றன. மேலும் உள, உடல் ஆரோக்கியங்கள் இதனால் பாதிக்கப்படுகின்றன. பதற்றத்தால் ஞாபகமறதி கூட ஏற்படுகின்றது. எவ்வளவு தான் நன்றாகப் படித்திருந்தாலும் பதற்ற உணர்வினால் மாணவர்கள் பரீட்சையில் சரியான பதிலை எழுத முடியாமல் போகின்றது. இதனால் மாணவர்கள் கவலை அடைகின்றனர்.

### பரிந்துரைகள்

பரீட்சைக்குத் தயாராவதற்கு மன நம்பிக்கையைப் பலமாக வளர்த்துக் கொள்வது மிக அவசியம். இதற்கு அவசியமானவை வருமாறு.

1.போதுமானளவு நேர அவகாசமும்
2.முரண்பாடு மற்றும் பிரச்சினையின்றி இருத்தல்
3. நலமாக இருப்பதற்கான நம்பிக்கையும், உணர்வும்
4. பலவீனமான மற்றும் எதிர்மறைச் சிந்தனைகளைத் தவிர்த்தல்
5. பரீட்சை மண்டபம் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் பற்றியது.

பரீட்சை மண்டபம் அமைந்திருக்கும் இடம், மண்டபம் என்பவற்றை முதலிலேயே பார்த்து நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். பழக்கமில்லாத பாடசாலைகளில் பரீட்சை மண்டபம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால் கட்டாயமாக முதலில் அவற்றைப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் பலர் இடம் தெரியாமல் பரீட்சைத்தினத்தில் பரபரப்புடன் அலைந்து களைத்துப் போவதுண்டு.

பரீட்சை மண்டபத்திற்குக்கொண்டு செல்ல வேண்டிய பின்வரும் பொருள்களை முதல் நாளே உறுதிப்படுத்தி எடுத்து வைத்துக் கொள்வது மிகமிக அவசியம்.

1. பரீட்சை அனுமதிப்பத்திரம்
2.மாணவர் அடையாள அட்டை
3. நேர அட்டவணை
4. பென்சில், பேனைகள்
5. சிறந்த கைக்கடிகாரம்
6. உபகரணப்பெட்டி

மேலும் வினாக்களுக்கு ஏற்ற விதத்தில் விடையளிக்க வேண்டும். விடைத்தாள்களுக்கு எந்த ஒழுங்கில் இலக்கங்கள் இடப்பட வேண்டும்? எவ்வாறு இணைக்கப்பட வேண்டும் என்பது பற்றிய தெளிவான விளக்கம் வேண்டும்.

6. இலேசாக, திருப்திகரமாக இருத்தல்.

7. பரீட்சை எழுதும் நுட்பங்கள் வினாத்தாளை சரியாக விளங்கி வாசித்தல் வேண்டும்.

சில விசேட குறிப்புகள் தரப்பட்டிருந்தால் அதில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

வினாத் தெரிவு, பிரதானமான முக்கியப் பகுதியைக் குறிக்க தனியான விடைத்தாளைப் பயன்படுத்தல்

விடையளிப்பது பற்றிய அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றுதல்

நேரத்தை வினாக்களின் படி களவாக ஒதுக்கீடு செய்து கொள்ள வேண்டும். ஒதுக்கிய நேரத்திலும் கூடுதலாக எந்த வினாவுக்கும் விடையளிக்க வேண்டாம்.

மிக இலகுவான வினாவுக்கு முதலில் விடையளிக்கவும்

விடைத்தாளில் ஒழுங்காக இலக்கமிடவும். விடைகளையும் அதன் வினா இலக்கங்களையும் சரிபார்த்து ஒழுங்காகக் கட்டி கட்டெண்ணையும் சரிபார்த்துக் கொள்ளல் வேண்டும்.

### படிக்கும் உத்திகள்

அன்றாடம் படிக்கும் பழக்கம் இருந்தால் தேர்வு நேரத்தில் எல்லாப் பாடங்களையும் குறுகிய காலத்தில் படித்து முடிக்க வேண்டும் என்ற கவலை, மன நெருக்கடி ஏற்படாது.

பாடங்களில் ஏற்படும் சந்தேகங்களை அவ்வப்போது ஆசிரியரிடமோ பெற்றோரிடமோ, விவரம் அறிந்தவரிடமோ கேட்டுத் தெரிந்து கொண்டால் தேர்வு நேரத்தில் பதற்றம் இருக்காது

அதிகாலையில் எழுந்தால் மூளை சுறுசுறுப்பாக இயங்கும் இதனால் படிக்கும் பாடங்கள் நன்கு மனதில் பதியும்.

தினமும் அரைமணி நேரமாவது காலையில் படிக்கும் பழக்கம் நல்லது. படிக்கும் போது போதுமான நீர் பருக வேண்டும். தேர்வு சமயத்தில் சைவ உணவுகளை உண்ண வேண்டும்.

கோபமான மனநிலை, பாடங்களை படிப்பதற்கும் மனதில் பதிய வைப்பதற்கும் பயப்படக் கூடாது. படிக்கும் சூழலை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். கவனம் சிதறும் இடங்களில் இருந்து படிக்கக்கூடாது

படிக்கும் போது போதுமான விளக்கு, மின்சார வெளிச்சத்தில் படிக்கவேண்டும். படிக்கும்போதுஒரே பாடத்தை தொடர்ந்து பல மணி நேரம் படிக்கக்கூடாது. 45 நிமிடத்திற்கு 5நிமிட இடைவேளை விட்டு பாடங்களை மாற்றிப்படிக்கலாம்

உற்சாகப்படுத்தும் வாசகங்களை கண்ணில் படும் படி எழுதி வைக்க வேண்டும். இது தூண்டு கோலாக அமையும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளம் பெருங்கோயில்

உலகில் இறைவனுக்கு ஏராளமான கோயில்கள் உள்ளன. அனைத்துக் கோயில்களையும் விட இறைவன் விரும்பும் மாபெரும் கோயில் மனித உள்ளமே.

உன் உள்ளத்தை இறைவன் வாழும் கோயிலாக மாற்று.

தூய அன்பால் அபிஷேகம் செய். நினைவை வாசமுள்ள மலர்களாகக் கொண்டு அர்ச்சனை செய்.

உன் உள்ளத்தில் இறைவன் நீங்காதிருப்பான்.

உள்ளத்தில் இறைவன் இருந்தால், இறைவனோடு நீ நிலைத்திருப்பாய். உள்ளத்தில் இறைவன் வீற்றிருக்க வேண்டுமானால் முதலில் உன் உள்ளத்தைத் தூய்மைப் படுத்து.

தீய எண்ணங்கள் உள்ள மனதில் இறைவன் இருக்க மாட்டான். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள் உன்னை மயக்குகின்றன.

காமம் , குரோதம், லோபம், மோகம், மதம், மாத்சர்யம் ஆகிய ஆறு பகைகள் உன்னைக் கீழ்நிலைக்குத் தள்ளுகின்றன.

இவையனைத்தும் நீங்க வேண்டுமெனில் இறைவனை உள்ளத்தில் குடியேற்று.

'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்' என்பது திருமந்திரம்.

உள்ளத்தில் அன்பு, பொறுமை, கருணை, சகிப்புத் தன்மை ஆகியவை நிறைந்திருந்தால் இறைவன் ஆனந்தமாய் வீற்றிருக்கிறான்.

உள்ளத்தில் கருணை நிரம்பித் ததும்ப வேண்டும். உலக மக்கள் அனைவரும் நலமாய் வாழ வேண்டும் என்ற எண்ணம் வேண்டும்.

தனக்கென வாழும் சுயநலம் இருக்கக் கூடாது. தூய்மை, ஞானம், ஈகை, தன்னடக்கம், தவம், நேர்மை, கொல்லாமை, வாய்மை, கோபமின்மை, வள்ளல் தன்மை, நாணமுடைமை, ஜீவ காருண்யம், நன்றி மறவாமை ஆகிய குணங்கள் தேவ இயல்புகள் என கீதை எடுத்துரைக்கிறது.

உன் உள்ளத்தில் இந்த தேவ குணங்களைக் குடியேற்று.

எந்த மனிதனிடம் சத்தியம், சாந்தம், புலனடக்கம், தைரியம், உறுதி, சோம்பலின்மை, வியப்பின்மை, ஆசையின்மை, சமபுத்தி போன்ற குணங்கள் உள்ளனவோ அவன் உள்ளத்தில் இறைவன் கோயில் கொள்கின்றான் என்று பத்மபுராணம் கூறுகின்றது.

உள்ளத்தில் இறைவனைக் கண்டவன் வெளியில் தேடி அலைய வேண்டியதில்லை.

பூசலார் நாயனார் உள்ளத்திலேயே இறைவனுக்குக் கோயில் கட்டினார். இறைவன் அங்குதான் முதலில் வந்தான். கற்கோயிலையும், பொற்கோயிலையும் விட, தூய மனமெனும் நற்கோயிலையே இறைவன் விரும்புகிறான்.

உள்ளத்தில் சிறிதளவும் தீமை புக அனுமதிக்கக் கூடாது.

நல்ல எண்ணங்களையே நீ ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். உள்ளத்தைக் கட்டுப்பாடாக வைத்துக் கொள்ள வேண்டும். உள்ளத்தைக் கட்டுப்படுத்த புத்தி துணை புரிய வேண்டும்.

அல்லாது உள்ளம் தன் விருப்பம் போல் சென்றால் அது தீமையில் முடியும். ஐம்புலன்களின் வழியே மனம் செல்வதை அனுமதிக்கக் கூடாது.


இறைவனையே நினைக்கும் உள்ளத்துக்குத் தீமை எதுவும் நடக்காது.

உள்ளத்தைக் கோயிலாகக் கொண்டால் இன்னல்கள் உனக்கு ஏது? அந்த இன்பத்துக்கு நிகரேது?



பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்

# வேதாகம ஆய்வு நிறுவனத்தைக் கொண்ட பல்கலைக்கழகப் பரமேஸ்வரன் ஆலயம்



(கடந்தவாரத் தொடர்ச்சி....)

எஸ்.யேசுதாஸ்

யாழ்.பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயமானது தொண்டு வழிபாடுகளுடன் மட்டும் நின்றுவிடவில்லை. சேர் பொன். இராமநாதனின் பிரதான இலட்சியங்களில் ஒன்றான அந்தணச் சிறார்களுக்கு வேதாகமங்கள், சமயநூல்கள், கிரியைகள் தொடர்பான பயிற்சிகளை அளித்து சிறந்த சிவாச்சாரியர்களாக்கும் பணியையும் மேற்கொண்டது.

அவர் விட்டுச் சென்ற சொத்துக்கள் பற்றிய ஆவணங்களில் இது தொடர்பாகக் குறிப்பிட்டுள்ளதைக் கண்ணுற்ற போதிலும் பேராசிரியர் சி.க சிற்றம்பலம், ப.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் இதனை நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டனர். இதற்கான நிதி ஒதுக்கீட்டை இயக்குநர் சபைத் தலைவர் மு.ஞானப்பிரகாசம் முதலானோருடன் இணைந்து ஏற்படுத்தினர். சேர் பொன்.இராமநாதனின் வேதாகம ஆய்வு நிறுவனம் என்ற அமைப்பு 1994 ஆம் ஆண்டு அன்றைய துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராஜாவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சிவாச்சாரிய குருகுலத்திற்கான இந்தச் செயற்குழுவில் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைவராகவும், சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் துணைத் தலைவராகவும் பேராசிரியர் வி.சிவசாமி செயலாளராகவும், சி.க.சிற்றம்பலம் பொருளாளராகவும் , பிரம்மஸ்ரீ ஸ்ரீ.கிருஷ்ணானந்த சர்மா இணைப்பாளராகவும், பிரம்மஸ்ரீ ந.சதாசிவ ஐயர், இ.விஜயரத்தினம், உ.கந்தசாமி முதலியோர் உறுப்பினர்களாகவும், பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் போஷகராகவும் விளங்கினர்

> **சிறப்புமிக்க இலங்கையின் சிவாலயங்களில் ஒன்றாக விளங்கும் பரமேஸ்வரன் ஆலயமும் அதன் சூழலும் 'பரமேஸ்வரம்' என்று பக்தியுடன் அடியவர்களால் அழைக்கப்படுகிறது. இந்த ஆலயச் சிறப்பு தொடர்பாக பல பாக்கள், கீர்த்தனைகள் வெளிவந்துள்ளன.**

இலங்கையில் உள்ள சிவாலயங் களில் சிவபிரானின் 108 கரணசிற்பங்களோ, ஓவியங்களோ அரிதாகக் காணப்படும் நிலையில் இந்தக் கோயிலின் மேற்கு, வடமேற்குச் சுவர்களிலே சிவபெருமானுடைய 108 தாண்டவ ஓவியங்களை பல்கலைக்கழக நிதியாளராக இருந்த க.கனகரத்தினம் ஓவியர் சிவப்பிரகாசம் குழுவினரைக் கொண்டு 1999 இல் வரைவித்துள்ளார். சைவசமயக் குரவர் நால்வர், ஆறுமுகநாவலர், சேர் பொன்.இராமநாதன் (தியானநிலையில்) ஆகியோரின் படங்களும், லஷ்மி, சரஸ்வதி பாடல்களும் தூண்கள் சிலவற்றை அலங்கரிக்கின்றன.

அத்துடன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அன்பர்கள் லிங்கத்துக்கு அங்கி, அபிஷேகம், சகடை, அம்மனுக்குத் தாலி, திருவாசி, சங்கிலி, ஒலிபெருக்கி வசதிகள், வேல், குத்துவிளக்குகள், வைரவருக்குத் திருவாசி, 1008 சங்குகள், பிள்ளைத் தண்டுகள் என்பவற்றை வழங்கினர்.

2004 ஆம் ஆண்டு புதிய பரிபாலன சபை அமைக்கப்பட்டது. உள்ளகக் கணக்காய்வாளர் இ.ஜெகதீசன் தலைவராகவும், க.இரத்தின சபாபதி துணைத்தலைவராகவும், மா.வேதநாதன், பேராசிரியர் நா.சண்முகலிங்கன் ஆகியோர் இணைச் செயலாளர்களாகவும், பேராசிரியர் பவானி பொருளாளராகவும், இந்து மன்றத் தலைவர் செயலாளர் மற்றும் உறுப்பினர்களும் இந்தச் சபையில் அங்கம் வகிக்கின்றனர். 2005 ஆம் ஆண்டு நிலத்திற்கு சலவைக்கல் பதிக்கப்பட்டது.

இந்த ஆலயத்தின் ஆரம்பகாலம் முதல் பிரபல சிவாச்சாரியர்கள் பணிபுரிந்துள்ளனர். முதலாவது மகாகும்பாபிஷேகத்தின் போது சரவணபவ ஐயர் குருக்களாக விளங்கினார். இவருக்குப்பின் சிவஸ்ரீ கார்த்திகேயக்குருக்களும், பிள்ளைகளான கா.கைலாசநாதக் குருக்களும், கா.இரத்தினகைலாசநாதக் குருக்களும் கடமையாற்றினர். 1970-1992 வரை சிவஸ்ரீ மு.கனகசபாபதிக் குருக்களும் 1992-2003 வரை ச.சுப்பிரமணியக் குருக்களும் பணிபுரிந்துள்ளனர். இவர்களைத் தொடர்ந்து சிவஸ்ரீ இ.பிரணதாவித்திகரக் குருக்கள் ஆலய சிவாச்சாரியாராகப் பணிபுரிந்து வருகிறார்.

சிறப்புமிக்க இலங்கையின் சிவாலயங்களில் ஒன்றாக விளங்கும் பரமேஸ்வரன் ஆலயமும் அதன் சூழலும் 'பரமேஸ்வரம்' என்று பக்தியுடன் அடியவர்களால் அழைக்கப்படுகிறது. இந்த ஆலயச் சிறப்பு தொடர்பாக பல பாக்கள், கீர்த்தனைகள் வெளிவந்துள்ளன. பரமேஸ்வராக் கல்லூரியின் முன்னாள் தமிழ் ஆசான் வித்துவான் க.வேந்தனார் எழுதிய பாடலில்

*திருவன ரறிவின் திருந்தொளி*
*நிரம்புந்*
*திறவினை செயலினன் எனவே*
*தருபுகழ் ராமநாதனின்*
*தவத்தால்*
*தண்தமிழ் ஆங்கிலம் முதலாய்*
*வருமொழி பலவும் சிவநெறி மரபும்*
*வழிவழி நிலவியே மலரப்*
*பரவிடும் அருளால் திசைமுழுதாளும்*
*பரமேஸ்வரமெனப் பணிவோம்*

என்று பாடியுள்ளார். அத்துடன் இயலிசை வாரிதி ந.வீரமணி ஐயர் இயற்றியுள்ள ஊஞ்சல் பாடல், பேராசிரியர் வி.சிவசாமி தமிழிலும் சமஸ்கிருதத்திலும் இயற்றியுள்ள கீர்த்தனைகள் என்பனவும் இந்த ஆலயத்தின் மகிமைகளை பறைசாற்றுகின்றன.


யாழ்.பல்கலைக்கழக ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வன் ஆலயம் இன்றும் சைவப் பெருவள்ளலார் சேர் பொன். இராமநாதனின் தீர்க்க தரிசனமான கல்வி, சமய, பண்பாட்டு இலட்சியங்களை நினைவூட்டும் இடமாக விளங்குகிறது. அத்துடன் தமிழ் மக்களின் கல்வி மேம்பாட்டின் நிலைக்களமாக, தன்மான உரிமைக்கு வலுவூட்டும் அறிவாளிகளின் விளைநிலமாக, புத்திஜீவிகளின் பிறப்பிடமாக விளங்கும் பல்கலை அறிவாலயத்தின் காவலனாக எம்பெருமான் பரமேஸ்வரன் அருளாட்சி புரிந்து வருகிறார்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்குமுறைதான் ஆசியாவின் ஆச்சரியமா?

## யாழ்.மாணவர்கள் கைதானதை கண்டித்து கிழக்கு பல்கலையில் நேற்று ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பு,டிசெ.4

கைதுசெய்யப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரி நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர்கள் அமைதியான முறையில் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆசியாவின் ஆச்சரியம் என்பது அடக்குமுறை தானா? பாதுகாப்புப் பிரிவினர் மாணவர்களை தாக்கியமை மாணவர்களது பாதுகாப்பை கேள்விக் குறியாக்கியுள்ளது, மாணவிகளின் விடுதிகளுக்கு இராணுவம் வேண்டாம்- என்ற கோசங்களை எழுப்பியவாறு பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் நேற்றைய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ச)

# தேசத்துக்கு மகுடத்தின் கீழ் வீடுகளை நிர்மாணிக்க நிதி

கல்முனை,டிசெ.4

கல்முனை தமிழ் பிரதேச செயலகப் பிரிவில் தேசத்துக்கு மகுடம் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் வீடுகளை பூர்த்தி செய்வதற்காக ஒரு இலட்சம் ரூபா வீதம் 14 குடும்பத் தலைவிகளுக்கு நிதி வழங்கப்பட்டது.

சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எஸ்.தியாகராஜா தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச். பியசேன கலந்துகொண்டு இந்த நிதியை பயனாளிகளிடம் வழங்கியுள்ளார்.

வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் 10 பேருக்கு தலா 30 ஆயிரம் ரூபா வீதமும், நுகர்வுக் கடன் அடிப்படையில் 10 பேருக்குத் தலா 5 ஆயிரம் ரூபா வீதமும் நிதிகள் வழங்கப்பட்டன. (ச)



2013ஆம் ஆண்டுக்கான தேசத்துக்கு மகுடம் தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த சனிக்கிழமை நடமாடும் சேவை நடைபெற்றது. இந்த நடமாடும் சேவையை கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீத் ஆரம்பித்து வைத்தார்.

## கட்டாரில் நடந்த விபத்தில் மூதூர் இளைஞன் சாவு

திருகோணமலை,டிசெ.4

கட்டார், ரையான் நகரில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மூதூர் பெரிய பாலம் பகுதியைச் சேர்ந்த அப்துல் சலாம் அக்ரம் (வயது 22) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கட்டார், ரையான் நகரில் விற்பனைப் பிரதிநிதியாக தொழில் புரிந்து வந்த இவர் வீதியை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கடக்க முற்பட்டபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாஸா கட்டாரில் அடக்கம் செய்யப் பட்டதாக மூதூரிலுள்ள அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

விடுமுறையில் வீடு வந்த இவர் கடந்தவாரம் மீண்டும் கட்டாருக்குச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## 'பெக்கோ' குடைசாய்ந்து சாரதி சாவு

திருகோணமலை,டிசெ.4

மூதூர், ஜபில் மலை பகுதியில் பெக்கோ வாகனம் ஒன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை குடைசாய்ந்ததில் வாகனத்தின் சாரதி உயிரிழந்துள்ளார்.


இந்தச் சம்பவத்தில் மூதூர், பெரியபாலம் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான நூர்தீன் பரீஸ் (வயது 34) என்பவரே உயிரிழந்தவரா வார்.

ஜபில் மலை பகுதியில் உடைக்கப்பட்ட கருங்கற்களை உயர்ந்த பகுதி நோக்கி எடுத்துச் சென்ற போது பள்ளமான பகுதியை நோக்கி பெக்கோ வாகனம் இறக்கி குடைசாய்ந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# மாணவர்கள் மீது தாக்குதல்; நடத்தியோரை கைது செய்க

## அரியநேத்திரன் எம்.பி. வேண்டுகோள்



மட்டக்களப்பு,டிசெ.4

யாழ்ப்பாணப் பல்கலைகழக மாணவர்கள் ஜனநாயக ரீதியில் மேற்கொண்ட போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்திய இராணுவத்தினரை கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மாவீரர் தினம் என்பது எமது உறவுகளின் நினைவு தினமாகும். இவ்வாறான வேளையில் குறித்த இடத்துக்குச் சென்று இராணுவத்தினர் அதனை அனுஷ்டிப்பவர்களை தாக்குவது என்பது அவர்களின் காட்டுமிராண்டித்தன நடவடிக்கையையே காட்டுகின்றது.

அமைதியான முறையிலே மாணவர்கள் நடத்திய நிகழ்வை வன்முறை நிகழ்வாக மாற்றியுள்ளனர். அங்கு இடம்பெற்ற அனைத்து வன்முறைகளுக்கும் இராணுவத்தினரும் புலனாய்வுத்துறையினரும் படையினருடன் இணைந்து செயற்படும் ஒட்டுக்குழுவினருமே பொறுப்பேற்க வேண்டும்.

மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவமானது இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு இல்லையென்பதையே காட்டுகின்றது. (ச)

# கடும்போக்கான கைதிகளுக்கு மாங்கை தீவில் சிறைச்சாலை

மட்டக்களப்பு,டிசெ.4

கடும்போக்கான சிறைக் கைதிகளை பலத்த பாதுகாப்புடன் தங்கவைப்பதற்கு சிறந்த இடமொன்றை மட்டக்களப்பு, மாந்தைதீவில் ஏற்படுத்துவதற்கு சிறைச்சாலை அதிகாரிகள் கலந்துரையாடி வருகின்றனர் என்று சிறைச்சாலை தகவல்கள் தெரிவித்தன.

வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரத்தையடுத்தே இந்த முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. கடும்போக்கான சிறைக் கைதிகளே வெலிக்கடை சிறைச்சாலை கலவரத்துக்கு தலைமை தாங்கி நடத்தியுள்ளனர் என்பது ஆதாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது என்று சிறைச்சாலை தகவல்கள் கூறுகின்றன. (ச)

# அதிபர் இன்றி இயங்கும் பாடசாலை

## பொகவந்தலாவையில் இந்த நிலை

ஹற்றன்,டிசெ.4

ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட பொகவந்தலாவை கெர்க்கஸ்வோல்ட் தமிழ் வித்தியாலயம் கடந்த இரண்டு வாரங்களாக அதிபர் இன்றி இயங்கிவருவதாக மாணவர்களும் பெற்றோர்களும் குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு குறித்த பாடசாலையில் பணிபுரிந்த அதிபர் பொகவந்தலாவை டியன்சின் தமிழ் மகாவித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

இவரது இடமாற்றத்தை அடுத்து பாடசாலைக்கு இதுவரை புதிய அதிபர் ஒருவரை நியமிக்காததன் காரணமாக நிர்வாகப் பொறுப்பை முறையாக நடத்துவதற்கு எவரும் இல்லை என்று மாணவர்கள் கூறுகின்றனர்.

இந்தப் பாடசாலைக்கு அதிபர் ஒருவரை நியமிக்குமாறு பெற்றோர்களும் மாணவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

# கணினி விற்பனை நிலையத்தில் திருட்டு

மட்டக்களப்பு,டிசெ.4

மட்டக்களப்பில் உள்ள கணினி மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் விற்பனை நிலையம் ஒன்றில் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருட்டுப் போயுள்ளன என்று அந்த விற்பனை நிலையத்தின் உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

மட்டக்களப்பு, காத்தான்குடி கடற்கரை வீதியில் உள்ள விற்பனை நிலையத்திலேயே இவ்வாறு திருட்டு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.



இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நீண்ட நாள்களாக மனதளவில் இருந்துவந்த பிரச்சினைகளுக்கு இன்று முடிவுகட்டுவீர்கள். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பிள்ளைகளின் உடல்நிலை சீராக இருக்கும். உத்தியோகத்தில் மதிப்பு கூடும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். கோபம் குறையும்.

**இடபம்:** மனநிறைவுடன் காணப்படுவீர்கள். குடும்பத்தில் அனுசரித்துப் போவீர்கள். சகோதர, சகோதரிகளால் நன்மையுண்டு. உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். தாயாரின் உடல் நிலை சீராக அமையும்.

**மிதுனம்:** மறைமுகப் போட்டிகளுக்கு பதிலடி கொடுப்பீர்கள். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு. விருந்தினர், நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியுண்டு. பிரபலங்களின் உதவி கிடைக்கும். கண் எரிச்சல், தூக்கமின்மை நீங்கும்.

**கடகம்:** எதையும் திட்டமிட்டு செய்யப் பாருங்கள். யாரும் உங்களைப் புரிந்துக் கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். அடுத்தவர்களை குறை கூறிக் கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளப் பாருங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**சிங்கம்:** அதிகம் உழைக்க வேண்டி வரும். பணப்பற்றாக்குறையால் பிறரிடம் கடனாக வாங்க வேண்டி வரும். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். அரச காரியங்கள் இழுபறியாகும். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்களைத் தவிருங்கள்.

**கன்னி:** சோர்வு நீங்கி சுறுசுறுப்புடன் செயற்படுவதன் மூலம் காரியங்கள் வெற்றியடையும். குடும்பத்தினரின் ஆதரவு கிட்டும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். சகோதரவகையில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் போட்டிகளை வெல்வீர்கள். பிரார்த்தனைகளை நிறைவேற்றுங்கள்.

**நாளை**

கார்த்திகை -20 புதன்கிழமை 05.12.2012
திதி: ஸப்தமி பி.இ. 04.50 வரை
நட்சத்திரம்: மகம் பி.இ 03.38 வரை
சுபநேரம்: 04.47- 06.17 வரை
ராகுகாலம்: 12.17- 01.47 வரை

**துலாம்:** குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். நண்பர்கள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். சகோதர வகையில் நன்மை கிட்டும். அரசால் அனுகூலம் உண்டு.

**விருச்சிகம்:** வெளிப்படையான பேச்சால் சில காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி கிடைக்கும். தாயாரின் உடல் நிலை சீராகும். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள்.

**தனுசு:** சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். குடும்பத்தில் சிறு வார்த்தைகள் கூட பெரிய தகராறில் போய் முடியும். கோபத்தால் இழப்புகள் ஏற்படும். வெளி உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. இலேசாக தலை வலிக்கும்.

**மகரம்:** மனசாட்சிக்கு விரோதமின்றி செயல்பட வேண்டுமென நினைப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். சகோதர வழியில் உதவிகள் கிடைக்கும்.

**கும்பம்:** சகோதரரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள். நீண்ட நாள் எதிர்பார்ப்பு நிறைவேறும்

**மீனம்:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். தைரியமாக சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். உயரதிகாரி ஆதரிப்பார். நட்பு வட்டம் விரியும். தாழ்வு மனப்பான்மை நீங்கும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | | | 7 | | |
| | 3 | 9 | 2 | 8 | | 4 | 5 | |
| | | 8 | 3 | | | | 6 | 2 |
| 7 | 1 | | | 4 | | 5 | | 8 |
| | | 5 | | | | 2 | | |
| 9 | | 3 | | 7 | | | 1 | 4 |
| 8 | 9 | | | | 6 | 3 | | |
| | 4 | 6 | | 2 | 3 | 1 | 9 | |
| | | 1 | | | | | | 6 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | 8 | 6 | 9 | 1 | 5 | 3 | 4 |
| 3 | 5 | 1 | 8 | 4 | 2 | 6 | 7 | 9 |
| 4 | 9 | 6 | 3 | 5 | 7 | 1 | 2 | 8 |
| 6 | 4 | 5 | 9 | 7 | 3 | 2 | 8 | 1 |
| 8 | 3 | 9 | 1 | 2 | 5 | 4 | 6 | 7 |
| 1 | 7 | 2 | 4 | 6 | 8 | 3 | 9 | 5 |
| 5 | 8 | 3 | 2 | 1 | 9 | 7 | 4 | 6 |
| 2 | 1 | 4 | 7 | 8 | 6 | 9 | 5 | 3 |
| 9 | 6 | 7 | 5 | 3 | 4 | 8 | 1 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 – 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 – 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 – 9 இலக்கங்கள் இருப்பதாக அமைய வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## கேள்விப்பத்திரம் கோரல்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அமைந்துள்ள நோயாளர் நலன்புரி சங்கத்தின் சிற்றுண்டிச் சாலையும், வாகன பாதுகாப்புத் தரிப்பிடமும் 2013 ஆம் ஆண்டு நடத்துவதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவங்களை வைத்தியசாலை காரியாலயத்தில் 05.12.2012 முதல் மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 500 /= செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
விண்ணப்ப முடிவு திகதி 20.12.2012
விண்ணப்பங்கள் 23.12.2012 மாலை 4.00 மணிக்கு திறக்கப்படும்.

(சி/3176)

தலைவர்,
நோயாளர் நலன்புரி சங்கம்,
பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, மந்திகை.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்:- 1935.11.12
மறைவு :- 2012.11.04

அமரர்
**மூத்ததம்பி திருநாவுக்கரசு**

(இயந்திர இயக்குநர், மின் இணைப்பாளர், தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் - ஆனையிறவு, இசைக் கலைஞர்)



எங்களை விட்டுப் பிரிந்து இன்று ஒரு மாத காலமாகி விட்டாலும்
என்றும் உங்கள் நினைவுடனே இருக்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
இன்று (04.12.2012) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில்
நடைபெறும் அந்தியேட்டி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்

கலாவாணி சனசமூக நிலையவீதி,
கம்பர்மலை, வல்வெட்டித்துறை.

மனைவி - கம[illegible]
மகள் - வா[illegible]
மருமகன் - Dr.G.சிவகுமார்.

(சி/3029)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
04.06.1944

மறைவு
16.12.2011

## திருமதி அண்ணாச்சாமி பூரணம்

எங்கள் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும்
நடமாடும் தெய்வமாக வாழ்ந்து
நல்வழி காட்டி எம்மைச் சீராக்கி
சிறப்பாக்கி வாழவைத்து இன்று படமாகி
தெய்வமாக எங்கள் கண்களில் காட்சி தந்து கொண்டிருக்கும்
எங்கள் பாசத்துக்கும் பற்றிற்கும் உரிய அன்புத் தெய்வம்
அமரர் அண்ணாச்சாமி பூரணம் அவர்களின்
ஓராம் ஆண்டான இந்நாளில் அவர்களின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
"தோன்றிற் புகழோடு தோன்றுக – அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று"

நாவலடி, உடுப்பிட்டி.

அண்ணாச்சாமி குடும்பத்தினர்.
0041444515930, 0041417606265

(25528)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளின் செயற்பாடுகளை கண்டறிய புதிய வேலைத் திட்டம்

## அடுத்த மாதம் ஆரம்பம் என்கிறார் கோத்தபாய ஜயரத்ன

கொழும்பு,டிசெ.4

நாட்டிலுள்ள 10,000 பாடசாலைகளின் செயற்பாடுகளை மாதம் தோறும் கண்டறிவதற்கான புதிய வேலைத்திட்டம் அடுத்த மாதம் முதல் ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ஜயரத்ன தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாடசாலைகளின் சீரான நிர்வாகம், சிறந்தகல்விப் போதனை போன்றவையே இந்தத் திட்டத்தின் முக்கிய இலக்கு.

பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகள், மனித வள அபிவிருத்தி போன்றவற்றுக்குப் பெருந்தொகை நிதி வருடாந்தம் செலவாகிறது. இந்தச் செலவீனங்களால் இலவசக் கல்வி சிறப்பானதாக அமைய வேண்டும்.

எனவே கல்வி நடவடிக்கைகள் கண்டறியப்பட வேண்டும். மாதம் தோறும் அமைச்சு மீளாய்வுகளைச் செய்வது முக்கியமாகும்.

பாடசாலை அபிவிருத்தியுடன் 41 லட்சம் மாணவர்களின் கல்வி நிலையும் உயர வேண்டும். கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் போன்ற பாடங்களில் சித்திபெறாதோரின் எண்ணிக்கை குறைய வேண்டும்.

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களின் யோசனைகள், கருத்துக்களைப் பெற்று வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது முக்கியமானது.

இந்த வேலைத் திட்டம் இலக்கின்படி மேற்கொள்ளப்படுகிறதா? என்பதை அமைச்சு மட்டத்தில் மேற்பார்வை செய்வது இதுவே முதல் முறையாகும்.

பாடசாலைகளின் மாதாந்த முன்னேற்றம் தொடர்பாக அமைச்சுக்கு அறிக்கை மூலம் அறிவிக்க வேண்டும்.

அந்த அறிக்கைகளைப் பரிசீலித்து குறைபாடுகள், பிரச்சினைகள் இருந்தால் அவற்றுக்கான தீர்வுகளை வழங்க அமைச்சுகடப்பாடுடன் செயற்படும்.-என்றார். (ச)



மின்னல் தாக்குதலினால் அண்மையில் சேதத்துக்குள்ளான சிகிரியக் குன்றின் சிங்க பாதத்தின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் புனரமைப்புப் பணிக்காக ஒரு லட்சம் கற்கள் எடுத்துச் செல்லப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அதிகாரிகளாக நடித்து கப்பம்; வசமாகச் சிக்கினர் இருவர்

கொழும்பு,டிசெ.4

நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள் என்று கூறி வர்த்தக நிலையங்களில் கப்பம் பெற்ற இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நாவல பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு சென்ற இந்த இருவரும் பொருள்களின் விலைகளை விசாரித்துள்ளனர்.

நுகர்வோர் அதிகார சபையின் நிர்ணயித்த விலையில் அந்தப் பொருள்களின் விலைகள் இல்லை என்று தெரிவித்தனர். நாங்கள் இருவரும் நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் எனக் கூறி வர்த்தக நிலையங்களுக்கு அபராதமும் விதித்தனர்.

வர்த்தக நிலையங்களில் விற்கப்படும் பொருள்களுக்கான விலைப்பட்டியல் நுகர்வோருக்கு காட்சிப்படுத்தப்படவில்லை என்று சுட்டிகாட்டி அதற்கும் அபராதம் விதித்தனர்.

இந்த நபர்கள் ஒவ்வொரு வர்த்தக நிலையங்களுக்கும் ஆயிரம் ரூபா முதல் 5 000 ரூபாவரை அபராதம் விதித்துள்ளனர். அவர்கள் தொடர்பில் சந்தேகம் கொண்ட வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் இதுதொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

அதனையடுத்து உடனடியாக அங்குவந்த பொலிஸார் இருவரையும் கைதுசெய்தனர்.

இந்த நபர்களிடம் விசாரணைகளை நடத்தியபோது அவர்கள் நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் இல்லை என்பது தெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# கோத்தாவையும் என்னையும் சர்வதேச நீதிமன்றில் நிறுத்த முயற்சி

## மக்கள் எம்முடன் இருக்கும் வரையில் எதற்கும் அஞ்சோம் என்கிறார் மஹிந்த

கொழும்பு,டிசெ.4

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாயவையும், என்னையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு வெளிநாடுகளில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்.

கண்டி குண்டகசாலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நெடுஞ்சாலை அபிவிருத்திக்கான இயந்திர பராமரிப்புக் கட்டடத்தை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் எம்மோடு இணைந்திருக்கும் வரை சர்வதேச மட்டத்திலான எத்தகைய சூழ்ச்சிகள் மூலமும் அரசை தோற்கடிக்க முடியாது

நாம் மக்களுக்காகவும், நாட்டுக்காகவும் எம்மை அர்ப்பணித்துச் செயற்படுகின்றோம். அதை சகல மக்களும் நன்கு அறிவர்.



மக்கள் எங்களோடு இருக்கும் வரை எவரும் எம்மை வீழ்த்த முடியாது. அரசைக் கவிழ்ப்பதற்காக சதி முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் மக்கள் ஒருபோதும் அதை அனுமதிக்க மாட்டார்கள்.

நாம் நாட்டின் அபிவிருத்தியைக் கட்டியெழுப்பி வருகின்றோம். நாட்டின் அபிவிருத்திக்கு நெடுஞ்சாலைகளே உந்து சக்தியாக இருக்கின்றன. அதனாலேயே நாட்டில் முக்கிய நெடுஞ்சாலைகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்துக்குச் செல்வதற்கு நான்கு நெடுஞ்சாலைகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

கண்டிக்கான அதிவேகப் பாதையின் நிர்மாணப் பணிகள் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும்.

வீதிகளின் அபிவிருத்தி மூலமே நாட்டில் அபிவிருத்திப் புரட்சியை எம்மால் வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும்.- என்றார். (ச)

## சிறை ஆயுதங்கள் பாதுகாப்பு அமைச்சிடம்

கொழும்பு,டிசெ.4

சிறைச்சாலைகளில் காணப்பட்ட ரி56 ரக ஆயுதங்கள், பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஆயுதங்களைப் பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்குமாறு சிறைச்சாலை ஆணையாளர் பி.டபிள்யு.கொடிப்பிலி, சிறைச்சாலை பொறுப்பதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தார்.

ரி 56 ரக துப்பாக்கிகளுக்குப் பதிலாக ரிப்பீட்டர் ரக ஆயுதங்கள் வழங்கப்படவுள்ளன.

அண்மையில் வெலிக்கடைச் சிறையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் கைதிகள் ஆயுதக் களஞ்சியத்தை உடைத்து ரி56 ரக ஆயுதங்களைப் பயன்படுத்தி அதிகாரிகளைத் தாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மஹ்ரூப் காலமானார்

கொழும்பு,டிசெ.4

தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கொழும்பு மாநகரசபையின் எதிர்க்கட்சித் தலைவர் மொஹமட் மஹ்ரூப் நேற்று திங்கட்கிழமை காலமானார்.

இவர் அண்மையில் நடைபெற்ற கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டினார்.

இவர் இறக்கும் வரை மாநகரசபையின் எதிர்க்கட்சித் தலைவராக கடமையாற்றி வந்துள்ளார்.

இதேவேளை மஹ்ரூப் நீண்டகாலம் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினராக இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச)

## பேருவளை ஐஸ் தொழிற்சாலையில் தீ

கொழும்பு,டிசெ.4

பேருவளை மீன்பிடித் துறைமுகத்திலுள்ள ஐஸ் தொழிற்சாலையொன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திடீரெனத் தீப் பற்றிக்கொண்டது என்று பொலிஸ் பேச்சாளர் பிரிஷாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

தீயணைப்புப் பிரிவினருடன், கடற்படையினரும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாக அவர் தெரிவித்தார்.

இந்தத் தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இது தொடர்பான விசாரணைகளை பேருவளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்று அவர் குறிப்பிட்டார்.

தனியாருக்குச் சொந்தமான ஐஸ் தொழிற்சாலையொன்றிலேயே இந்தத் தீவிபத்து இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கைதிகளுக்கு ஹெரோயின் வழங்க முயன்ற பெண்ணுக்கு விளக்க மறியல்

கொழும்பு,டிசெ.4

வாழைப்பழச் சீப்பில் சூட்சுமமான முறையில் ஹெரோயின் பைக்கற்றுக்களை காலி சிறைச்சாலை கைதிகளுக்கு வழங்க முயன்ற பெண் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

காலி நீதிவான் முன்னிலையில் அவர் முன்னிலைப் படுத்தபட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஹேரோயின் போதைப் பொருள் பைக்கற் ஒன்றை கைதிகளுக்கு வழங்க நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முயற்சித்த வேளையில் குறித்த பெண் கைது செய்யப் பட்டிருந்மை குறிப்பிடத்தக்கது. (ச)

ஹேரோயின் போதைப் பொருள் பைக்கற் ஒன்றை கைதிகளுக்கு வழங்கும்போது கைது செய்யப் பட்டிருந்தார்.

## சிறைச்சாலை ஆணையாளராக கித்சிறி

கொழும்பு,டிசெ.4

சிறைச்சாலை ஆணையாளர் பதவியில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய சிறைச்சாலை ஆணையாளர் கொடிப்பிலிக்கு பதிலாக புதிய ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

அண்மையில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பொதுத்துறை அதிகாரியான கே. கித்சிறி சிறைச்சாலை ஆணையாளராக நியமிக்கப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

# குளிரான காலநிலை இலங்கையில் நீடிக்கும்

## வளிமண்டலவியல் திணைக்களம் தகவல்

கொழும்பு,டிசெ.4

இந்தியாவின் காலநிலை மாற்றத்தால் உலர்ந்த குளிர்காற்று வீசுவதன் காரணமாக இலங் கையில் வெப்பநிலை குறை வடைந்துள்ளது.

ஆகையால் வெப்ப வலயங்கள் உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களிலும் குளிரான காலநிலை நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது நிலவுகின்ற குளிரான காலநிலை இன்னும் சில நாள்களுக்கு நீடிக்கும் என்றும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து வீசுகின்ற குளிர் காற்றும் நாட்டின் வான்பரப்பில் முகில்கள் குறைவாக இருந்தமையுமே வெப்பநிலை குறைவுக்கு காரணங்களாக அமைந்துள்ளன என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

### நுவரெலியாவில் வெப்பநிலை7.9

இதனால், நுவரெலியா மாவட்டத்தில் ஆகக் குறைந்த வெப்பநிலையாக 7.9 பாகை செல்சியஸ் பதிவாகியுள்ளது. அத்துடன், கொழும்பில் 26 பாகை செல்சியஸ் வெப்பநிலையும் யாழ்ப்பாணம், அநுராதபுரம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் 26 பாகை செல்சியஸ் வெப்பநிலையும் பதிவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாயில் நாளை ஒளி விழா

யாழ்ப்பாணம், டிசெ.4

கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலையின் ஒளிவிழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை ஆலய முன்றிலில் பாடசாலை அதிபர் திருமதி கு.அசோக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீ.அ.சற்குணராசா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாகப் பங்குத்தந்தை அருள்பணி வென்சஸ்லாஸ், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லஸீசன், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி ஜெ.டொறிங்ரன், கிராம சேவை அலுவலர் ச.பாலசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்வர்.

(ம)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 30 ★ 08 ★ 1926



மறைவு 03 ★ 11 ★ 2012

**அமரர் அல்பிரற் இராஜேந்திரா சபாபதிப்பிள்ளை**

'கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்'

கடந்த 03.11.2012 கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது அன்புச் சகோதரனின், இறுதி ஆராதனையில் கலந்து கொண்டு ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், உள் நாட்டிலும் வெளி நாடுகளிலிருந்தும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், யாழ் போதனா வைத்தியசாலையில் நோயுற்றிருந்தவேளை சிகிச்சையளித்த வைத்திய நிபுணர்களுக்கும், யாழ் போதனா வைத்தியசாலை தாதிமாருக்கும் மற்றும் உதவியாளர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இறுதி நல்லடக்க ஆராதனையில் மலர் வளைய அஞ்சலி செலுத்தியோருக்கும், நல்லடக்க ஆராதனையை சிறப்பாக வழி நடத்திய அருட் பணியாளர்களுக்கும், வேறு பலவகைகளிலும் உதவி செய்த அனைவருக்கும், எமது மனம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"ஜோய்லின்"
உடுவில் வீதி, மானிப்பாய்.

குடும்பத்தினர்.

(26089)

# உங்கள் பரீட்சை வெற்றி எனது கையில்

இலங்கையில் உள்ள முன்னணி வளவாளர்களின் பங்களிப்பில் உருவான வழிகாட்டி இதோ! வெளிவந்துவிட்டது.

புலமை 08

03.12.2012 - 09.12.2012

## புலமைச்சுடர்

திங்கட்கிழமை தோறும் வெளிவரும் முதற்தரக் கையேடு

புலமை : 08 — முற்றிலும் பாடத்திட்டத்தைத் தழுவியது — பக்கங்கள் : 20

ஒரு வாரகால ஆக்கங்களைத் தாங்கி வரும் சிறப்பு வழிகாட்டி

**2013, 2014 இல் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் தரம் - 4, 3 மாணவர்களுக்குரியது**



இவ்வருடம் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் வடமாகாணத்தில் 185 புள்ளிகளைப் பெற்ற யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவி செல்வி பரமானந்தன் துஷானியுடனான நேர்காணல் 02 ஆம் பக்கத்தில் பிரசுரமாகின்றது. இவரை இந்நிலைக்கு உயர்த்திய பெற்றோருக்கும், பாடசாலைச் சமூகத்தினருக்கும் புலமைச்சுடர் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.



**உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்**

தொடர்புகளுக்கு - 071 6850005, 011 5738855

வடமாகாணத்தொடர்புகளுக்கு - 071 6182182, 021 5677222

மின்னஞ்சல் kalvisudarinfo@gmail.com

(C/2479)(6.2)

# மரண அறிவித்தல்

## பொன்னு நல்லையா



நாச்சிமார் கோயிலடியை பிறப்பிடமாகவும் மாரியம்மன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னு நல்லையா 30.11.2012 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னு- வள்ளி தம்பதியரின் அன்பு மகனும் சாந்தி,ஈஸ்வரி (வவுனியா), ஜெயா (ஜேர்மனி ), யோகமலர் (ஜேர்மனி), மோகன், கண்ணன் (மட்டக்களப்பு ) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரகீம்ராஜ் , கண்ணதாசன் (டோகா ), ரவேந்திரன் (ஜேர்மனி), கலா, றஜீ (மட்டக்களப்பு) ஆகியோரின் மாமனாரும் தங்கசிவயன், தாட்சாயினி, துவாரகன், சஞ்சீவ் (டோகா), குகன் (வவுனியா), சரண்யா (வவுனியா), ஓவியா (ஜேர்மனி), காவியா(ஜேர்மனி), கவின் (ஜேர்மனி), லவன், டன்சிகா, டேனிகா (மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2012) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.5, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

(26100)(6.2)

தகவல் :
குடும்பத்தினர்.

**Vavuniya Campus of the University of Jaffna**

**Walk - in Interview - on 07th December 2012**

Walk in interview for the following posts will be held on 07th December 2012 at the Board Room of the Vavuniya Campus, Park Road, Vavuniya.

Candidates who have the required qualifications are invited for this interview with self prepared application.

**Faculty of Applied Science – Department of Bio Science**

a. **Temporary Demonstrator**
**Required Qualification**
A graduate in the relevant subject or
a person awaiting results of a final/ degree examination.

**English Language Teaching Unit**

a. **Temporary Lecturer in English**
b. **Visiting Lecturer in English**
**Required Qualification**
A degree with specialization in the relevant subject with First or Second Class (Upper division) Honours and at least 01 year experience in teaching /research/ professional work/ Postgraduate studies.

c. **Temporary Instructor in English**
**Required Qualification**
(a) A degree of a recognized university; **or**
(b) the First class trained Teacher's Certificate with at least 3 years' experience after training; **or**
(c) the specialist English Trained Teachers' Certificate with at least 3 years' experience after training; **or**
(d) the Diploma or certificate in the Teaching of English as a second language from the University of Colombo or an equivalent qualification obtained from a recognized university or other institution after having satisfactorily completed a course of study of not less than ten months' duration; **and**
(e) a very good command of Sinhala/ Tamil and English.

Interested candidates with the required qualifications are expected to be present for the interview at 9.30a.m. with the originals and certified copies of Educational Certificates, Birth Certificates and other relevant Certificates and Curriculum Vitae with two non related referees.

**Rector**
**Vavuniya Campus**

(C/3181)(2.6. 7)

# நெஞ்சம் நெகிழ்ந்த நினைவலைகளும் நன்றி நவிலலும் அழைப்பும்

31 ஆம் நாள் — 4 ஆம் ஆண்டு





1948.06.10 — தோற்றம் — 1980.12.31
2012.11.04 — மறைவு — 2008.11.27

**திருமதி அன்னம்மா சிறிஸ்கந்தராஜா — சிறிஸ்கந்தராஜா ரவிசங்கர்**

**நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்து போனாலும் கடவுளிடமிருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் நமக்கு உண்டு. (2 கொரி 5:1)**

**கண்ணீருக்குத் தடை போட்டது போல உங்கள் நினைவுகளுக்குத் தடைபோட முடியவில்லை நினைவுகளை மட்டும் நிறையவே தந்து நிதர்சனமாய் சென்று விட்டீர்கள்.**

எமது தாயாரின் மறைவை அறிந்து நேரில் வந்து எமது துயரில் பங்குகொண்டு அஞ்சலி செலுத்தியோர், தொலைபேசி, தந்தி, குறுந்தகவல் மூலம் ஆறுதல் கூறியோர் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் யேசுவின் இனிய நாமத்தால் உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (04.12.2012) செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் தேவாலயத்தில் இடம்பெறும் ஆன்ம இளைப்பாற்றுக்கான திருப்பலியுலும் எதிர்வரும் (08.12.2012) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

36, புனித ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கு, நல்லூர். — குடும்பத்தினர்.

(26351)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத் துடன் கூடிய வானிலை நிலவும்.

## ஓய்வூதியருக்கு உதவிகள்

வடமராட்சி, டிசெ.4

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய பருத்தித் துறை, வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவுச் சங் கம் இவ்வாண்டில் கடந்த மாதம் வரை ஓய்வூதியர் களுக்கு பல்வேறு உதவி களை வழங்கியுள்ளது.

இந்தச் சங்கம் இறப்பு மானியம் 5 பேருக்கும், வைத் திய சிகிச்சை மானியம் 2 பேருக்கும், பல்கலைக்கழக மானியம் ஒருவருக்கும் வழங்கியுள்ளது. (ம-8)

### நெல்லியடி – வல்லை வரை

## பிரதான வீதியில் கடவைக் கோடுகள்

வடமராட்சி, டிசெ.4

நெல்லியடி தொடக்கம் வல்லை வரையான பிரதான வீதியில் பல இடங்களிலும் வீதிக் கடவைகளுக்கான மஞ்சள் கோடுகள் வீதி அபி விருத்தி அதிகார சபையி னால் வரையப்பட்டுள்ளன.

இந்த வீதி காப்பெற் வீதியாக மாற்றப்பட்டுள்ள மையால் இந்த வீதிகளில் உள்ள சந்திகள் மற்றும் கர வெட்டிப் பிரதேச செயல கம், அரசினர் ஆயுள்வேத மத்திய மருந்தகம் என்பன வற்றுக்கு முன்பாகவும் மஞ் சள் கோடுகள் வரையப்பட் டுள்ளன.

நெல்லியடி தொடக்கம் பருத்தித்துறை வரையான வீதியில், வீதி அகலிப்புப் பணிகள் பூர்த்தியடையாமல் இருப்பதனால் சந்திகள்தோறும் வீதிக் கடவை மஞ்சள் கோடுகள் வரையப்பட வில்லை. எனினும் மந்திகை ஆஸ்பத்திரிச் சந்தியில் மாத்திரம் வைத்தியசாலைக் குச் சென்றுவரும் நோயாளி களின் வசதி கருதி வீதிக் கடவை மஞ்சள் கோடு வரையப்பட்டுள்ளது. (3-8)

## பாபாவின் பிறந்தநாளில் மரக்கன்றுகள் வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ.4

மகாசமாதியடைந்த சத்திய சாயி பாபாவின் 87 ஆவது பிறந்த தினத்தில் வை.செக ராஜசிங்கம் 2 ஆயிரம் பசுமை மரங்களை வழங்கி உதவியுள்ளார்.

பாபாவின் பெயரால் இதுவரை 55 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரங்களை தானே உருவாக்கி வருடம்தோறும் நவம்பர் மாதம் 23 ஆம் திகதி மாவட்ட மட்டத்தில் இவர் வழங்கி வருகின்றார்.

வருடந்தோறும் பல ஆயி ரம் மரங்கள் இயற்கை யாகவும் செயற்கையாகவும் அழிவடைகின்றன.

இதனால் சூழலில் மாறு பாடு ஏற்படுகின்றது. இந்த மாறுபாட்டைத் தவிர்த்து பூமியில் உள்ள மக்களின் வாழ்வு பசுமையுடன் கூடிய தாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தாம் செயற் பட்டு வருவதாக பசுமைப் புரட்சியாளர் வை.செகரரா ஜசிங்கம் கூறுகிறார். இந்தச் சிந்தனையை அடியொற் றியே இதுவரை சொந்த நிதியில் பசுமை மரங்களையும் பயன்தரு மரங்களையும் உருவாக்கி வழங்கி வருகி றேன் என்றார் அவர். (3-41)

## ரிசானாவுக்கு பொதுமன்னிப்பு?

சவூதி அரேபியாவில் மரண தண்டனை விதிக் கப் பட்டுள்ள இலங்கைப் பணிப் பெண் ரிசானா ரபீக்கிற்கு சவூதி அரசால் பொது மன்னிப்பு வழங் கப்பட உள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

சவூதி அரேபியாவின் இளவரசர் மரண தண்டனை கைதிகளுக்கு பொதுமன் னிப்பு வழங்கத் தீர்மானித் துள்ளார்.

மன்னருக்கு இறைவனின் ஆசி வேண்டி இவ்வாறு மரண தண்டனை கைதி களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட உள்ளதாக இளவரசர் சல்பின் பின் அப்துல் அசீஸ் தெரிவித்துள் ளார்.

இந்தப் பொதுமன்னிப்பு பெறுவோர் பட்டியலில் ரிசானாவும் உள்ளடங்கி யிருக்கலாம் என நம் பிக்கை வெளியிடப்பட்டுள் ளது.

ரிசானாவை விடுதலை செய்யும் முனைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருவ தாக இலங்கை அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

## விநாயகர் பெருங்கதை படிப்பு

சுழிபுரம், டிசெ.4

சுழிபுரம் பறாளாய் ஈஸ்வர விநாயகர் ஆலயத்தில் விநா யகர் பெருங்கதைப் படிப்பு நடைபெற்று வருகின்றது. தினமும் பகல் அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து பெருங்கதைப் படிப்பு இடம்பெறுகின்றது. ஆலயத்தில் பெருங்கதை நூல் இலவசமாக வழங்கப்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (3-28)

## மோதின மோ.சைக்கிள்கள் முதியவர் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, டிசெ.4

மிருசுவில் உசன் சந்தி யில் இரு மோட்டார் சைக் கிள்கள் மோதிக் கொண்டதில் ஒருவருக்கு தோள் எலும்பு முறிந்தது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

ஏ-9 வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் சமிக்ஞை இன்றி குறுக்கு வீதியில் திரும்பிய போது அதே திசையில் வந்த மற் றொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் இம்முதியவர் தூக்கி வீசப்பட்டதனால் காயம் ஏற் பட்டதாகத் தெரி விக்கப்பட்டது.

மிருசுவில் உசனைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை செல்வவிநாயகம் (வயது-62) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (3-9)

## நாவலர் குருபூசை நாளை நல்லூரில்

இந்து சமய கலாசார அலு வல்கள் திணைக்களம் நடத் தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவ லர் குருபூசை விழா நல்லூர் ஆறுமுகநாவலர் மணி மண் டபத்தில் நடைபெறவுள் ளது.

நாளை புதன்கிழமை மாலை 3 மணிக்கு இந்து அபிவிருத்தி உதவி உத்தி யோகத்தர் மாணிக்கராஜ சர்மா அனந்தலெட்சுமி தலைமையில் விழா நடை பெறும்.

நிகழ்வில் 'ஸ்ரீலஸ்ரீ ஆறு முகநாவலரும் வாழ்வும்' எனும் விடயத்தில் ஆசிரியர், க.ஈஸ்வரன் சொற்பொழிவு ஆற்றுவார்.

தொடர்ந்து மாண வர் களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (3)

* * *

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவ லர் அவர்களின் குரு பூசை நிகழ்வு நல்லூர் ஸ்ரீ துர்க் காதேவி மணிமண்ட பத்தில் நடைபெறவுள் ளது.

நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் திட்டமிடல் துறை விரிவு ரையாளர் சுந்தரமூர்த்தி கபிலன் சிறப்புரை ஆற்று வார்.

தொடர்ந்து கூட்டுப் பிரார்த்தனையும் மகேஸ்வர பூசையும் நடைபெறும். (3)

## சிறுவர் பூங்காவுக்கு நிதி ஒதுக்கீடு

வலி.வடக்கு, டிசெ.4

சங்கானை பிரதேச சபைக்கு உட்பட்ட சித்தன்கேணி நேருஜி சனசமூக நிலையத்தில் சிறுவர் பூங்கா அமைப்பதற்கு பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சனசமூக நிலைய நிர்வாகி கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் ஈ.சரவண பவனிடம் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் 40 ஆயிரம் ரூபா நிதியியை ஒதுக்கீடு செய்துள் ளார்.

சனசமூக நிலையத்தில் அமைக்கப்படும் சிறுவர் பூங்கா மூலம் அந்தப்பகுதியில் உள்ள சிறுவர்கள் அதிக நன்மை அடை வார்கள் என சமூக பெரியோர் கள்தெரிவித்துள்ளனர். (3-86)

## தப்பியோடிய ஆஸி. மதகுரு நியூசிலாந்தில் கைது

சிறுவர் துஷ்பிரயோ கங்களில் ஈடுபட்ட ஆஸ் திரே லிய மதகுரு நியூ சிலாந்தில் வைத்து கைது செய்யப் பட்டுள்ளார். 65 வயதான இவருக்கு 250 இற்கும் மேற்பட்ட பாலியல் துன் புறுத்தல் சம்ப வங்களுடன் குறித்த தொடர் பிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியி ருந்தன.

இலங்கையிலிருந்து நியூசிலாந்துக் குத் தப்பிச் சென்றுள்ள நிலையிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. கடந்த புதன்கிழமை சிங் கப்பூர் நோக்கி இந்த மதகுரு புறப்பட்டுச் சென்றுள்ளதாகவும் இந்தத் தகவல்கள் மறுநாளே தமக்குத் தெரிய வந்ததாகவும் இலங்கை குடிவரவு குடியகல்வுத் திணைக்கள கட்டுப்பாட் டாளர் சூளானந்த பெரேரா தெரிவித்தி ருந்தார் என்பது தெரிந்ததே. (வ)

## நூலகத்துக்கு நிதி ஒதுக்கீடு

வரணி, டிசெ.4

வரணி பொதுநூல் நிலையத்துக்கு ஒரு லட்சம் ரூபா நிதியை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயக மூர்த்தி வழங்கியுள்ளார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் இருந்தே இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியின் மூலம் நூல் நிலையத்துக்கு ஒரு தொகை நூல்கள் பெறப்பட்டு அண்மையில் நடைபெற்ற வாசிப்பு மாத நிகழ் வின்போது கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3-122)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்
08.07.1932

ஆண்டவன் அடியில்
15.12.2011

திதி:– ஷஷ்டி
(04-12-2012)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் சீனியர் கிருஷ்ணபிள்ளை

அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாய் வாழ்ந்து – எமை
அவனியிலே வாழ்வாங்கு வாழ வைத்த தந்தையே
எங்கள் இதயங்களின் அழும் ஓசை
உங்கள் செவிகளுக்கு கேட்டிடுமோ?
நன்மைகளின் போதும் நல்ல நாள்களின் போதும்
உங்கள் ஒளிப்படம் முன் நின்றே
எங்கள் மனத்தின் வலிகளை போக்குகின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்

'திருத்தணிகை',
223, கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி/3175)(2.6.7)

## விற்பனைக்கு

பிறவுண் றோட் கடைத்தொகுதி ஒன்றில் பான்சி பொருள்கள், ஸ்ரேசனறி பொருள்கள், போட்டோ கொப்பி இயந்திரம்(2), கணினி பிறின்ரர், குளிர்சாதனப் பெட்டி போன்ற பொருள்கள் விற்பனைக்குண்டு.
(இக் கடைத்தொகுதியில் வியாபாரம் செய்வதற்கு அனுமதி பெற்றுத் தரப்படும்.)
தொ.பே: 075 096 4062

(26036)(2-6-7)

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
கல்வித்தகைமை 8ஆம் தரம்.
- பாதுகாப்பு உத்தியோகத்தர்
- சுத்திகரிப்புத் தொழிலாளி
- சாரதி



நாளை பி.ப 5 மணிக்கு பின்வரும் முகவரிக்கு சமுகமளிக்கவும்.
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(26013)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| ★ 12 |  | ★ 04 |
| ★ 04 | | ★ 11 |
| ★ 1929 | | ★ 2012 |

### கதிரன் விசாலாட்சி

டச்சு றோட், வீமன்காமம், தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும், ஆலடி உடுவில், சுன்னாகத்தை தற்காலிக முகவரியாகவும் கொண்ட கதிரன் விசாலாட்சி 04.11.2012 அன்று இறைபதமடைந்தார்.

எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் 29 ஆம் நாளான 02.12.2012 அன்று நடைபெற்றன. இன்று (04.12.2012) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரன் - குழந்தை தம்பதியரின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்றவர்களான கணபதி, முத்தன் மற்றும் சுப்பன், முருகன், செல்வி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், முருகையா(கிளி), தர்மலிங்கம் (சுவிஸ்), தெய்வேந்திரன் (லண்டன்), இராசேந்திரம், மகாலிங்கம், சதீஸ்குமார், கிருஸ்ணகுமார், வீரமங்கை (நாகம்மா), தேவி, நவராணி, பராசக்தி, விசியா, குணா, தனா, காயா, ஜெயலட்சுமி (தங்கா), காலஞ்சென்ற சுப்பன், தயாளினி (ராசி) மற்றும் ரேணுகா(பாப்பா), கலைவாணி, இராஜேஸ்வரி (சோபனா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற நடராசா குசேலநாதன் மற்றும் ஜெயமாலினி ஆகியோரின் பாசமிகு பெரியதாயும் ஆவார்.

ஆலடி, உடுவில்,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(26099)(6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கு கைகொடுக்கும் ஹமீடியா

இலங்கையின் ஆண்கள் ஆடைகள் உற்பத்தித் துறையில் முன்னணியில் திகழும் ஹமீடியா நிறுவனம், சமூகத்திலுள்ள வசதி குறைந்த சிறுவர்களுக்கு உதவும் வகையிலான ஒரு செயற்றிட்டத்துடன் இவ்வருடத்திற்கான தனது நத்தார் பண்டிகைப் பருவகாலத்தை தற்போது அங்குரார்ப்பணம் செய்துவைத்துள்ளது.

இந்நிறுவனத்தின் பல்வேறு சமூக சேவை முன்னெடுப்புகளுள் ஒன்றாக My Friend ('எனது நண்பன்') செயற்றிட்டம் திகழ்வதுடன், நாடெங்கிலும் வாழும் வசதி குறைந்த சிறுவர்களை இது அரவணைத்து கைகொடுக்கின்றது. அதுமட்டுமன்றி அச்சிறுவர்கள் தமது கல்வித் தரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கும் உதவிபுரிகின்றது.

பழைய, இன்னும் பாவிக்கக்கூடிய நிலையிலுள்ள சிறுவர் ஆடைகள் மற்றும் பாடசாலைச் சீருடைகளை நாடு முழுவதிலுமுள்ள தனது 11 கிளைகளுக்கும், நவம்பர் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாகக் கொண்டு வந்து ஒப்படைக்குமாறு அனைத்துப் பொது மக்களுக்கும் ஹமீடியா அழைப்பு விடுக்கின்றது. அன்றைய தினத்தில் கொள்வனவு செய்யப்படும் 'லீபொண்ட்' (LeBond) உற்பத்திகளுக்கு ஒரு பரஸ்பர உணர்வு வெளிப்படுத்தல் என்ற வகையில் 15 வீதக் கழிவு வழங்கப்படுகின்றது.

ஹமீடியா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பௌசுல் ஹமீட் கூறுகையில், ''ஒரு பண்டிகைக் காலம் என்பது ஒருவர் தனக்காகவும் அவரது அன்புக்குரியர்களுக்காகவும் ஆடைகளைக் கொள்வனவு செய்வது பற்றிய விடயம் மட்டுமல்ல. மாறாக, எம்மைச் சூழவுள்ள தேவையுடன் இருக்கின்ற மற்றும் அதிர்ஷ்டம் குறைந்த மக்களுக்கு உதவுவதுடனும் தொடர்புபட்டதாகும்.




எமது குழந்தைகளே இலங்கை நாட்டின் எதிர்காலமாகும். அவர்களைப் போஷித்து வளர்க்க வேண்டியதும், அத்துடன் பொறுப்புணர்வுமிக்க பிரஜைகளாக அவர்கள் வளர்வதை காண்பதும் எமது கடமையாக இருக்கின்றது.

இந்த செயற்றிட்டத்திற்காக துணை நிற்பதையிட்டும், அதன்மூலம் வசதி குறைந்த நூற்றுக்கணக்கான சிறுவர்களின் முகங்களில் சிறிய மகிழ்ச்சியையும் சிரிப்பையும் தோற்றுவிப்பதையிட்டும் நானும் எனது அணியினரும் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்' - என்றார்.

## லங்கா பெல்லின் சலுகைகள்

யாழ்ப்பாணம்,டிசெ.4

வாடிக்கையாளர்களுக்கான சிறந்த சேவைகளை 2009ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் யாழ்ப்பாணத்தில் வழங்கிவரும் லங்காபெல் நிறுவனத்தால் முற்கொடுப்பனவு இணைப்புகளுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படுகின்றன.

இந்த முற்கொடுப்பனவு இணைப்புகளில் 'பேர்பிக்ஷி' பக்கேஜ்க்கு லங்கா பெல்லிலிருந்து எந்தவொரு வலையமைப்புக்கும் எந்தவொரு நேரத்திலும் நிமிடத்துக்கு இரண்டு ரூபாவும், லங்கா பெல்லிலிருந்து லங்கா பெல்லுக்கு எந்தவொரு நேரத்திலும் நிமிடத்துக்கு ஒரு ரூபாவும் கட்டணங்களாக அறவிடப்படுகின்றன. அத்துடன் பேர் செக்கன் பக்கேஜ்க்கு லங்கா பெல்லிலிருந்து எந்தவொரு வலையமைப்புக்கும் எந்தவொரு நேரத்திலும் நிமிடத்துக்கு இரண்டு ரூபா 50 சதமும், லங்கா பெல்லிலிருந்து லங்கா பெல்லுக்கு எந்தவொரு நேரத்திலும் நிமிடத்துக்க ஒரு ரூபா 25 சதமும் கட்டணமாக அறவிடப்படுகின்றது.

பிற்கொடுப்பனவு இணைப்புகளுக்கு மாதாந்த வாடகைக் கட்டணம் 320 ரூபாவும் அறவிடப்படுகின்றது. இதேவேளை வேகமான சிக்கனமான புரோட்பான்ட் பக்கேஜ்கள் 24 மணி நேரமும் தடைப்படாமல் சேவையை வழங்குவதற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

லங்கா பெல்லின் ஐ.டி.டி.கட்டணங்களாக இந்தியா, கனடா, ஐக்கிய இராஜ்ஜியம், நெதர்லாந்து, டென்மார்க், ஆஸ்திரேலியா, அமெரிக்கா, இத்தாலி, பிரான்ஸ், சவுதி, கட்டார், ஐக்கிய அரபு இராஜ்ஜியம், பஹ்ரைன் ஆகிய நாடுகளுக்கு குறைந்த கட்டணங்கள் அறவிடப்படுவதுடன் அழைக்கப்படும் அழைப்புகளுக்கு ஏற்ப நிமிடத்துக்கு 50 சதம் உள்வரும் அழைப்புகளுக்கு இலவசமாக வழங்கும் ஒரேயொரு சேவை நிலையமாகவும் லங்காபெல் தனது சேவையை விஸ்தரித்துள்ளது. (த 14)

## குளோசப் பற்பசை அனுசரணை





அண்மையில் கொழும்பில் நடைபெற்ற இலங்கை கலை மற்றும் அழகுசாதன பற்சிகிச்சை நிலையத்தினால் (SLAACD) ஏற்பாடு செய்யப்பட்ட ஒன்பதாவது வருடாந்த அறிவியல் கூட்டத்தொடருக்கு யுனிலீவர் நிறுவனத்தின் இளைஞர்களுக்கான வாய்ச்சுகாதார தயாரிப்பான குளோசப் வர்த்தக நாமமானது அனுசரணை வழங்கியிருந்தது.

டாக்டர் பி.டி.ஜோஷி - பற்சிகிச்சை ஆலோசகர் இந்தியா, டாக்டர் பரேஷ் காலே- Prosthodontist Consultant india, டாக்டர் சந்தன ஹேரத் - பற்சிகிச்சை நலமீட்பு ஆலோசகர் மற்றும் சிரேஷ்ட பேராசிரியர் - பற்சிகிச்சை பிரிவு - பேராதனைப் பல்கலைக்கழகம்; டாக்டர் ரன்ஜித் வரீ சிங்க - Endodontics விசேட பிரிவு ஆகியோர் பங்கேற்றிருந்த இவ்விரண்டு நாள் கூட்டத்தொடரில் நூற்றுக்கும் அதிகமான பற்சுகாதார மருத்துவர்கள் பங்கேற்றிருந்தனர்.

இவ்வருடத்தின் நிகழ்வுகள் "aesthetics- blends with the trend" என்ற தொனிப்பொருளின் கீழ் நடைபெற்றதுடன், பங்கேற்றவர்களுக்கு சொற்பொழிவுகள், செயல்முறை விளக்கம் மற்றும் நேரடி ஆராய்ச்சிகள் மூலம் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

ஒரு சில கலந்துரையாடல்களின் போது நோயாளியின் பற்சிகிச்சை நலமீட்புகள், உள்ளார்ந்த பிளிச்சிங் முறைகள், பல் மறுசீரமைப்பு, பல் வேர்க்குழி சிகிச்சைகள், பற்களை வெண்மையாக்கல் மற்றும் வாய்ச்சுகாதாரம் குறித்து முழுமையான சிகிச்சைகளை மேற்கொள்வது எவ்வாறு என விழிப்புணர்வு வழங்கப்பட்டது. டாக்டர் அருணாச்சலம் அவர்கள் மூலம் நீண்டகாலம் நிலைத்திருக்கக் கூடிய வகையில் பற்களை மறுசீரமைப்பது எவ்வாறு என்பது குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

இந் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த இலங்கை சட்டத்துறை அதிபர் பாலித பெர்னாண்டோ கருத்து தெரிவிக்கையில் ''பாடசாலைகளின் கலெண்டர்களில் முக்கிய நிகழ்ச்சி நிரலாக வருடாந்த அறிவியல் கூட்டத்தொடர் அமைந்துள்ளது என்பதை அறிவேன். இந்நிகழ்ச்சியானது அங்கத்தவர்களுக்கு தங்களது அனுபவம், நிபுணத்துவம் மற்றும் பற்சிகிச்சைகளின் போது சிகிச்சை கையாண்ட விதம் குறித்த தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பாக அமைந்தது'' என்றார்.

## வர்த்தகத்தை விஸ்தரிக்கும் ரேணுகா

ரேணுகா ஷோவலஸ் (முன்னர் கொகோ லங்கா பி.எல்.சி. என அறியப்பட்ட) நிறுவனம் தனது புதிய தூர நோக்கு செயல்நோக்கு மற்றும் கூட்டாண்மை அடையாளம் ஆகிய வற்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளது.

விவசாயம்சார் வர்த்தகத் துறையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு செயற்படும் நிறுவனம் என்ற நிலையிலிருந்து, அனைத்து வசதிகளையுமுடைய உணவு மற்றும் குடிபான கம்பனியாக திகழ்வதில் அதிக கவனம் செலுத்துவதற்கு இந்த மாற்றம் வழிவகுக்கும்.

இத்துறையில் உள்ள மிகப் பெரிய கம்பனிகளுள் ஒன்றாக முன்னேறும் இலக்குடன் ரேணுகா ஷோ வலஸ் நிறுவனம் செயற்படவுள்ளது.

நாம் மேற்கொண்டு வருகின்ற முழு அளவிலான பிரிவுகளையும் அதேநேரம் நாம் கண்டறிந்து கொள்ளும் வாய்ப்புக்களையும், எமது புதிய பெயரானது சிறப்பாக பிரதிபலிக்கின்றது.

உணவு மற்றும் குடிபானத் துறையில் முன்னணி அந்தஸ்திலுள்ள ஒரு தொடரிலான கம்பனி களை ரேணுகா ஷோ வலஸ் நிறுவனம் ஒரு கொடியின் கீழ் கொண்டுள்ளது.

இலங்கையில் தலைமுறை தலைமுறையாக இவ்வர்த்தக குறியீடுகளினால் கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கையின் மரபுரிமையை இது பின் தொடர்ந்து செல்வதாக அமைந்துள்ளது.

உள்ளீட்டுப் பொருள்கள் முதல் இறாக்கைகள் வரை அனைத்து விடயங்களிலும் பெறுமதித் தொடரை கட்டுப்படுத்துவதன் மூலம் எமது வர்த்தக திசைகளை கூட்டிணைக்கவும், ஒருங் கிணைந்த வாய்ப்புக்களை விடுவிக்கவும் நாம் எதிர்பார்ப்புடன் இருக்கின்றோம்.

## உறுதியான நிலையில் CDB

சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பீஎல்சி (CDB) நிறுவனம் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்திற்கு வழங்கியுள்ள அறிக்கையின் படி மொத்த சொத்துப் பெறுமதியாக ரூ 20 பில்லியனைப் பதிவு செய்துள்ளது.

ஏழு மிகப்பெரிய நிதி நிறுவனப் பிரிவுகளின் கீழ் CDB நிறுவனமும் அடங்குகின்றது.

2012 செப்டம்பர் 30ஆம் திகதி முடிவடைந்த 6 மாதத்தின் வளர்ச்சி, முன்னைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் 11.56 வீதத்திலிருந்து 15.79 வீதமாக வளர்ச்சியடைந்துள்ளது. 6 மாதத்தின் வரிக்கு பின்னரான இலாபம் ரூ.245.5 மில்லியனை பதிவு செய்துள்ளது.

2012 செப்டம்பர் 30 ஆம் திகதி முடிவடைந்த ஐந்தொகை அறிக்கையின் படி 21.79 வீதமாக வளர்ச்சி அதிகரித்துள்ளது. அத்துடன் கடந்த 31ஆம் திகதி மார்ச் 2012 முடிவடைந்த காலத்திற்கு ரூ20.15 பில்லியனைப் பதிவு செய்துள்ளது.

கடந்த 6 மாதத்திற்கான வருவாயானது 37 வீதத்தில் இருந்து 48 வீதமாக ரூ.1.92 பில்லியனை சம்பாதித் துள்ளது. நிகர செயற்பாடற்ற கடன்கள் 2.54 சதவீதமாக பதிவாகியுள்ளது.(உண்மை வீதம் 1.17)

CDB நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும், தலைவருமான மகேஷ் நாணயக்கார கருத்து தெரிவிக்கையில் ''CDB நிறுவனமானது சந்தையின் அமைப்பிற்கு ஏற்ப மாற்றமடைந்துள்ளதுடன், நிதியாண்டின் இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்தார்''.

# கல்வி அமைச்சு–ஓராக்கிள் நிறுவனம் இணைந்து 1000 பாடசாலைகளுக்கு கணினி பாடநெறிகள்



இலங்கையின் 1000 இரண்டாம் நிலை பாடசாலைகளில் கணினி மென்பொருள் முறை கற்கைகளை வழங்கும் முகமாக, இலங்கை கல்வி அமைச்சு, ஓராக்கிள் கோர்ப்பரேஷன் சிங்கப்பூர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மூலம், ஓராக்கிள் அக்கடமியின் Java Fundamentals Curriculum மற்றும் "Getting Started With Java Using Alice'' போன்ற பயிற்சிப் பட்டறைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த திட்டத்தின் மூலம் கல்வி அமைச்சுக்கு இலங்கையின் இரண்டாம் நிலை பாடசாலைகளை சேர்ந்த சுமார் 25000 மாணவர்களையும், 1000 ஆசிரியர்களையும் தகவல் தொழில் நுட்பத்துறையில் தயார்படுத்த முடிவதுடன், எதிர்காலத்தில் சிறந்த தகைமையுடைய ஊழியர்களையும் தயார்படுத்தக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஓராக்கிள் அக்கடமி தனது புதிய ஜாவா கற்கைகளை இவ்வருடத்தின் முற்பகுதியில் அறிமுகப்படுத்தியிருந்தது. ஜாவா என்பது உலகின் பல பாகங்களிலும் பரவலாகப் பயன்படுத்தப்படும் கணினி கட்டமைப்பாகும். 9 மில்லியனுக்கும் அதிகமான மென்பொருள் வடிவமைப்பாளர்களின் மூலம் 3 பில்லியனுக்கும் அதிகமான உபகரணங்களில் பயன்படுத்தப்படுகிறது. இந்த ஓராக்கிள் அக்கடமியின் மூலம் 97 நாடுகளைச் சேர்ந்த 1.9 மில்லியனுக்கும் அதிகமான மாணவர்களுக்கு அனுகூலங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

கல்வி அமைச்சின் மேலதிக செயலாளரும் அறிவுக்கான கல்வித் திட்டத்தின் பணிப்பாளருமான அநுர ஏக்கநாயக்க கருத்து தெரிவிக்கையில், ''கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் நேரடி வழிகாட்டலின் கீழ் இலங்கையில் தொழில் நுட்பசார் கல்வி நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளை நாம் மேற் கொண்டு வருகிறோம். இதன் மூலம் எதிர்காலத்தில் இலங்கையில் தொழில்நுட்ப அறிவு வாய்ந்த தொழில் சார் தலைமுறையை உருவாக்க முடியுமென நாம் கருதுகிறோம்'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



**தாமோதரம்பிள்ளை தமிழினி**

*(தரம் 11 மாணவி - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)*

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் ஐயனார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை தமிழினி நேற்று (03.12.2012) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் தாமோதரம்பிள்ளை- யோகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், சஜிவன், துளசிகா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (04.12.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு கரைச்சி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

ஐயனார் வீதி,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
14 ✱ 01 ✱ 1952



மறைவு
21 ✱ 10 ✱ 2012

திதி: ஸப்தமி

**மார்க்கண்டு பாலமார்க்கண்டன் (seaman)**

கடந்த 21.10.2012 அன்று சிவபதமடைந்த மார்க்கண்டு பாலமார்க்கண்டன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (04.12.2012) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற உள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம் (இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

50, உதயசூரியன் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம். (26364)(3.14) குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்டச் செயலகத்தின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளரும் சமுர்த்தி உதவி ஆணையாளரும் நலன்புரி கழகத்தின் தலைவருமான க. மகேஸ்வரன் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி செல்லம்மா கந்தையா**

அவர்கள் 30.11.2012 அன்று இறைபதம் அடைந்ததனையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்டச் செயலக நலன்புரி கழகம். (26358)(3.14)

## 27 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
14.12.1924

மறைவு
04.12.1985

(ஓய்வுபெற்ற முன்னாள் கல்விப் பணிப்பாளர்)

ஆசிரியராய், அதிபராய், கல்விப் பணிப்பாளராய்
சமூக சேவகனாய், குடும்பத் தலைவனாய்
ஆற்றிய பணிகள் தான் எண்ணிலடங்கா
பண்பின் சிகரமே! பாசத்தின் திருவுருவே
நின் பணிகள் என்றும் உம் புகழைத் தாங்கி நிற்கும்.

137, பலாலி வீதி,
திருநெல்வேலி.

உம் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(24315)(2.6.7)

# மாவீரர் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவித் திட்டம்

இலங்கையில் கஷ்டங் களை எதிர்நோக்கும் ஆயிரம் மாவீரர் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவித்திட்டம் ஒன்றை நாடுகடந்த தமிழீழ அரசின் மாவீரர்கள், முன்னாள் போராளிகள் குடும்ப நலன் பேணும் அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

மாவீரர் நாளில் இருந்து (27-11-2012) அடுத் தாண்டு மே-18 தமிழ்த் தேசிய துக்க நாள் வரைக்குமான இடைப் பட்ட காலத்தில் குறைந்தது ஆயிரம் மாவீரர் குடும்பங்களின் வாழ் நிலையை மேம்படுத்தும் நோக்கில் 'தளிர்' எனப் பெயரிடப்பட்டு மேற்படி திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள் ளதாக மாவீரர்கள், முன்னாள் போராளிகள் குடும்ப நலன் பேணும் அமைச்சர் உருத்திரபதி சேகர், நாடு கடந்த தமிழீழ அரசின் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர் தாயகத்தில் ஆலயங்களில் அன்னதான நேரத்தில் பல மாவீரர் குடும்பங்கள் அன்னமேற்று வாழ்கின்றன என்று கேள்வியுறுகையில் நெஞ்சு வெடிக்கிறது. மாவீரர்களின் செல்வங்கள் வீதியோரத்தில் கையேந்தி நிற்கின்றனர் என்பதை அறிகையில் நாம் புலத்தில் வாழும் பெருமித வாழ்வு குறித்த பெருமை எல்லாம் ஒரு நொடிப் பொழுதில் கரைந்து விடுகிறது. எனவே மாவீரர் வாரிசுகளை எம் குடும்பத்தில் ஒருவர் என்ற உணர்வுடன்நாம்அணுகிடுவோம். அதற்காக உங்களை எங்களுடன் இணைய் அழைக்கின்றோம்.

நாடுகடந்த தமிழீழ அரசின் மாவீரர்கள், முன் னாள் போராளிகள் குடும்ப நலன் பேணும் அமைச்சின் குறித்த r. sckartgt c.org மின்னஞ்சல் ஊடாகவோ அல்லது அந்தந்த நாட்டு நாடு கடந்த தமிழீழ அரச பிரதிநிதிகள் ஊடாகவோ இது தொடர்பிலான விவரங் களைப் பெற்றுக் கொள் ளலாம்-என்றார்.

(வ)

## கடற்கரையில் கழிவுப்பொருள்கள்; பொதுமக்கள்எதிர்த்து ஆர்ப்பாட்டம்

காத்தான்குடி,டிசெ.4

காத்தான்குடி நகர சபை, றிஸ்வி நகர் கடற்கரை பகுதியில் கழிவுப் பொருள்களைக் கொட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கிராம மக்கள் நேற்றுத் திங்கட்கிழமை காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நகரசபையின் வாகனங்கள் கழிவுப் பொருள்களைக் கொட்டுவதற்காகக் குறித்த இடத்துக்கு வந்தபோது அதை பொதுமக்கள் தடுத்து நிறுத்தியதுடன் சுலோக அட்டைகளை தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நகர சபையால் கொட்டப்படும் கழிவுப் பொருள்களால் இந்தப் பகுதியின் சுகாதாரம் சீர்கெடுவதுடன்,சூழலும் மாசடைகிறது என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

கழிவுப் பொருள்களைக் கொட்டக் கோடிகளை வசூலித்து நீங்கள் செய்தது என்ன?, நகர முதல்வரே சூழலை அழகு படுத்தப் பாடுபடும் நீங்கள் எங்களின் குழந்தைகளின் சுகத்தை காப்பாற்றுங்கள், நகர சபையே இங்கு கழிவுப் பொருள்களைக் கொட்டுவதை உடன் நிறுத்த வேண்டும் போன்ற சுலோகங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கி நின்றனர்.

குறித்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் இந்தக் கிராம மக்களிடம் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இது தொடர்பாகக் காத்தான்குடி நகர சபை முதல்வர் எஸ்.எச்.எம்.அஷ்பரிடம் கேட்ட போது, காத்தான்குடி நகர சபைப் பிரிவில் திண்மக் கழிவகற்றலுக்கான காணி கொள்வனவு செய்யப்பட்டுத் திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவத்துக்கான முறையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வேலைகள் நிறைவடைந்தவுடன் இந்தப் பிரதேசத்தில் கழிவுப் பொருள்கள் கொட்டுவது நிறுத்தப்படும். தற்போது இந்தப் பகுதியில் கழிவுப்பொருள்கள் கொட்டப்படுவதால் சுகாதாரச் சீர்கேடுகள் இருந்தால் அவற்றை துப்புரவு செய்து வழங்கப்படும்.-என்றார்.

(ச)

## மரண அறிவித்தல்

**சண்முகம் இராசரெட்னம்**



நல்லூரைப் பிறப்பிடமாகவும், கைதடி கிழக்கு, கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் இராசரெட்னம் நேற்று முன்தினம் (02.12.2012) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சிவப்பி தம்பதியரின் அன்பு மருமகனும், அன்னப்பிள்ளையின் பாசமிகு கணவரும், காலஞ் சென்ற இராசையா மற்றும் இராசதுரை, பவளம், நாகேஸ்வரி (கொழும்பு), ராஜேஸ்வரி (சுவிஸ்), ஆகியோரின் பாசமுள்ள சகோதரனும், செல்லன், பூரணம் (டென்மார்க்), அர்ச்சணன் (பிரான்ஸ்), தங்கம்மா (டென்மார்க்), வசந்தாதேவி ஆகியோரின் பாசமுள்ள மைத்துனரும், சரஸ்வதி, இராசையா, ராசம்மா, செல்லத்துரை, தங்கராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சரஸ்வதி வெள்ளையன், பாமாதேவி, அப்புத்துரை, தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், லோறன்ஸ் (சுபா பான்சி உரிமையாளர், சாவகச்சேரி), சுபோதினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சன்றோயஸ்குயின்ரஸ் (சதீஸ்- SDC Technical Supovoiser) ஆகியோரின் அன்பு மைத்துனரும், போல் றொபின்ஸனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (05.12.2012) புதன்கிழமை அவரது இல்லத்தில் இருந்து மு.ப 9.30 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு நாவற்குழி அற்புத அன்னை தேவாலயத்தில் முற்பகல் 10 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கைதடி உரியான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.லோறன்ஸ் (மகன்
சுபா பான்சி உரிமையாளர்)

கைதடி கிழக்கு,
கைதடி. 0778680358 (26361)(3.14)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகம்
1942
07
07



விண்ணுலகம்
2011
12
16

**சின்னத்தம்பி தங்கையா**

எங்கள் குடும்ப விளக்காய்
வாழ்ந்திட்ட தெய்வமே எத்தனை
உறவுகள் இருந்தாலும் உங்களுக்கு
ஈடாகுமா
பாசம் வைத்து எங்களை பண்புடன்
ஆயிரமாயிரம் அறிவுரை கூறி அன்புடன்
வளர்த்தீர்கள் அத்தனை நினைவுகளும்
எம்மனதில் வந்து கண்ணீராய் வடிகிறது
ஆண்டு எத்தனை சென்றாலும் உங்கள்
நினைவுகள் எம் மனதை விட்டகலாது

மனைவி,பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## தவறிவிட்டது

கு.குணரத்தினம் ஆகிய எனது வாகன ஆவணங்கள் பருத்தித்துறை வீதியில் கல்வியங்காட்டுக்கும் புத்தூர் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்
தொடர்பு.0777630752
26360

## காணி விற்பனைக்குண்டு

இளவாலைச் சந்தியில் இருந்து 400 மீற்றர் தூரத்தில் மானிப்பாய் இளவாலை வீதியில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0773151723

## விற்பனைக்கு

ஆறு பெரிய
வேப்ப மரங்களும்
10 சிறிய
சமண்டலைகளும்
விற்பனைக்குண்டு.
ஆ.தேவராஜா
(ஆசிரியை)
0772571253

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம் veta



யாழில் பல்கலைக்கழக, தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் 5000க்கு மேற்பட்டோர் தெரிவு செய்து வெற்றி பெற்று நிரூபிக்கப்பட்ட Experts in English Training

Spoken English புதிய பிரிவுகள் ஆரம்பம்.

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| Sat, Sun 10.00 a.m.<br>Wed, Fri 3.30 p.m. | Sat, Sun 2.30 p.m.<br>Tue,Thu 8.30 a.m. | Mon, Wed, Fri<br>9.30 a.m. | Sat, Sun 8.00 a.m.<br>Tue,Thu 8.30 a.m. |

Come, let's speak fluent English

சர்வதேச ஆங்கில பரீட்சைகள்

UK செல்வதற்கான A1-Exam (திருமணம் செய்து UK செல்வதற்கான) B1-Exam (Student Visa மூலம் UKசெல்வதற்கான)

City & Guilds Approved Centre

IELTS •Unique Test Tips •Latest course Materials

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403 | M.M.V வீதி. (மங்கையர் கல்லூரிக்கு முன்பாக) Tel.:021-226 2470 | கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0243 | கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Jet மோட்டோர்ஸ் சந்தி Tel.:021-224 1970 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைப்படக் கமரா / இயந்திரக் கண்காட்சியும்

## பிறின்ரிங் செயற்பட்டறையும்







**அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்!**

* Digital Cameras (விசேட விலைக் கழிவில்)
* நவீன Fujifilm Dry Mini Colour Lab
* Photo Book Binding Machine
* Xerox Colour Piriting Machine
* Wide Format Colour Printer

ஆகியவற்றின் நவீன தொழில்நுட்பத்தை அறிந்து கொள்ளவும்,
கொள்வனவு செய்யவும் விரையுங்கள்

இடம் :- "கிறீன் கிறாஸ் ஹோட்டல்"

இல.33, ஆசீர்வாதம் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

காலம் :- இம் மாதம் 5 ஆம், 6 ஆம், 7 ஆம் திகதிகளில்

நேரம் :- 9.00am to 8.00 pm

தொடர்பு:- 0777328463




FUJIFILM SOLE AGENT Hayleys


# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் உயர்திரு.

## சின்னத்தம்பி தில்லைநடராஜா

(முன்னாள் புகையிரத திணைக்கள இலிகிதர்,
மருதானை)

**திதி:- நந்தன வருஷ கார்த்திகை ஷஷ்டி 04.12.2012**

தங்கள் ஊன் உடல் உருக்கி ஒளிர வைத்த அப்பாவே!
நீங்கள் வான் வீடு சென்று ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டதா!
நீங்கள் உங்கள் குடும்பத்தில் உள்ளவர்களைத்
தெய்வமாக இருந்து ஆசீர்வதிக்கும் வண்ணம் வேண்டுகிறோம்.

அன்புடன் நினைவு கூரும்

மனைவி T. வனிதா காந்தி - கொழும்பு,
மகள் - பிருந்தாகாந்தி சுபசீலன் - பிரான்ஸ்,
மகன் - T. வருணகாந்தி - லண்டன்
மகன் - T. நிஷாகாந்தி - லண்டன்

தோற்றம் 09.09.1951
மறைவு 29.11.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபையில் ரணிலுக்கு அரசு பாராட்டு மழை

கொழும்பு, டிசெ.4

ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய மேலும் 6 வருடங்களுக்கு தேசியக் கட்சியின் தலைவராக பதவி நீடிக்கப்பட்டமைக்கு அரசு நேற்று நாடாளுமன்றில் வாழ்த்துத் தெரிவித்தது.

வாய்மூல விடைக்கான நேரத்தில் வீடமைப்புத் துறை அமைச்சர் விமல் வீரவன்ஸவிடம் கேட்பதற்காக ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று வீடமைப்புத் தொடர்பான கேள்விகளை ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கியிருந்தார். கேள்விகளைக் கேட்டிருந்த தயாசிறி அப்போது சபைக்கு வந்திருக்காததால் அமைச்சர் விமல் வீரவன்ஸ கேள்விக்கான பதிலை சபா பீடத்தில் சமர்ப்பித்தார்.

அப்போது அவர், ''ரணில் விக்கிரமசிங்கவின் முகம் மகிழ்ச்சியாகவுள்ளது. சஜித் பிரேமதாஸவின் முகம் வாடிப் போயுள்ளது. தயாசிறியும் சபைக்கு வரவில்லை. ரணில் வெற்றிபெற்றதால் கவலையின் காரணமாக தயாசிறி வரவில்லையா எனத் தெரியாது. ரணில் 6 வருடங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக நியமிக்கப்பட்டமைக்கு நாம் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்'' எனக் கூறினார்.

இதையடுத்து, அரச தரப்பினர் மேசைகளின் மீது தட்டி வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். (ஐ-சி)

# பிரேரணைக்கு எதிரான மனுவை விசாரிக்க உயர்நீதிமன்றம் முடிவு

## அடுத்த விசாரணை 21 ஆம் திகதி

கொழும்பு, டிசெ.4

பிரதம நீதியரசருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றவியல் பிரேரணை தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தாக்கல் செய்துள்ள அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது.

உயர்நீதிமன்ற நீதிபதி நிமல் காமினி அமரதுங்க உள்ளிட்ட நீதிபதிகள் குழு முன்னிலையில் குறித்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்வதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கு உரிமை உள்ளது என அந்தச் சங்கத்தின் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி தெரிவித்தார்.

நீதித்துறைக்கான சுதந்திரத்தை பாதுகாப்பதற்காகவே இந்த மனுவை தாக்கல் செய்தனர் எனவும், நீதித்துறைக்கான சுதந்திரம் பாதிக்கப்படும் போது சட்டத்தரணிகள் தமது கடமையை உரிய வகையில் நிறைவேற்ற முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த மனு மீதான அடுத்த கட்ட விசாரணை 2013ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (ஐ-சி)

# 37 இந்திய மீனவர்கள் கடற்படையால் கைது

நடுக்கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்கள் 37 பேரை இலங்கைக் கடற்படையினர் நேற்றுக்காலை கைதுசெய்துள்ளனர்.

திருகோணமலை, புல்மோட்டை கடற்பகுதிக்கு அருகில் வைத்தே குறித்த மீனவர்கள், 5 ட்ரோலர் படகுகளுடன் கைதுசெய்யப்பட்டனர் என கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

திருகோணமலை கடற்படை முகாமில் தற்போது தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் திருகோணமலை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கவுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நிலத்தடி 'கேபிள்' அறுந்ததால் தொலைபேசிகள் நேற்று 'அவுட்'

யாழ்ப்பாணம், டிசெ.4

யாழ். நகரில் நிலத்தடி கேபிள் சேதமடைந்தமையால் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் 500 இக்கும் மேற்பட்ட கேபிள் தொலைபேசி இணைப்புகள் நேற்று திங்கட்கிழமை செயலிழந்தன.

யாழ். நகரில் கே.கே.எஸ். வீதியும் மின்சார நிலைய வீதியும் சந்திக்கும் இடத்தில் வீதி அகலிப்புப் பணியின் போது ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் நிலத்தடி பிரதான மார்க்கக் கேபிள் லைன் சேதமடைந்தன.

நிலத்தடிக் கேபிள் சேதமடைந்தமையால் 500 க்கும் மேற்பட்ட கேபிள் தொலைபேசி இணைப்புக்கள் நேற்றுச் செயலிழந்தன.

கே.கே.எஸ். வீதி, ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதி, மானிப்பாய் வீதி, மின்சார நிலைய வீதி ஆகிய இடங்களூடாகச் செல்லும் கேபிள் தொலைபேசி இணைப்புக்களே பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சேதமடைந்த கேபிள் இணைப்பைச் சீர் செய்யும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (த-17)

# நலன்புரி நிலையங்கள் இல்லையெனில் அமைச்சரவை ஒதுக்கிய நிதி எதற்கு?

யாழ்ப்பாணம், டிசெ.4

இலங்கையில் அகதிகளும் இல்லை, நலன்புரி நிலையங்களும் இல்லை என்று கடந்த செப்ரெம்பர் மாதம் இலங்கை அரசு அறிவித்த பின்னர் யாழ்ப்பாணத்திலுள்ள நலன்புரி நிலையங்களின் புனரமைப்புக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

நலன்புரி நிலையங்கள் இல்லையெனில் ஏன் அதற்காக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் இலங்கை அரசினால் மனிக்பாம் நலன்புரி நிலையம் மூடப்பட்ட போது, இலங்கையில் அகதிகள் என்று இனி ஒருவரும் இல்லை. இடம் பெயர்ந்தோர் தங்க வைக்கப்பட்டிருந்த இறுதி நலன் புரி நிலையமும் மூடப்பட்டு விட்டது எனத் தெரிவித்து அரசு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

**கடந்த செப்ரெம்பர் மாதம் இலங்கை அரசினால் மனிக்பாம் நலன்புரி நிலையம் மூடப்பட்ட போது, இடம் பெயர்ந்தோர் தங்க வைக் கப்பட்டிருந்த இறுதி நலன் புரி நிலையமும் மூடப்பட்டு விட்டது எனத் தெரிவித்தது அரசு.**

இந்த நிலையில் யாழ். மாவட்டத்தில் வலி. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டிருந்த நலன்புரி நிலையங்களின் புனரமைப்புக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதுவரை காலமும் எதுவித உதவிகளும் வழங்கப்படாத நிலையில் திடீரென நலன்புரி நிலையப் புனரமைப்புக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருப்பதன் மூலம் தமது சொந்த இடங்கள் விடுவிக்கப்படாமல் போகுமோ என்று நலன்புரி நிலையங்களில் உள்ள மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (த-5)

# ரோஸி எம்.பியின் அழகால் சபையில் அமைச்சர் மயக்கம்

கொழும்பு, டிசெ.4

நாடாளுமன்ற உறுப்பினர் ரோஸி சேனநாயக்கவின் பேரழகு தம்மை மயக்குவதாகவும் இதனால் அவர் கேட்கும் கேள்விகளுக்குத் தம்மால் பதிலளிக்க முடியாமல் உள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

வாய்மூல விடைக்கான நேரத்தின்போது ரோஸி சேனநாயக்க, குமார வெல்கமவிடம் கேள்வி கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

எனது 19 வருட அரசியல் வரலாற்றில் இன்றுதான் மிகவும் மகிழ்ச்சியில் இருக்கிறேன். ஒரு பேரழகி என்னிடம் இன்று கேள்வி கேட்டுள்ளதே அந்த மகிழ்ச்சிக்குக் காரணம்.

அவருக்குப் பதிலளிக்க நான் கொடுத்துவைத்திருக்க வேண்டும். பிரதி சபாநாயகரே! இன்று நான் உங்களது முகத்தைப் பார்த்துப் பேசமாட்டேன். அந்த அழகியின் முகத்தைப் பார்த்தே பேசுவேன்.

ஆனால் அவரது முகத்தைப் பார்க்கும்போது என் மனதில் எழும் எண்ணங்களை இந்தச் சபையில் என்னால் கூறமுடியாமல் உள்ளது. தேவையேற்பட்டால் உறுப்பினர்கள் சபைக்கு வெளியில் வந்தால் அது என்னவென்று கூறுவேன்.

அந்த அழகியின் முகத்தைப் பார்த்துக்கொண்டு பேச விரும்பினாலும் அவரது முகத்தைப் பார்க்கும்போது வார்த்தைகள் வர மறுக்கின்றன - என்றார்.

அமைச்சரின் கருத்துகள் தம்மை நிந்தனை செய்வதாகக் கூறிய ரோஸி, தமது அழகுக்குப் பதிலளிக்காது கேள்விக்குப் பதிலளிக்குமாறு கோரினார். (ஐ-சி)

# பல்கலை மாணவர்கள் மீதான தாக்குதல் இந்தியா கண்டனம் தெரிவிக்க வேண்டும்

## கருணாநிதி வலியுறுத்து



சென்னை, டிசெ.4

இலங்கையில் யாழ் பல்கலைக்கழகத்தில் மாவீரர் தினத்தையொட்டி கைது செய்யப்பட்ட மாணவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார். மேலும் இதுகுறித்து இந்திய அரசின் சார்பில் இலங்கை அரசுக்கு வன்மையான கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து சென்னையில் நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

கார்த்திகை தீபத்தையொட்டி இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிகளில், வீடுகளில் ஏற்றி வைத்த விளக்குகளையும் கூட இலங்கை இராணுவத்தினர் அடித்து நொருக்கி ஈழத் தமிழர்கள் மனதை காயப்படுத்தியுள்ளனர்.

மாவீரர் தினத்தை யொட்டி 27 ஆம் திகதியன்று வீர வணக்கம் செய்து கொண்டிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் களை இலங்கை இராணுவத்தினர் தாக்கியுள்ளனர். இதுகுறித்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவரும், சிங்களவருமான சஞ்சீவ பண்டார பேட்டி அளிக்கையில்,

யாழ்.பல்கலைக் கழக மாணவர்கள் தாக்கப்பட்டது, மற்றும் நான்கு மாணவர்களின் கைது நடவடிக்கைகளுக்கு எதிராக நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக் கழக மாணவர்களும் ஒன்றிணைந்த போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட மாணவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்றும் அவர்களது பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற தாக்குதலைக் கண்டித்து பல்வேறு பல்கலைக் கழகங்களில் கால வரையறையற்ற வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டம் நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து இந்தியத் தூதரகமும் விசாரித்து இந்திய அரசிடம் தெரிவித்து, அரசின் சார்பில் வன்மையான கண்டனத்தை இலங்கை அரசுக்கு தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் - என்றுள்ளது. (வ)



நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவால் போட்டோ பிரதி இயந்திரம் அன்பளிப்புச் செய்யப்பட்டது. பன்முகப்படுத்தப்பட்ட வரவு -செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்தே இந்த இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. பாடசாலை அதிபர் மனோகரனிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவின் சார்பில் சென்ற பிரதிநிதி போட்டோ பிரதி இயந்திரத்தை கையளிக்கிறார். (ம)

# மாணவர் மீதான தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டும்

## கனேடிய மாணவர் சமூகம் கடும் கண்டனம்

யாழ்.பல்கலைக்கழக மாணவர் சமூகம் மீது இலங்கை இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள மிலேச்சத்தனமான தாக்குதல்களைக் கண்டித்துள்ள கனேடிய மாணவர் சமூகம் இவ்வாறான நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறும் இலங்கையை வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து கனேடிய மாணவர் சமூகம் வெளியிட்ட கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

தமிழர் தேச மக்கள் மீதான இலங்கை அரச வன்முறைகள் தொடர்வதை மேற்படி தாக்குதல் மேலும் வெளிக்காட்டி நிற்கின்றன. தமிழ் மக்களைத் தாக்க சர்வ தேச சமூகம் உடனடியாக விரைந்து செயற்பட வேண்டும்.

இதேவேளை சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தமிழர் தாயகமே ஈழத்தமிழர் பிரச்சினைக்கு தீர்வாகும் என்பதை வலியுறுத்தியுள்ள அறிக்கைகள் அத்தகைய தீர்வுக்காக விரைந்து செயற்படுமாறு சர்வதேச சமூகத்தையும் வேண்டியுள்ளன.

சட்டத்துக்குப் புறம்பாக கைது செய்யப்பட்டுள்ள மாணவர் சமூகப் பிரதிநிதிகளை உடன் விடுதலை செய்ய வேண்டும். அதனை உறுதிப்படுத்துமாறு சர்வதேச சமூகத்தையும் வேண்டுகின்றோம். இவ்விடயத்தை சர்வதேச மயப்படுத் தும் பல்வேறு வேலைத்திட்டங்களிலும் ஈடுபட்டுள்ளோம்-என்றுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவரங்கால் மத்தி சம்பியன்





**முதல் இரண்டு சுற்றுக்களிலும் தலா ஒவ்வொரு சுற்றை தம்வசமாக்கியிருந்த இரு அணிகளும் மூன்றாவது சுற்றிலும் ஆக்ரோஷ மான ஆட்டத்தை வெளிப்படுத்தின. இவ் இறுதிப் போட்டியில் அதிக நேரம் நீடித்த இந்தச் சுற்றில் இரு அணி வீரர்களும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடினர் .**

யாழ்ப்பாணம்,டிசெ.4

கோட்டைக்காடு மல்லாகம் ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்திய முத்துலிங்கம் ஜெகநாதனின் 23 ஆவது ஆண்டு ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி சம்பியனானது.

கோட்டைக்காடு மல்லாகம் ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக்காக மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மின்னொளியில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.கரப்பந்தாட்டத்தில் யாழ். மாவட்டத்தில் இந்த இரு அணிகளுமே பலம் வாய்ந்தவையாக விளங்குவதால், போட்டி ஆரம்பத்தில் இருந்து முடிவு வரை பரபரப்பாக அமைந் தது.

5 செற்களைக்கொண்ட இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி முதலாவது சுற்றை பலத்த போராட்டத்தின் மத்தியில் 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் தனதாக்கியது.ஆயினும் அடுத்த சுற்றில் வீறு கொண்டெழுந்தது ஆவரங்கால் இந்து இளைஞர் அணி. ஆயினும் அவ்வளவு சுலபத்தில் இரண்டாவது சுற்றை இழப்பதற்கு ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக வீரர்கள் இடம் கொடுக்க வில்லை. எனினும் இரண்டாவது சுற்றின் இறுதியில் 25:23 என்ற புள்ளி அடிப்படையில் அந்த சுற்றை ஆவரங்கால் இந்து அணி கைப்பற்றியது.

முதல் இரண்டு சுற்றுக்களிலும் தலா ஒவ்வொரு சுற்றை தம்வசமாக்கியிருந்த இரு அணிகளும் மூன்றாவது சுற்றிலும் ஆக்ரோஷ மான ஆட்டத்தை வெளிப்படுத்தின. இவ் இறுதிப் போட்டியில் அதிக நேரம் நீடித்த இந்தச் சுற்றில் இரு அணி வீரர்களும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்லர் என்தை நிரூபிக்கும் வகையில் விளையாடினர் .

எனினும் இறுதி நேரத்தில் அடுத்தடுத்து புள்ளிகளைக் குவித்த ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி மூன்றாவது சுற்றைத் தன் வசமாக்கியது. அதே வேகத்தோடு நான்காவது சுற்றிலும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டி ஆவரங்கால் இந்து அணியை வீழ்த்தி சம்பியனானது ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம்.

இறுதியாட்டத்தின் சிறந்த வீரனாக ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக வீரன் சொரூபனும், ஆட்ட நாயகனாக ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி வீரர் லக்ஸ்சியும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து மூன்றாமிடத்துக்கான போட்டியில் கே.கே.எஸ். விளையாட்டுக்கழக அணி, புத்தூர் கலைமதி 'ஏ' அணியுடன் மோதவிருந்தது. ஆயினும் போட்டி நேரத்துக்கு புத்தூர் கலைமதி 'ஏ' அணி மைதானத்துக்கு சமுகம் தரவில்லை. இதனால் கே.கே.எஸ். விளையாட்டுக்கழக அணி வெற்றியீட்டி, மூன்றாமிடத்தைப் பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (ங-23)

# றெஜின்போ அசத்தியது வீழ்ந்தது ஸ்கந்தா ஸ்ரார்



யாழ்ப்பாணம்,டிசெ. 4

அரசடி றெஜின்போ அணிக்கும் ஸ்கந்தா ஸ்ரார் அணிக்கும் இடையிலான நட்பு ரீதியிலான கிரிக்கெட் ஆட்டத்தில் றெஜின்போ அணி ஒரு இலக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.

ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் அரசடி றெஜின்போ அணியை எதிர்த்து ஸ்கந்தா ஸ்ரார் அணி மோதிக் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஸ்கந்தா ஸ்ரார் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா ஸ்ரார் அணி 40 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் நிஷாகரன் 64 ஓட்டங்களையும் ஜெனாகேசன் 30 ஓட்டங்களையும், விஜி 23 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் றெஜின்போ அணி சார்பில் தர்சன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 24 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும்,செந்தூரன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 29 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

165 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய றெஜின்போ அணி 9 இலக்குகளை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. இதில் விஸ்ணு 40 ஓட்டங்களையும் அப்புக்கண்ணா 23 ஓட்டங்களையும், தர்சன் 17 ஓட்டங்களையும், டார்வின்15 ஓட்டங்களையும் தமது அணிசார்பாக பெற்றனர். பந்து வீச்சில் ஸ்கந்தா ஸ்ரார் அணி சார்பில் இந்துஷன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 20 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், நிருஷன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ங-23)

# இன்றைய ஆட்டம்



யாழ்ப்பாணம், டிசெ.4

யாழ். உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்திவருகின்றது.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ங-23)


# மைலோ மினி ரக்பி தொடர் யாழ்.மாவட்ட போட்டிகள்

யாழ்ப்பாணம், டிசெ.4

'ஸ்ரீலங்கா பாடசாலை ரக்பி சங்கம்' 12 வயதுக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையே அகில இலங்கை ரீதியில் 'மைலோ' மினி ரக்பி சுற்றுப்போட்டித் தொடரை நடத்தி வருகின்றது. இதன் ஓர் அங்கமாக யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகள் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டிகளில் சென்.ஜோன்ஸ் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி ஆகிய பாடசாலை அணிகள் பங்குபற் றவுள்ளன. (ங-23)

# மாவட்ட கரம் சுற்றுப்போட்டி கழகங்கள் விண்ணப்பிக்கலாம்



யாழ்ப்பாணம், டிசெ.4

யாழ். மாவட்ட கரம் சங்கம் கழகங்களுக்கிடையிலான கரம் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது. யாழ்.மாவட்ட கரம் சங்கத்தால் முதல் முறையாக ஏற்பாட்டு செய்யப்பட்டுள்ள இந்தச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் ஜெ.மோகனிடம் பெற்று அதனை இம் மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் அவரிடமே ஒப்படைக்குமாறு யாழ். மாவட்ட கரம் சங்கத்தின் செயலாளர் என்.குமரேசன் கேட்டுக்கொண்டுள்ளார். (ங-23)

# யமாலியாவுக்கு அபார வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.4

திருகோணமலை உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரை திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்தி வருகின்றது.

இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் யமாலியா விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுள்ளது.

குறித்த ஆட்டத்தில் யமாலியா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிறீன்லைட் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

இதில் மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய யமாலியா விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் கிறீன்லைட் விளையாட்டுக் கழக அணியை வெற்றிகொண்டது. (ங-23)

# வவுனியா வடக்கு வலயத்தின் எறிபந்து பயிற்சி முகாம் இன்று

மாங்குளம், டிசெ.4

வவுனியா வடக்கு வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் உடற்கல்வி ஆசிரியர்களுக்கான எறிபந்துப் பயிற்சி முகாம் இன்று காலை 8.30 மணியளவில் ஓமந்தை மத்திய கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி பயிற்சி முகாமில் வவுனியா வடக்கு வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின்உடற்கல்வி ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும், அவ்வாறு குறித்த பாடசாலைகளின் உடற்கல்வி ஆசிரியர்கள் இல்லாத விடத்து அந்தப் பாடசாலையைச் சேர்ந்த ஆர்வமுள்ள ஆசிரியர் ஒருவரை இந்தப் பயிற்சி முகாமுக்கு அனுப்பி வைக்குமாறும் வவுனியா வடக்கு கல்வி வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் மங்களகுமார் அறிவித்துள்ளார். (ங-422-23)

# சில்வெஸ்ரார் சம்பியன்

யாழ்ப்பாணம், டிசெ.4

வலி.மேற்கு பிரதேச சபை, உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு பிரதேச சபைக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் அராலி சில்வெஸ்ரார் விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.


நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அராலி மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றஇந்த இறுதியாட்டத்தில் அராலி பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சில்வெஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் சில்வெஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸி. தொடரின் பின்னர்

# அணித் தலைமை மீள் பரிசீலனை– மஹேல




ஆஸ்திரேலிய, இலங்கை அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடரின் பின்னர் இலங்கை அணியின் டெஸ்ட், ஒரு நாள் சர்வதேசப் போட்டியின் அணித்தலைமை குறித்துப் பரிசீலிக்கப் போவதாக இலங்கை அணியின் டெஸ்ட், ஒரு நாள் சர்வதேசப் போட்டியின் அணித்தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் தலைவராகச் செயற்பட்ட திலகரட்ண டில்ஷான் அந்தப் பதவியிலிருந்து விலகிக் கொண்ட பின்னர் இலங்கை அணியின் தலைவராக மீண்டும் பதவியேற்ற மஹேல ஜெயவர்தன, ஒரு வருடகாலத்திற்கு இலங்கை அணித்தலைவராகச் செயற்படுவார் என்று அறிவித்திருந்தார்.

இலங்கையில் நடந்து முடிந்த சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' தொடரின் பின்னர் இலங்கையின் 'ரி-20' சர்வதேசப் போட்டியின் அணித் தலைமையிலிருந்து விலகியிருந்தார்.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள மஹேல ஜெயவர்தன, இடம்பெறவுள்ள ஆஸ்திரேலியத் தொடரின் பின்னர் தனது அணித்தலைமை குறித்துப் பரிசீலனை செய்யவுள்ளதாகத் தெரிவித்தார்.

அணித்தலைமைப் பொறுப்பை பதவியேற்று எதிர்வரும் ஆஸ்திரேலியத் தொடரோடு ஒரு வருடகாலம் நிறைவடைவதாகத் தெரிவித்த மஹேல ஜெயவர்தன, அதன் பின்னர் தனது நிலை குறித்து சிந்திக்க வேண்டிய தேவையுள்ளதாகத் தெரிவித்தார்.

இலங்கை அணியின் டெஸ்ட், ஒருநாள் சர்வதேசப் போட்டிக்குரிய உபதலைவரும், இலங்கையின் 'ரி-20' அணியின் தலைவராக மஹேலவின் பதவி விலகலை அடுத்து நியமிக்கப்பட்டவருமான அன்ஜலோ மத்தியூஸ் இலங்கை அணியின் புதிய தலைவராக நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (5)

# இலங்கை அணி தயாரில்லை




ஆஸ்ரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இலங்கை அணி 3 டெஸ்ட் போட்டி, 5 ஒரு நாள் சர்வதேசப் போட்டி, 2 'ரி-20' சர்வதேசப் போட்டியில் பங்குபற்றவுள்ள நிலையில் அந்தத் தொடருக்காக இலங்கை அணி தயாராக காணப்படவில்லை என்று இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர் கிரஹம் போர்ட் தெரிவித்துள்ளார்.நியூசிலாந்து அணிக்கெதிரான 2 டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் இலங்கை அணி சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தும் என்று எதிர்பார்த்திருந்ததாகவும் அந்தத் தொடர் ஆஸ்திரேலியத் தொடருக்குச் சிறப்பான பயிற்சியாக அமையும் என்று எதிர்பார்த்திருந்ததாக தெரிவித்த கிரஹம் போர்ட் குறிப்பாக நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சு சிறப்பான நிலையில் காணப்படுவதால் அந்தத் தொடர் பற்றிய எதிர்பார்ப்புக்கள் காணப்பட்டதாகத் தெரிவித்தார்.

நியூசிலாந்திற்கெதிரான தொடரில் இலங்கை அணி சிறப்பாகச் செயற்பட்டு வேகப்பந்து வீச்சிற்கெதிரான தனது திறமையை வெளிப்படுத்த வேண்டுமென எதிர்பார்த்ததாக தெரிவித்த கிரஹம் போர்ட், ஆனால் அந்தத் தொடரில் இலங்கை அணி சிறப்பாக செயற்படாத நிலையில் வேகப்பந்து வீச்சுக்கெதிரான இலங்கையின் துடுப்பாட்டம் குறித்த சந்தேகங்கள் நிலவுவதாக அவர் தெரிவித்தார்.

சில துடுப்பாட்ட வீரர்கள் ஓரளவு சிறப்பான 'போர்மிற்காக' அறிகுறிகளை வெளிப்படுத்திய போதிலும் இலங்கை அணி போதுமான திறமையை வெளிப்படுத்தி இருக்கவில்லை என்று தெரிவித்த கிரஹம் போர்ட், சிறப்பான திறமை வெளிப்பாடொன்றிற்காக காத்திருந்ததாக தெரிவித்தார்.இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த நியூசிலாந்து அணி முதலாவது ஆட்டத்தில் தோல்வியடைந்திருந்த போதிலும், இரண்டாவது ஆட்டத்தில் இலங்கை அணியை மிகவும் இலகுவாக வெற்றிகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# ஆடுகளம் பற்றி கவலையில்லை



இந்தியா சென்றுள்ள இங்கிலாந்து அணி நான்கு போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்று வருகிறது.

அஹமதாபாத் டெஸ்டில் வெற்றி பெற்ற இந்திய அணி மும்பை டெஸ்டில் 10 இலக்குகள் வித்தியாசத்தில் மோசமான தோல்வியை சந்தித்தது. இதனால் தொடர் 1-1 என்று சமநிலை வகிக்கிறது.

மூன்றாவது டெஸ்ட் கொல்கத்தாவில் நாளை தொடங்குகிறது. இதில் சாதிக்க இங்கிலாந்து வீரர்கள் கொல்கத்தா, ஈடன் கார்டன் மைதானத்தில் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இது குறித்து இங்கிலாந்து வீரர் பேர்ஸ்டோவ் கூறுகையில், மும்பை டெஸ்டில் கிடைத்த வெற்றி மூலம் எங்கள் அணி வீரர்கள் அனைவரும் கூடுதல் நம்பிக்கை பெற்றுள்ளோம்.

மீதமுள்ள இரண்டு டெஸ்டிலும் முழுத்திறமையை வெளிப்படுத்தி தொடரை கைப்பற்ற முயற்சிப்போம். முதலிரண்டு டெஸ்ட் ஆட்டத்தின் போது மேற்கொண்ட பயிற்சி முறையை கொல்கத்தா டெஸ்ட் ஆட்டத்துக்கும் பின்பற்றி வருகிறோம்.

மும்பை டெஸ்ட் ஆட்டத்துக்கு பின்பு கிடைத்த ஓய்வு வீரர்கள் அனைவருக்கும் மனதளவில் நம்பிக்கை அளித்துள்ளது. இதனால் உடல் ரீதியாகவும் தயாராக உள்ளனர்.

மும்பை டெஸ்டில் கெவின் பீட்டர்சன், அணித்தலைவர் அலெஸ்டயர் குக் துடுப்பாட்டம் அருமையாக இருந்தது. இவர்களது அபார ஆட்டம் கொல்கத்தா டெஸ்டிலும் தொடரும் என்று நம்புகிறேன்.

முதல் டெஸ்டில் எங்களது துடுப்பாட்டம் மோசமாக இருந்தது. ஆனால் மும்பை டெஸ்டில் துடுப்பாட்ட வீரர்கள் எழுச்சி கண்டனர். இதேபோல பந்துவீச்சாளர்களும் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளனர்.

குறிப்பாக சுழற்பந்துவீச்சாளர்கள் இந்திய மைதானத்திற்கேற்ப தங்களை தயார் படுத்தி உள்ளனர். கொல்கத்தா டெஸ்டில் ஆடுகளம் குறித்து கவலை இல்லை என்றும் ஆடுகளத்தின் தன்மைக்கேற்ப ஆட்டத்தை மாற்றிக் கொள்ள முயற்சிப்போம் எனவும் கூறியுள்ளனர். (5)

# 'பார்டிக்கு' பாகிஸ்தான் தடை

இந்தியப் பயணத்தின் போது பாகிஸ்தான் வீரர்கள் தனியார் பார்ட்டிகளில் (விருந்துகளில்) பங்கேற்க, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை (பி.சி.பி.) தடை விதித்துள்ளது.

கடந்த 2008 இல் மும்பையில் நடந்த பயங்கரவாத தாக்குதலுக்குப் பின்பு இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடர் நடக்கவில்லை. பல்வேறு முயற்சிகளுக்கு பின்பு இந்திய மத்திய அரசு ஒருவழியாக அனுமதி அளிக்க பாகிஸ்தான் அணி இந்த மாதம் இந்தியா செல்கிறது.

தற்போது நடைபெற்று வரும் இங்கிலாந்து தொடருக்கு இடையில் கிடைக்கும் ஓய்வு நாள்களில் (டிசெம்பர் 23 - ஜனவரி 6) இரு அணிகளும் மோத உள்ளன.

ஆட்டம் நடைபெற உள்ள மைதானங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகளை கண்காணிக்க பி.சி.பி. செய்தி தொடர்பாளர் நதீம் சர்வார், பாதுகாப்பு மற்றும் பொலிஸ்துறைத் தலைவர் ஈஷான் சாதிக் ஆகியோர் அடங்கிய குழு இந்தியா சென்றுள்ளது.

இது குறித்து நதீம் சர்வார் கூறுகையில், இந்தியப் பயணத்தின் போது பாகிஸ்தான் வீரர் தனியார் விருந்துகளில் பங்கேற்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதேபோல வீரர்கள் தங்கவுள்ள விடுதிகளுக்கும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளது. வீரர்களை பார்க்க, அவர்களது உறவினர், நண்பர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நடந்த 'ரி-20' உலகக் கிண்ண தொடரின் போது பின்பற்றப்பட்ட அனைத்து பாதுகாப்பு விதிமுறைகளையும் பாகிஸ்தான் வீரர்கள் கடைபிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது எனவும் கூறியுள்ளார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸியை அடக்கியது தென்னாபிரிக்கா





ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் 3ஆவது போட்டியில் தென்னாபிரிக்க அணி 309 ஓட்டங்களால் இலகுவாக வெற்றிபெற்றுள்ளது. இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரை தென்னாபிரிக்க அணி 1-0 என்ற கணக்கில் வெற்றி கொண்டுள்ளது.

பேர்த் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதல் இன்னிங்ஸில் அந்த அணி டு பிளெஸிஸின் 78 ஓட்டங்களின் துணையோடு 225 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக லயன் 3 இலக்குகளையும், மிச்சல் ஸ்ரார்க், மிச்சல் ஜோன்சன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

எனினும் தென்னாபிரிக்காவின் வேகத்தில் ஆஸ்திரேலிய அணி தனது முதல் இன்னிங்ஸில் 163 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது.

ஆஸ்திரேலிய அணி சார்பாக மத்தியூ வேட் தனித்து நின்று போராடி 68 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் டேல் ஸ்ரெய்ன் 4 இலக்குகளையும், றொபின் பீற்றர்சன் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இதன் பின்னர் தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஆடிய தென்னாபிரிக்க அணி ஹசிம் அம்லாவின் 196 ஓட்டங்கள், ஏ.பி.டி வில்லியர்ஸின் 169 ஓட்டங்கள், கிரேம் ஸ்மித்தின் 84 ஓட்டங்கள் என்பவற்றின் துணையோடு 569 ஓட்டங்களைக் குவித்தது.

632ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப் பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 322 ஓட்டங்களுக்குச்சகல இலக்குகளையும் இழந்து 309 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. நாயகனாக ஹசிம் அம்லாவும், தொடர் நாயகனாக மைக் கல் கிளார்க்கும் தெரிவாகினர். (ந)


## வேலையாள்கள் தேவை

வீதி திருத்த வேலைகள் செய்வதற்கு வேலையாள்கள் தேவை. குறிப்பாக பலாலி, காங்கேசன்துறை, புத்தூர், மீசாலை போன்ற இடங்களில் வீதி திருத்தம் செய்ய இருப்பதனால் அந்தந்த இடங்களில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:திட்ட முகாமையாளர்

S.Thayaparan -0777711449



## அகரம்
கல்வி நிலையம்

புதிய கல்வியாண்டு 2013

தரம் 06 தொடக்கம் 11 வரையான வகுப்புக்கள் அனைத்தும்

மல்லாகத்தில் — மாலை 4.30 மணிக்கும் (தமிழ்மொழிமூல வகுப்புக்கள்)

கொக்குவிலில் — மாலை 3.30 மணிக்கும் (தமிழ், ஆங்கிலமொழிமூல வகுப்புக்கள்)

ஆரம்பமாகின்றன.

அனுமதிக்கு முந்துங்கள்

04.12.2012 மாலை 3.00 மணியிலிருந்து அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

"அகரம் குணதிசையின் ஒளிக்கீற்று"



## வெற்றித்தேர்வு ஆரம்பக் கல்விப் பிரிவு

### நல்லூர் சயன்ஸ் அக்கடமியில்

அனேக பெற்றோர்களின் வேண்டுகோளிற்கிணங்க
கடந்த தசாப்த காலமாக நாடளாவிய ரீதியில்
தொடர் சாதனை படைக்கும்
வெற்றித்தேர்வு வெளியீட்டகத்தின்
கல்வியாண்டு 2013 இல் புதியதோர் ஆரம்பம்
தரம் 01 முதல் தரம் 05 வரையான மாணவர்களுக்கான
வெற்றித்தேர்வு ஆரம்பக் கல்விப் பிரிவு
நாடளாவிய ரீதியில் புகழ்பெற்ற வெற்றித்தேர்வு ஆசிரியர்களுடன்
யாழ் நகரின் முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டலில்
தரம் 04, தரம் 05 மாணவர்களுக்கு
வாராந்தம் வெற்றித்தேர்வுப் பரீட்சைகளுடன்
வாரத்தில் மூன்று தினங்கள்

விசேட புலமைப்பரிசில் வகுப்புக்கள்

அனுமதிகள் வழங்கப்படுகின்றன. இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்!
மேலதிக விபரங்களுக்கு : T.P: 0775388471, 0773126807



## செங்கல் விற்பனைக்கு

தரமான செங்கற்கள் யாழ்., வன்னி போன்ற இடங்களுக்கு விநியோகம் செய்யப்படும்.

தொடர்புகளுக்கு : பிரணவன் என்டர் பிறைசஸ்
இல. 365, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(சங்கிலியன் சிலைக்கு முன்பாக)
T.P-0773818799
(24341)(7.6)



## கல்வியாண்டு - 2013

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
05.12.2012 புதன்கிழமை
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

சயன்ஸ் அக்கடமி
நல்லூர் அரியாலை



## SUBRA
2013 - புலமைப் பரிசில்

சித்தன்கேணி || கைலைநாதன்
ஆரம்பம்05.12.2012 - 4.30 மணி (புதன்)
வாரம் தோறும்:- புலமைச்சுடர்
வெற்றித் தேர்வு பரீட்சைகள்
ஒரு பிரிவில் 30 மாணவர்கள் மட்டுமே.
வட்டுக்கோட்டை || பிரதீபன்

SUBRA கல்வி நிறுவனம்
சித்தன்கேணி கிளை: வட்டுக்கோட்டை
ஆண்டு 01 முதல் O/L வரையான
வகுப்புகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

ENGLISH MEDIUM CLASSES FROM Grade 06 to 11

ஆரம்பம்: டிசெம்பர் 05 மாலை 4.30 மணி
(அமிர்த சித்த யோகத்தில்)
புதிய கல்வியாண்டு 2013
வலி. மேற்கில் தனித்துவம் பெற்ற ஒரே நிறுவனம்
SUBRA மட்டுமே.
(C/3165)(3.6)


## மரண அறிவித்தல்கள்

### கந்தசாமி திரிபுண்ணிய ஈஸ்வரி அம்மா
(ராசாக்கா)



யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், ஆலடிவீதி, தோணிக்கல் வவுனியாவை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி திரிபுண்ணிய ஈஸ்வரி அம்மா நேற்றுமுன்தினம் (02.12.2012) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.12.2012) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்துமயனத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.133 B, ஆலடி வீதி,
தோணிக்கல், வவுனியா. (24343)(3.14)

தகவல்:
பிள்ளைகள்.

### திருமதி மகாலட்சுமி குகதாசன்



புன்னாலைக் கட்டுவன் தெற்கு, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகாலட்சுமி குகதாசன் நேற்று (03.12.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குகதாசனின் (ஒய்வு பெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற இளையதம்பி மற்றும் தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா-கதிராசி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மகாலிங்கத்தின்(மகா) அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விலங்கன் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யருசன் கிறசர்,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### குமாரவேலு வேலுப்பிள்ளை



காரைநகர் பாலாவோடை களபூமியைப் பிறப்பிடமாகவும், திருநெல் வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு வேலுப்பிள்ளை நேற்று (03.12.2012) திங்கட்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரவேலு - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமநாதன் - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சண்முகம், அன்னம்மா ஆகியோரின் சகோதரனும், புவனேஸ்வரி, காலஞ்சென்ற ஆறுமுகம் ஆகியோரின் மைத்துனரும், தனபாலசுந்தரம் மோகனாம்பிகை, லோகநாதன், பேரின்பநாயகம், குமாரலிங்கம், இராசேஸ்வரி, சண்முகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாதசுந்தரம், சரோஜினிதேவி, தவமலர், சிவசோதி, சிவஅம்பிகை, இராசலட்சுமி, தவநிதி ஆகியோரின் அன்பு மாமனும், தவராசா, தினேஸ்குமார், யோகேஸ்வரன், அனுசா, கோகுலன், செந்தில்குமரன், தவக்குமரன், தீபிகா, சிவசங்கர், கஜமுகன், மீனரஞ்சினி, திருக்குமரன், திருச்செந்தூரன், பிரணவன், ரஞ்சினி, நேசினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.527, பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (26359)(3.14)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
0773903255, 0213006733

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.